ௐ

# சைவநீதி

## SAIVANEETHI

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM



ஈழத்துத் திருத்தலம்
தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்



கனடா இந்து மாமன்றம்
**CANADA HINDU MAAMANTRAM**

பொங்கல் விழா மலர்-2009



உங்களது எதிர்காலம்
ஒரு தொலை
நோக்கில்........
திட்டமிட்ட வாழ்வின் உயர்வான
வெற்றிக்கு ஏணிப்படிகளாய் நாம்...
HOMELIFE
HIGHER STANDARDS
SUCCESS IS NOT AN ACCIDENT
IT'S YOUR CHOICE...
Thinking of a New Career...
Free Real Estate Classes
With Over 11 Years of Experience and Expertise...
Excellent Training, Over 30 Agents, Most of Them with
Excellence Awards...Who wants to be next?
Classes Starting Every Sunday
Real Estate Phase 1 and Phase 2
Selva Vettyvel
Broker of Record
Home Life /Future Realty Inc.,
Brokerage*
Cell: 416-568-4301
Bus: 416-264-0101
Fax: 905-201-9229
E-Mail: selvahomelife@gmail.com
205- 7 Eastvale Drive, Markham ON L3S 4N8
Creaa Design

## வணக்கம். வருக! இதுவே நுழைவாயில்! சென்று பொருள் கொணர்க!

## பொருட் பதிவேடு


| இல. | பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பொருளடக்கம் | ...... | 1 |
| 2. | பஞ்சபுராணம் | ...... | 2 |
| 3. | தலைவர் செய்தி | திரு.தம்பையா சிறிபதி | 3 |
| 4. | செயலாளர் செய்தி | திரு.வே.நந்தீஸ்வரர் | 4 |
| 5. | ஆசிரியர் குரல் | திருமதி.மனோன்மணி தனபாலசிங்கம் | 5 |
| 6. | நிகரில் துர்க்கா துரந்தரி நிமலன் தாழ்களில் நிரந்தரி | திரு.கனக மனோகரன் | 6 |
| 7. | Durga Duranthari Thangammah Appacutty | Mr.R.Kanthiah | 7-8 |
| 8. | மாந்தர்க்கு இன்றியமையாத உள்ளத் தூய்மையும் தூய நல்வாழ்வும் | திருமதி.இராஜேஸ்வரி பரமேஸ்வரன் | 9-12 |
| 9. | Saiva Siddhanda | Dr.Shan A Shanmugavadivel | 13-14 |
| 10. | தாய்மையைப் போற்றும் இந்து சமயம் | திரு.த.மனோகரன் | 15-16 |
| 11. | The Story of Periyapuranam | Mr.Kumar Puithavel | 17-20 |
| 12. | சொல்லற்கரியானைச் சொல்லும் திருக்கோவில்கள் மூன்று | திருமதி.சகிதேவி கந்தையா | 21-22 |
| 13. | தெவிட்டாத இன்பம் | திருமதி.மலர் சிதம்பரப்பிள்ளை | 23 |
| 14. | ஈகை திறன் | குப்பிழான் தங்கம் | 24 |
| 15. | தியானம் | திருமதி.ஜோதி செல்வராஜா | 25-26 |
| 16. | தேவாரப் பண்ணிசை மரபு | திருமதி.கௌசல்யா சுப்பிரமணியன் | 27-29 |
| 17. | மாணவர் பகுதி | (சாயிசங்கர் சத்தியகுமார் சாகித்தியா சிறிரஞ்சன் சயந்தன் சத்தியகுமார் ஜனகன் சிறிரஞ்சன்) | 30-31 |
| 18. | தொன்மைச் சமயமே சைவம் | திரு.த.சிவபாலு | 32-33 |
| 19. | Sri Nadaraja Moortham and Modern Science | Prof. T.Balasubramanian | 34-38 |
| 20. | பெரியபுராணம் | திரு.எஸ்சிறிஸ்கந்தராஜா | 39 |
| 21. | சபாரத்தினம் சுவாமிகள் | திருமதி.சாந்தா குகதாசன் | 40-41 |
| 22. | பண்ணோடு இசைந்த இறையின்ப வாழ்வு | திருமதி.க.சொர்ணலிங்கம் | 42-43 |
| 23. | சைவசமயத்தில் அன்னை வழிபாடு | திரு.பாலமுருகன் | 44-45 |
| 24. | இந்துமதத்தில் கன்மம் | திரு.கி.கிருபானந்தா | 46-48 |
| 25. | இலங்கையில் கிராமிய தெய்வ வழிபாடு | விவேகானந்தா ஜனகா | 49-50 |
| 26. | சைவத்தின் பெருமை | நல்லூர் சிவமுருகன் என்.தமிழ்மகன் | 51-53 |
| 27. | முருக பக்தி | டாக்டர்.அரங்க இராமலிங்கம் | 54-57 |
| 28. | மேற்கு நாடுகளில் சைவ கலாசாரம் | கலைவாணி இராமநாதன் | 58-61 |
| 29. | நாம் சைவர்கள் என்று கூறி பெருமிதம் கொள்வோம் | திரு.வை.கேதாரநாதன் | 62-65 |
| 30. | உடல், உள நோய்களை அகற்றும் ஆலய வழிபாடு | திரு.கா.கணேசதாசன் | 66-67 |

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

* திருமணம்
* திருமணப் பதிவு
* கடைதிறப்பு வைபவம்
* புண்யாக வாசனம்
* பூப்புனித நீராட்டுவிழா
* பூமாலை
* ஆண்டாள் மாலை
* சடைநாகம்
* தலை நகை முழுவதும்



* முத்து மணவறை
* தலைப்பாகை
* பந்தல் அலங்காரம்
* கல்யாண பூசைப் பொருட்கள்
* முத்துச் சப்பரம்
* ஆலயத் திருவிழா
* ஆலய வைபவங்கள்

ஆகிய அனைத்துக்கும் எப்போதும் எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள் - **Tel: 416 266 3333**

**628 E Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9**

ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய
தொலைபேசி இலக்கம் 416 291 8500

உ

# பஞ்சபுராணம்

## தேவாரம்

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க் கோரமுத மானாய்
மறைநான் குமானாயா றங்கமானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளேயுன்னை
என்னானா யென்னானா யென்னினல்லா
லேழையே னென்சொல்லி யேத்துகேனே.

## திருவாசகம்

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

## திருவிசைப்பா

கலைகடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

## திருப்பல்லாண்டு

எந்தையெந்தாய் சுற்றுமுற்று மெமக்கமுதா மெம்பிரானென் றென்றுமே
சிந்தைசெய் யுஞ்சிவன் சீரடியாரடி நாயன் செப்புறை
அந்தமிலா தந்தச் சேந்தனெனைப் புகுந்தாண்டு கொண்டே ருயிர்மேற்
பந்தம்பிரியப் பரிந்தவனே யென்று பல்லாண்டு கூறுதுமே.

## திருத்தொண்டர் புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோன்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளியென்னை வழித்தொண்டு கொண்டாய்போற்றி
எல்லையுள் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய்போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவை பாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# அனுபவம் ஆற்றல் மிக்க சட்டத்தரணி

## தம்பையா சிறிபதி

**கனடிய வழக்கறிஞர்,**
**பிரசித்த நொத்தாரிசு**

## Thampiah Siripathy

*Barrister - Solicitor & Notary Public*

* குடிவரவுச் சட்டம், அகதி மனுக்கள், ஸ்பொன்சர், மேன்முறையீடுகள்
* காணிகள், வீடுகள், வாங்குதல், விற்றல், ஈடுகள் பதிதல்
* வியாபார ஸ்தாபனங்கள் பதிவுசெய்தல், வாங்குதல்
* குடும்பச் சட்டம் சம்பந்தமான விடயங்கள், விவாகரத்து, பராமரிப்பு, பாதுகாவல்
* குற்றவியல் சட்டம் சம்பந்தமான விடயங்கள்
* தத்துவப் பத்திரங்கள், இறுதி விருப்பாவணங்கள், சத்தியப் பத்திரங்கள் தயாரித்தல்

**Tel: (416) 759 - 4500**

**Fax: (416) 759 - 4510**

(கென்னடி சப்வேக்கு அருகாமையில்
சங்கர் அன் கோ கட்டிட மேல் மாடியில்)

2425, Eglinton Ave. E., Suite # 211
Toronto, Ontario. M1K 5G8
(Eglinton & Kennedy)

# தலைவர் செய்தி

## கேள்விக்கென்ன பதில்?

அண்மையில், தைப்பொங்கல் தினம்தான் தமிழர்களின் புதுவருடப் பிறப்பு தினம் எனவும், அதையே தமிழர்களாகிய நாம் - குறிப்பாக இந்துக்கள் உட்பட - எமது புதுவருடப் பிறப்பாக கொண்டாட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், எதிர்வரும் தமிழ்ச் சித்திரை மாத முதல் தேதியே தமிழ் புத்தாண்டு தினமாகக் கொண்டாடப்படவேண்டும்; ஏனெனில், அது சாத்திர முறைப்படி கணிக்கப்பட்டது எனவும், இந்து சமய அனுட்டான விதிகட்கு உட்பட்டு அமைந்ததும் ஆனதால் இந்துக்களின் புதுவருடம் பிறப்பது தமிழ் சித்திரை மாதத்தின் முதல் நாளே என இந்துமத அறிஞர்கள் சொல்கிறார்கள்.

அதேவேளை, ஆங்கிலத் தேதியாகிய ஜனவரி 1ம் திகதியை தமிழ் கிறித்தவ மக்கள் தம் புது வருடப் பிறப்பாக கொண்டாடுகின்றார்கள். இப்போது இந்து ஆலயங்களிலும் பல ஆயிரக்கணக்கான இந்துக்கள் திரள் திரளாக சென்று புதுவருட தினத்தை டிசம்பர் 31ம் திகதி இறந்து, ஜனவரி 1ம் திகதி பிறக்கும் நள்ளிரவு தொடக்கம் மறுநாள் வரை இந்துக் கடவுள்களை பக்திபூர்பவமாக வணங்குகிறார்கள்.

இப்போது கேள்வி இதுதான். அதாவது இந்துக்களின் புதுவருட தினம் பிறக்கும் நாள் எது? தமிழ் மாதம் தை 1ம் திகதியா? தமிழ் மாதம் சித்திரை 1ம் திகதியா அல்லது ஆங்கில மாதம் தை (ஜனவரி) 1ம் திகதியா?

சைவத் தமிழ் சிறார்கள், பெற்றோர்களாகிய எங்களைப் பார்த்து புதுவருட தினம் எப்போது பிறக்கின்றது என்ற தோரணையில் மேற்கண்ட கேள்விகளைக் கேட்கிறார்கள்.

ஏற்கனவே குழம்பி நிற்கும் தமிழ்ச் சிறார்கள் மேலும் குழம்பாமல், குழப்புபவர்கள் இதற்கொரு பதிலை குழப்பம் இல்லாமல் சொல்வார்களா?

ஆனால், எது எப்படி இருப்பினும் அனைத்து தமிழ் மக்களுக்கும் கனடா இந்து மாமன்றத்தின் இனிய “சர்க்கரைப் பொங்கல்” வாழ்த்துக்கள்.

சுபம்.

தம்பையா சிறிபதி
கனடா இந்து மாமன்றம்

# Nanthee & Sons

## DESIGN & INSPECTION

**Nanthee Veluppillai** P.Eng., C.B.C.O
(Home Inspector)



Inspection within 48 hrs, & 7 days a week

Residential, Commercial, Industrial Inspection
Design Services for Addition & Alterration, Basement

41 Longbow Square, Scarborough, Ont. M1W 2W6
Tel: 416- 496 9595
E-mail : Nanthee@hotmail.com

# செயலாளர் செய்தி

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ், சைவப் பெருமக்கள் தாம் தொன்றுதொட்டு பின்பற்றி வரும் சைவ மதத்தையும் தமிழ் மொழியையும் இளம் சமுதாயத்தினர் மத்தியில் புத்துணர்வுடன் கொண்டுவருவதற்காக, காலத்துக்குக் காலம் மாணவர்களிடையே தமிழ், சமயப் போட்டிகளை நடாத்துவதுடன் பெரு விழாக்களையும் கொண்டாடிவருகிறார்கள். இந்த வகையில் கனடா இந்து மாமன்றம் "சர்க்கரைப் பொங்கல்" விழாவை இனிய சுவையுடன் இன்று உங்களுக்குத் தருகிறது.

இங்குள்ள இளம் சமுதாயத்தினர் எமது பாரம்பரியத்துடன் வாழ, ஆண்டுதோறும் சைவ சமயப் போட்டிகள், பேச்சு, பண்ணிசைப் போட்டிகள் என்பவற்றை நாம் நடாத்தி வருகிறோம். இந்த ஆண்டு ஜனவரி மாதம் 3ம் நாள் நடைபெற்ற போட்டிகளில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். இன்றைய தினம் நாம் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பங்குகொண்ட மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கிறோம்.

இன்றைய விழாவில் நாம் உலகெங்கும் சைவமும் தமிழும் நீதியும் தழைத்தோங்க "சைவநீதி" எனும் மலரை வெளியிடுகிறோம். இம்மலரை கடந்த பதினைந்து ஆண்டுகளாக வெளியிட்டுவருகிறோம். இம்மலரில் பல சைவப் பெரியார்களால் தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட பல கட்டுரைகளை வெளியிட்டு வருகிறோம். இக்கட்டுரைகளை வீடுகளில் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வாசித்து, அவற்றிலுள்ள விடயங்களை சொல்லிக் கொடுக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

பெற்றோர்களாகிய நீங்கள் செய்யும் இறைபணி இந்த நாட்டில் எமது கலை, கலாச்சாரம் தழைத்தோங்க வழிசெய்யும் என நம்புகிறோம்.


இவ்வினிய பொங்கல் விழாவை சிறப்புடன் நடாத்த உதவிய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறோம்.

உங்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

செயலாளர்
வே.நந்தீஸ்வரர்
கனடா இந்து மாமன்றம்.

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA TEMPLE OF MISSISSAUGA





**தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம் வாரத்தில் ஏழு நாட்களும்**

**காலை 9.00 மணிமுதல் பகல் 1.00 மணிவரை**

**மாலை 6.00 மணிமுதல் - 9.00 மணி வரை**

**<u>பூஜை நேரங்கள்</u>**

**காலை : 10.00 மணி**

**பகல் : 12.00 மணி**

**மாலை : 7.00 மணி**

**விசேட தினங்களில் பூஜை நேரம் மாற்றி அமைக்கப்படும்.**

**ஆலயத்தில் திருமணங்கள், கணபதி ஹோமம், நவக்கிரக சாந்தி, சர்ப்ப சாந்தி, பிதிர் தர்ப்பணம் என்பவற்றை நிறைவேற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.**

**தொடர்புகளுக்கு:**

**ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர், சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன் குருக்கள்)**

**(கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு, புங்குடுதீவு –10ம் வட்டாரம்)**

**(ஆலயப் பிரதம குரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர், அறங்காவலர் சபை)**

**7220 Tranmere Drive, Mississauga, On., L5S 1L6**

Tel: 905 405 0011/ 905 501 0011

ganeshadurga@hotmail.com

# மலராசிரியர் அறிக்கை

சைவநீதி சஞ்சிகை வாசக அபிமானிகளே! ஆதரவாளர்களே!
எல்லோருக்கும் அன்பு கனிந்த வணக்கத்தையும்,
புத்தாண்டு வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்பு, அறம், பண்பு பொங்க பாரினில் மாந்தர் பாங்காய் வாழ தைத்திங்களில் மலரும் தைப்பொங்கல் விழாவை, பனிமூடிய கனடாவில் பண்பட்ட தமிழ் நெஞ்சங்களின் திண்மையாலும், திறமையாலும் சைவ சமய வளர்ச்சிக்காகவும், தமிழ்மொழி நிலைபேற்றிற்காகவும் எமது பண்பாடு, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடும் இவ்விழாவைக் கொண்டாடி மகிழ்வோம். இதில், பல பூக்களில் இருந்து பெறப்பட்ட தேன் நாவுக்குச் சுவையாகவும் நோய்க்கு மருந்தாகவும் இருப்பதுபோல் பல அறிஞர்களின் ஆன்மீகக் கருத்துக்களையும் அறிவுரைகளையும் சுமந்து நிற்கும் சைவநீதியும் மலர்கின்றது.

சமயம், மொழி, கலாச்சாரப் பணிகளை கடவுட் பணியென உணர்ந்து ஒவ்வொருவரும் செயற்படுதல் வேண்டும். இது மக்கள் வாழ்வில் திருப்தியும், மனநிறைவும் உண்டாக்கும். பிரதிபலன் எதுவும் நோக்காது ஆற்றும் தொண்டிற்கு இறைவனுடைய ஆசியுண்டு. சேவைசெய்யக் கிடைத்த பிறவியைப் பாராட்டுகிறார் சுவாமி விவேகானந்தர். “மோட்சத்திற்குள்ளே போய் வாளா முடங்கிக் கிடப்பதிலும் பார்க்க மேலும் மேலும் பிறவிகளையெடுத்து மக்களுக்காகச் சேவை செய்வதே எனது குறிக்கோள்” என்பது அவர் கூற்று. சேவைகள் எதுவாயினும் அது அறத்தின் வழிப்பட வேண்டும். அறத்திற்குப் புறம்பானவை வாழ்க்கைக்கும் புறம்பானவை.

இடம்பெயர்ந்து வாழும் இன்றைய இளம் சிறார்களே நாளைய மனிதர்கள். இவர்களுக்கு ஒழுங்கான, நீதிநெறி வழுவாத சைவப் பண்பு நிறைந்த வாழ்க்கைப் பாதையை வழியமைத்துக் கொடுத்தலே இந்துமாமன்றத்தின் பணி. அவர்களின் கல்வியோடு, இறையுணர்வையும் இறைவழிபாட்டின் இன்றியமையாப் பண்பையும் வளர்ப்பதற்காகத்தான் சமயத்தோடு தொடர்புடைய போட்டிகள் இடம்பெறுகின்றன.

நாம் சமய நெறிகளை மறந்து, இறைவழிபாடு குன்றி, மனம்போன போக்கில் வாழ்வதுதான் எமது வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்கெல்லாம் காரணம். இறைவனின் பாதத்தை அடைக்கலமாகப் பற்றிக்கொள்வதன் மூலம் மனச்சாந்தி பெறமுடியும். தினமும் ஒருசில மணிநேரமாவது கடவுளை நினைத்து வழிபாடு செய்யவேண்டும். எவர்மீதும் கோபமோ பொறாமையோ கொள்ளாது ஒருதாய் மக்களாகக் கருதி சகோதர பாசத்துடன் பழகுதல் நன்று. கல்வியிலும் சமயத்திலும் பூரணத்துவம் பெற்றால் இளம் சமுதாயம் பூரண மனிதனாக வாழமுடியும்.

உலகெங்கும் சைவநீதி பரவ எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போம் வாரீர்! சைவநீதி பொலிவுபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி மனோன்மணி தனபாலசிங்கம்
மலர் ஆசிரியர்

# LAW OFFICE

## T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும்
தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட
நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

- **REAL ESTATE - Purchase, Sale, Mortgage**
  காணி, நிலம், வீடு வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல்
- **FAMILY LAW - Divorce, Seperation**
  குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு
- **BUSINESS - Purchase, Sale, Incorporation**
  வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை
- **IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal**
  குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன்முறையீடு
- **POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will**
  தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்

## தி. ஜெகதீசன்

Barrister, Solicitor and Notary Public (ONTARIO)

**☎: Off: 416- 266 6154 Res: 416- 449 0358 Fax: 416- 266 4677**
**2620 Eglinton Ave. E., # 201 Scarborough, On., M1K 2S3**

# நிகரில் துர்க்கா துரந்தரி! நிமலன் தாள்களில் நிரந்தரி!!

- கனக மனோகரன் (துணைத் தலைவர், கனடா இந்து மாமன்றம்.) -

தவப்பணி தமிழ்ப்பணி தகு ஆசிரியப் பணி
அறப்பணிக் கர்ப்பணி அருங்குண நன்மணி
சிவப்பணி தினம்புரி செஞ்சொற் செம்மணி
பரன்துணை சிரம்பணி பார்புகழ் சிரோன்மணி

வையகம் வாழவே வாழ்ந்த நல் தூயவர்
வைகலும் தெய்வ நினைவினில் தோய்ந்தவர்
தையலர் தம்மில் எவர்இவர் நேரினர்?
தைமகள் போல்வழி காட்டுநற் தாயிவர்!

கடல்கடந் தும்தமிழ் சைவம் வளர்த்தவர்
கடகட வெனஅருள் அமுதம் உகுத்தவர்
திடமனத் தோடுதாய் மண்ணில் நிலைத்தவர்
இடருறு வார்நோய் பிணிகள் வதைத்தவர்

மணவழி தேர்ந்தநம் மாதரில் மிக்கவர்
மகவுகள் சிலர்பெறு பேறுகள் பெற்றனர்
மணவினை விட்டுப் பொதுப்பணி தொட்டிவர்
மக்களாய் நமைப்பெறும் பீடு உற்றனர்

தங்கம்மா இவரில்தம் தாயரைக் கண்டு
எங்கம்மா என்ற அநாதைச் சேயரும் உண்டு
தங்கம்மா எனும்இவர் தாய்வய தினரும்
நங்கம்மா எனஅழை நற்குணக் குன்று

துர்க்கை அம்மனை ஒரு துர்க்குணள் என்று
தொழுதிட மறுத்தவர் எமில் சிலர்உண்டு
துர்க்கா துரந்தரி இவர் தூபணி யால் இன்று
துர்க்கையை ஈழவர் தொழுகிறார் நன்று!

சரணியன் தாய் மனையை தாயிவர் புதுக்கினார்
சரணரின் புகல் இடமாய் அதை எழுப்பினார்
தரணியில் தன் பெயர் நிலைபெற செதுக்கினார்
இறையனும் பாதத்தில் பக்தைக் கிடம் ஒதுக்கினான்!

# DILANI GUNARAJAH



**Barrister & Solicitor**

**Languages: Tamil, Sinhala & English**

## Real Estate

**(Residental & Commercial - Purchase, Sale, Mortgages)**

வீடு, வர்த்தக நிலையம் வாங்குதல், விற்றல், அடைமானம் வைத்தல்

## Family Law

**(Divorce, Custody, Agreements, Support)**

குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு

## Business Law

**(Purchase, Sale, Incorporation)**

வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான விடயங்கள்

## Estate Law

**(Continuing Power of Attorney for Property/Personal Care, Wills, Estate Administration)**

உயில் தத்துவப் பத்திரம் சம்பந்தமான விடயங்கள்

## Immigration Law

**(Sponsorship, Independent, Refugee, Appeal, Humanitarian & Compassionate Applications)**

# Tel: 416 755 7777

**Fax: 416 288 8633**

**2401, Eglinton Ave. E. Suite # 210,**

Toronto, ON M1K 2N8

Email: dilani@bellnet.ca

# Durga Duranthari Thangammah Appacutty

**By R. Kanthiah**

## The tremendous transformational Tamil persona of our generation

It is the late 1930's or early 1940's. It is morning. The scene is the hall in Ramanashram at Thiruvanamalai, Tamil Nadu. Ramanar is busy talking to his disciples. But there is a kind of commotion at the entrance. He is distracted, and notices that a monkey and its little one are trying to enter the hall, but people at the door are blocking their path. He asks them to let the animals in. They slowly come in and sit in front of the Maharishi. After a couple of minutes the mother leads the young one to Ramanar and asks him to bless it. After he has done the expected they quietly slip out of the hall.

It is the 1960's and the 1970's. The setting is the Tellippallai Durga Devi Devasthalam. A typical morning within the precinct, after the poojah and the prasatham invariably culminates colorfully, all the more with a joyous jostle if it is a Tuesday or any other auspicious occasion. But mark you! There is a beautiful interlude before the curtain comes down. As the milling crowd streams out, quite a number straggle or wait patiently for another darshan. Dramatically a gracious Lady with a winsome smile ambles into the centre of the anxious faces. Then each of the waiting devotees takes his or her turn. Then begins a soulful exchange as between a guru and a sisha or perhaps better as between a healer and a suffering patient. It may be about a long fast producing no return, a love marriage turned sour, an expensive ceremonial ritual not getting the desired dividends, the need for neutralization of some malefic planetary conjunction and the expenses involved. The subjects share a wide spectrum from the personal, familial, ceremonial, educational, matrimonial, monetary, astrological, professional. There is a proper dispensation of advice, prediction, counseling, encouragement, consolation, sympathy and all her sanguine words blended into an assuring tone and touched by the divine glow of the face. Each of the multitude leaves satisfied with a fullness of heart that passes understanding. Some are lucky to receive a gesture of blessing which is responded to by touching her feet. She proves to be the divine balm for hurt and confused minds and wounded and wretched souls, decades after decades because she embodies the divine consciousness of Durga and is aptly honored with the title Durga Duranthari.

If the magic of Ramanar's appeal lies in his transcendental power to penetrate, mutate, and elevate even the consciousness of a four-footed being, Thangammah's prowess is basically transformational – changing one's perception of life's paradoxes positively and reducing the rigmarole of religious beliefs and doctrines to simpler pragmatic possibilities. Though Jaffna discovered her Ramanar in Yogaswami of Columbuthurai, these two were Jivan Mukthas who strode too far ahead of us. Secondly, Ramanar lived in South India and attained moksha in 1950 and Yogaswami became enfeebled after a fall during his last year and left his body in 1964. Consequently, many of us found them inaccessible and beyond us. But fortunately we found in Thangammah a genial being who talked our talk and walked our walk. So we lovingly embraced her with our heart and soul and she confidently sustained us spiritually until May of this year.

Born in a lower middle class family in 1925, she became a Tamil school teacher and obtained her teaching credentials at Ramanathan College, then qualified as a Tamil pundit. After serving in Batticalo and Colombo, she

last served at Tellippallai. The return to the village of her birth gave her the time, energy and convenience to start her life of full-blooded religious service and social activism. After being the Treasurer of the Durga Devi Devasthalam, she was chosen to be the President in . So she retired early from teaching service. Then her silver tongue which till now was confined to the dusty classroom began to ring sweetly in distant countries like Singapore, Malaysia, Tamil Nadu, and England. Her oratorical skill on religious themes won her international acclaim. The reprints of her speeches made her famous and so she launched into analytical studies of Tamil classics like "Kauthapuran." The literary prize offered by the Sri Lankan government, Sahitiya Mandala Award was bestowed on her. The Jaffna University honoured her with a doctorate with the newly won plaudit funds for the temple started pouring in from all corners of the globe. The temple benefited structurally with the new additional acquisition and additions. There were new ceremonial chariots and a holy water tank. She gave a social dimension to religious service but putting up an orphanage for girls, a home for the destitute women, a library, and a pilgrim's rest. She had the deep compassion to share the newly bestowed wealth with other welfare institutions like schools, hospitals, and cultural centers. "Ammah," who, up until now was just a great person, had been transmuted into an institution, mothering more welfare institutions. She really knew the root meaning of "religion" – re-ligare – to bind again. Fist she made us realize our true identity with the divine through faith and prayer. Secondly, she integrated the community through her model social organizations.

Our land that has been suffering since the 1980's because of continuing civil violence found her temple to be the divine expression of her alter ego and a great sanctuary. Now that she is not physically present with us who will wipe the widows' tears or console the wailing orphan? But if our religion expresses the truth that we are immortal because of our spirit, can she actually go away from the centerpiece of her dreams and devotion, Durga?

☑

## அன்னை ஸ்ரீ சாரதா தேவி அம்மையாரின் அன்பு முரசு

* ஒருவனுக்கு வேண்டுவது எல்லாம் இறைவனது அருளே. ஒருவர் அதற்காகவே பிரார்த்தனை செய்யவேண்டும்.
* கீழ்நோக்கி ஓடுவதே தண்ணீரின் இயற்கை. ஆனால், கதிரவனின் கிரணங்கள் அதனை ஆவியாக்கி வானில் உயர்த்துகின்றன. அது போன்ற மனமும் இழிந்த பொருட்களான விஷய சுகங்களை நாடிச் செல்லும்படி மனத்தைத் தூக்கிவிடும்.
* ஞான சாதனை என்பது ஆண்டவனுடைய தாமரைப் பாதங்களில் மனத்தை நிறுத்தி அவன் நினைவிலேயே மூழ்கிக் கிடப்பதாகும். ஞான சாதனங்களைத் தனிமையான இடத்தில் பழகுவது அவசியமாகும். செடி பெரிதாகிவட்டால் கால்நடைகள் அதற்கு எவ்வித தீங்கும் செய்யமுடியாது. அதுபோல் சிலகாலம் தியானத்தில் ஆழ்ந்து மனம் நிலைத்த பிறகு நீ எங்கு வேண்டுமானாலும் தங்கி, யாருடன் வேண்டுமானாலும் பழகலாம். உன் மனம் அதனால் பாதிக்கப்படாது.
* எதனையேனும்பற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் எழுமானால், தனியாக ஒரு இடத்தில் தங்கி கண்ணீர் மல்க ஆண்டவனையே வேண்டுக. அவன் உன் மனத்திலுள்ள அழுக்கையும் துயரத்தையும் போக்குவான். பின்பு உனக்கு எல்லாவற்றையும் விளங்கும்படி செய்வான்.
* இந்த மனிதப் பிறவி பெற்றதால் நீ பாக்கியவான். உன்னால் முடியுமளவிற்கு ஆண்டவனைத் துதிசெய். நீ கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். உழைக்காமல் எதையும் அடைவது முடியாது. உலகச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் தினந்தோறும் பிரார்த்தனைக்கும் ஞான சாதனைக்கும் சிறிது நேரத்தையாவது ஒதுக்க வேண்டும்.
* ஒருமைப்பாட்டுடன் இரண்டு நிமிட நேரம் கடவுளைப் பிரார்த்திப்பதும், தியானிப்பதும் மன ஒருமைப்பாடின்றி இவற்றைப் பலமணி நேரம் செய்வதைக் காட்டிலும் சிறந்தது.

# மாந்தர்க்கு இன்றியமையாத உள்ளத் தூய்மையும் தூய நல்வாழ்வும்

இராஜேஸ்வரி பரமேஸ்வரன்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது!

என்று பாடினார் சுவாமி விபுலானந்தர். இறைவன் உவந்து ஏற்றுக்கொள்ளும் சிறந்த மலர் தூய உள்ளமாகிய மலரேயல்லாமல் வேறெதுவுமில்லை என்பது அவர் கருத்து. இறைவன் தூய உள்ளத்திலேயே எழுந்தருளி அருள் செய்வான் என்பது இதன் உட்கிடை.

"வெண்டாமரைக்கன்றி நின்பதந்தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ"

என்று சரஸ்வதியின் அருள்வேண்டிப் பாடுகிறார் குமரகுருபர சுவாமிகள். வெண்தாமரை அல்லாமல் எனது தூய வெள்ளை உள்ளம் நீ வீற்றிருப்பதற்கு ஏற்ற மலர் ஆகாதா என்பது அவரது அவா.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்கிறார் திருமூலர்.

"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக"

எனப் பாடினார் அப்பர் சுவாமிகள்.

இறைவன் விரும்பி உறையும் கோயில் கள்ளம் கபடமற்ற தூய உள்ளமே என்பது இவற்றிலிருந்து வெளிப்படை. மனத்தைக் கள்ளம் கபடமில்லாமல் வைத்திருப்பதே அறனாகும். உலகில் மாந்தரின் அறச்செயல்களுக்கெல்லாம் தூயமனமே வித்தாகும். பிற உயிர்களிடத்தெல்லாம் அன்பு செலுத்த வேண்டியது அறன். பிறர் துன்பப்படுவதைக் காணுங்கால் அவர்களது துயர் துடைக்க வேண்டியது அறன். பிறர் பசித்திருக்கத் தான் தனித்துண்ணாது, கிடைப்பதைப் பகிர்ந்துண்ணுவதில் இன்பம் காண்பது அறன். பணம் படைத்தோர் ஏழை எளியவர்க்கு ஆதரவளிப்பது அறம். அறிவு படைத்தோர் அறிவுப் பசிகொண்டோர்க்கு அறிவுத் தானம் செய்வது அறம். தீங்கு செய்தவர்க்கும் அவர்களது தீங்கினைப் பொறுத்து நன்மை செய்வது அறம். எல்லா உயிர்களிடத்தும் இறைவனைக் காண்பது அறம். இந்த அறங்களுக்கெல்லாம் விளைநிலமாக உள்ளது தூய உள்ளம்தான். தூய உள்ளத்தின் அவசியத்தைத் திருவள்ளுவர் பல இடங்களிலும் வற்புறுத்துகிறார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்கிறார் வள்ளுவர். மனத்திலே களங்கமில்லாமல் இருப்பதே அறனாகும். குற்றமுள்ள மனத்துடன் பெயருக்கும் புகழுக்குமாகச் செய்யப்படும் பிறசெயல்கள் யாவும் வெறும் ஆரவாரச் செயல்களாகவே அமையும். எனவே, குற்றமற்ற மனதுடன் இயன்றவரை செய்யக்கூடிய இடங்களிலெல்லாம் நாம் அறச் செயல்களைச் செய்யவேண்டும் என்பது வள்ளுவரது அவா.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அடியார்களின் உள்ளம் தூய்மையாக இருந்த காரணத்தால்தான் அவர்களது திருப்பணிகளும் புகழ்வாய்ந்த அவர்களது திருப்பாசுரங்களும் காலத்தினால் அழியாத சிறப்பு வாய்ந்தவையாகப் போற்றப்படுகின்றன. மகாத்மா காந்தி அடிகள், அன்னை திரேசா, ஈழத்து தங்கம்மா அப்பாக்குட்டி

அம்மையார் போன்ற பெரியோர்களும் மனத்தூய்மையுடன் வாய்மையே குறிக்கோளாக தம் நலன் கருதாது பரோபகார சிந்தனையுடன் மக்களுக்குச் சேவையாற்றிய காரணத்தினாலேயே உலகத்தவர் உள்ளங்களில் மங்காப் புகழ்பெற்று விளங்குகின்றனர்.

தூய உள்ளத்தின் ஓர் உயர்ந்த பண்பு அன்பு ஆகும். இறைவனிடத்து அளவிறந்த அன்பு செலுத்துதல் பக்தி எனப்படும் பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் கருணை, காருண்யம் எனப்படும். தூய உள்ளம் கொண்டவர்கள் இறைவனிடம் மட்டுமல்ல; பிற உயிர்களிடத்திலும் அத்துடன் ஏழை எளியவர்கள், நோயாளிகள், வயோதிபர்கள் ஆகியோரிடமும்கூட அன்புள்ளம் கொண்டவர்களாக இருப்பர். பிற உயிர்களிடத்தும் இறைவனைக் காண்பர்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசு விற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

என்பது திருமூலர் வாக்கு. இறைவனுக்குப் பச்சிலையிட்டு வணங்குதல், பசுவிற்கு ஒருவாய் தீனி போடுதல், உண்ணும்போது ஒருவர்க்குக் கைப்பிடி உணவு வழங்குதல், பிறருடன் இனிமையாகப் பேசுதல் என்பன எவராலும் எளிதாகச் செய்யக்கூடிய அறன்களாகும் என்பது இதன் கருத்து.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்பது வள்ளுவர் வாக்கு. அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரியவை எனப் பேணிவைப்பர். அன்புடையோர்களோ தமது எலும்பையும்கூடப் பிறர்க்குத் தானம் செய்யத் தயங்கமாட்டார்கள். கண்ணப்பர் இறைவனுக்குத் தன் கண்களை அர்ப்பணித்து இன்பம் கண்டார். சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவைக் காப்பாற்றுவதற்காகத் தனது தொடையின் மாமிசத்தை ஒப்படைக்க முன்வந்தார். அன்னதானம், கண்தானம், அகதிகளுக்கு உணவு, உடை தானம் என உலகில் தானங்கள் பல நிகழ்வதற்கு அன்புள்ளங்களே காரணமாக அமைகின்றன.

இந்த அன்பு முதலில் இல்லத்தில குடும்ப உறுப்பினரிடையே ஆரம்பித்துச் சமூகத்திற்கு அதாவது இனம், மதம், மொழி, நாடு என்ற எல்லைகளுக்கு அப்பால் விரிந்து பரவவேண்டும். அன்பே உலகில் சமாதானத்திற்கும் அமைதிக்கும் வித்தாக அமையும். சமாதான உணர்வு மக்களது உள்ளத்திலேயே பிறக்க வேண்டும்.

"புறத்தூய்மை நீராலமையும் அகந்தூய்மை
வாய்மையாற் பேணப் படும்."

என்கிறார் வள்ளுவர். எமது உடலையும் புறத்தே எம்மைச் சூழவுள்ள பொருட்களையும் நீரால் சுத்தப்படுத்துகிறோம். எமது மனதைச் சுத்தப்படுத்துவதற்கு இன்றியமையாதது வாய்மை ஆகும். வாய்மை எனப்படுவது எவர்க்கும் தீங்கு பயக்காத செயல்களைச் செய்வதாகும். எமது நெஞ்சு அறியும் பிழைகளையோ குற்றச் செயல்களையோ பொய்யான வார்த்தைகளையோ நிகழ்த்தக்கூடாது.

"வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" எனவும், "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" எனவும் ஔவைப் பிராட்டியார் கூறுகிறார். களங்கமில்லாத பரிசுத்த உள்ளங்கொண்டவரிடத்து வஞ்சனை பொருந்திய சிந்தனை இருக்கமாட்டாது. மனதுக்கு மறைக்கப்பட்ட யாதொரு வஞ்சனையும் இல்லை. அதாவது வஞ்சனையான சிந்தனையை மனதிலிருந்து மறைக்க முடியாது என்பது அவர் கூறும் பொருள். நாம் பொருந்தாத வஞ்சனைகளைப் புரிந்தால் எமது நெஞ்சமே நாம் செய்த பிழைகளைச் சுட்டிக்காட்டி எம்மை உறுத்திக்கொண்டே இருக்கும்.

ஒருவருக்கு வானளவு உயர்ந்த சிறப்பு உள்ளபோதும் அவன் தனது நெஞ்சு அறிந்த குற்றச் செயல்களைச் செய்திருந்தால் அவனுக்கு அந்த உயர்ந்த தோற்றம் என்ன பயனைச் செய்யும்?

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்"

என்கிறார் வள்ளுவர்.

எவர் எச்சிறப்பான பதவியில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் மனச்சாட்சிக்கு விரோதமான எந்தக் குற்றச்செயலையும் செய்யக்கூடாது என்ற அரிய பாடத்தை இக்குறள் புகட்டுகிறது. உள்ளத்தால் பொய்யாது

ஒழுகுகின்ற ஒருவனே உலகத்தார் உள்ளங்களில் இருப்பான். அவர்கள் தவத்தோடு தானம் செய்பவர்களிலும் மேலானவர்கள் என்பது வள்ளுவர் கருத்து. எனவே, நேர்மை எமது வாழ்வின் இலட்சியமாக இருத்தல் வேண்டும்.

தூய உள்ளம் படைத்தவர்கள் தமக்கொரு நீதி பிறர்க்கொரு நீதி என நடக்க மாட்டார்கள். பிறர் குற்றம்காண்பவன் ஒருவன் முதலில் தனது குற்றங்கள் யாவை என ஆராய்ந்து, தான் திருந்தி நடக்க முற்படுவான்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

என்கிறார் வள்ளுவர்.

அன்றியும் தூய உள்ளம் கொண்டவர்கள் பிறரைக் காணும்பொழுது முகம் மலர்ந்து உரையாடி அவர்கள் போகவிட்டு அவர்களது குற்றங்களைப் பறைசாற்றித் திரியமாட்டார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுவார் குறித்து இராமலிங்க அடிகள் "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்ற இறைவனிடம் பிரார்த்திக்கிறார்.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்கிறார் வள்ளுவர். காணும்பொழுது இனிக்க இனிக்கப் பேசுவதால் பிரயோசனமில்லை. நட்பென்றால் அது மனத்திலிருந்து எழவேண்டும் என்பது அவரது கருத்து.

ஒருவனது மனத்தை மாசுபடுத்தும் காரணிகளான அழுக்காறு, அவா, வெகுளி என்பவை முக்கியமானவையாகும். அழுக்காறு என்றால் பொறாமை, அவா என்பது ஆசை. வெகுளி என்பது கோபம், ஒருவன் தன்னிடம் இல்லாத செல்வம். பிறரிடமிருக்கக் கண்டு பொறாமை கொள்கிறான். அச்செல்வத்தை எவ்வழியிலாயினும் பெற்றுவிட வேண்டுமென்று அவனுக்கு ஆசை உண்டாகிறது. தனது ஆசை நிறைவேறாதபொழுது அதற்கு இடையூறாக இருக்கும் பிறர்மீது அவனுக்கு ஆத்திரம் உண்டாகிறது. இதன் விளைவாக சொல்லத் தகாத சொற்களை அவன் மீது பிரயோகிக்கிறான். மனம் வெகுவாக பாவச் செயல்களையும் செய்ய முற்படுகிறான். மனமானது தனது தூய்மையை, அமைதியை இழக்கும்பொழுது இவ்விபரீதங்கள் நிகழ்கின்றன.

மனத்தூய்மையைக் கெடுப்பது ஆசை. அது தீய வழிகளில் அப்பொருளைத் தனதாக்கிக்கொள்ள ஒருவரைத் தூண்டுகிறது. பிறன் பொருளைக் கள்ளத்தால் பெற்றுக்கொள்ள நினைப்பதுவும்கூட பாவமாகும்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்"

என்கிறது திருக்குறள். பொருளைத் தேடவிரும்பினால் கள்ள வழிகளை, திருட்டு வழிகளை நாம் நாடவேண்டியதில்லை. சொந்த முயற்சியினால் நேர்மையான வழிகளில் எச்செல்வத்தையும் தேடிக்கொள்ள முடியும்.

மனத்தை மாசுபடுத்தும் காரணிகளுள் ஒன்று கோபம். இக்கோபத்தைச் சேர்ந்தாரைக் கொல்லும் வியாதியாகக் கருதலாம். அதனால்தான் வள்ளுவரும்-

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என்றார். ஔவையாரும் 'ஆறுவது சினம்' எனச் சுருக்கமாகக் கூறுகிறார்.

பிறர் எம்மை இகழும்பொழுதும் எமக்குத் தீங்கு செய்ய முற்படும்பொழுதும் நாம் அவர்மீது கோபம் கொள்கிறோம். தீராக் கோபம் போராகவும் முடியலாம். கோபம்கொள்ளும்போது பொறுமையைக் காக்க வேண்டிய தேவையை வள்ளுவர் வற்புறுத்துகிறார். எம்மைக் கொல்வதையொத்த தீங்கை ஒருவர் செய்தாலும்கூட அவர் செய்த ஒரு நல்ல காரியத்தை நினைவிற் கொண்டோமானால் எமது கோபம் தணிந்துவிடும் என்கிறார். மேலும் பூமி தன்மேல் நின்றுகொண்டு தன்னையே வெட்டுபவனைப் பொறுத்துக்கொள்ளவில்லையா? அவ்வாறே நம்மை இகழ்பவர்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்பது குறள். இச்சந்தர்ப்பத்தில் "குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து மறைக்குமாம் கண்டீர் மரம்"

எனும் ஔவையார் வாக்கையும் நினைவுகூர்தல் தகும். வெட்ட வெட்ட மரமானது தான் உள்ளவரையும் குளிர்நிழலைத் தந்துகொண்டேயிருக்கும் என்பது இதன் பொருள்.

தீங்கு செய்தவர்களைத் தண்டிக்கும் விதத்யையும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்" என்பது வள்ளுவர் வாக்கு.

தீங்குசெய்தவர்களைத் தண்டிப்பதற்கு நாம் பழிக்குப் பழி வாங்கவேண்டியதில்லை. அவர் தான் செய்த பிழையை நினைந்து வெட்கப்படும்படியாக அவருக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிடவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.

கோபம் மனத்தை ஆட்கொள்ளும்பொழுதும் ஒருவர்பால் வெறுப்பு ஏற்படும்பொழுதும் தகாத வார்த்தைகளை நாம் அவர்மீது பிரயோகித்துவிடுகிறோம். இறைவனிடம் எமது பிழைகளுக்கு மன்னிப்புக் கோரும் நாம் எமதுசகாக்களை நாம் ஏன் மன்னித்தல் ஆகாது? ஒருவரது மனதை நோகச்செய்யும் வார்த்தைகளை நாம் ஒருபோதும் பிரயோகிக்கக்கூடாது. தீயினால் சுட்ட புண்கூட ஒரு காலத்தில் மாறிவிடும். ஆனால், நாவினால் பிறர் உள்ளத்தைச் சுடும் வடு ஒருபொழுதும் ஆறாது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்பது திருக்குறள். இதனை அனுபவரீதியாக அனைவரும் உணர்ந்திருப்போம். இனிய சொற்கள் இருக்கும் பொழுது இன்னாத சொற்களை நாம் ஒருபொழுதும் பிரயோகிக்கக்கூடாது. இது மக்களிடையே பகைமையையே வளர்க்கும்.

இவ்வுலகில் ஆசைகளையும் தீய ஒழுக்கங்களையும் உள்ளத்தால் துறவாமல் துறந்தவர்கள்போல வேடந்தாங்கி, பிறரை ஏமாற்றி வாழ்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப்போல் கொடியவர்கள் எவரும் இல்லை என்கிறார் வள்ளுவர்.

"நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்"

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு உகந்த வழி இறைவன் பெருமையைச் சிந்திப்பதாகும். அவனுடைய அருளை நாடுவதாகும். அவன் படைத்த உயிர்கள்மீது அன்பு செலுத்துவதாகும். எமது சமயமும் சமய நூல்களும் போதிக்கும் அறவழிகளை வாழ்விற் கடைப்பிடிப்பதாகும். இறைவழிபாடு, அன்பு, கருணை, காருண்யம், பொறுமை, நேர்மை, இன்னாசெய்யாமை போன்ற உயர் தத்துவங்களை எமது இந்துமதம் போதிக்கிறது. இந்த உயர் பண்புகளை வளர்ந்தவர்களாகிய நாம் எமது அன்றாட வாழ்விற் கடைப்பிடிப்பதோடு இளையோர், சிறார்களிடையேயும் அவற்றை விருத்திசெய்துவருதல் அவசியமாகும்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்" - குறள்

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு" - குறள்

☑

**சுவாமி விவேகானந்தர் பொன்மொழிகள்**

* **நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.**

* **நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.**

# Saiva Siddhanta

**Shan A. Shanmugavadivel**

Rev. Henry R. Hoisington was a Christian missionary of the American Board in Ceylon. He was captivated by the rich treasures of Saiva Siddhanta in the nineteenth century. In his writings he outlined the reasons why Siddhanta philosophy was not presented to the world unlike the other religious doctrines. Siddhanta sastras had been preserved for ages as the exclusive property of a group of people; original texts were in Tamil poetical works with great variety of technical terms and the sacred knowledge were communicated only to the disciples of the guru.

## What is the need to have knowledge of Saiva Siddhanta?

Saiva Siddhanta is praised as the most elaborate, rational and valuable philosophy in the world. It covers the whole gamut of logic, self inquiry, theology and spiritual experience.
Sivam means auspiciousness. Auspiciousness is the embodiment of love and knowledge. Saiva Siddhanta considers three distinct eternal entities namely God, soul and the world.
Saiva Siddhanta bases its postulates on Satkaryavatham- cause and effect theory that declares, "What is real only comes to existence; something can never come from nothing".

Unfortunately, today many Saivites especially in the western world in the midst of a busy life style do not show interest in learning their religious philosophy. Only a few elderly show willingness to attend Siddhanta classes. It's the young men and women who should be exposed to this knowledge which is so essential for proper understanding of our great faith.

The fourteen Siddhanta books contain the quintessence of Saiva Agamas. Saiva Siddhanta School of philosophy is unique in its extensive, comprehensive rebuttal to the Sankara's advaita philosophy. Saiva Siddhanta philosophical system established by St. Meikandar disagrees with other schools of Vedanta philosophy including Visishtadvaita and Dwaita. According to Sankara, the exponent to the Kevaladvaita, the word advaita means not two and there is only one eternal being. All other forms are false. The world and the souls are not real unlike the Saiva Siddhanta view.

Thirukural accepts the three eternities – world, soul and God concept of Siddhanta.
With out Him, nothing could have come into existence. Out of companssion, God created the world and rendered all the necessaries with which souls could attain liberation.

Thirumoolar's Thirumanthiram speaks clearly about the three entities – God, soul and bondage (world). The sixty three Saivite saints accorded the title of "Nayanmar (lord or master) refute advaita monism. St. Gnanasambanthar in his "Maalai Matru Pathigam" questions whether he could regard himself as God. "Thirukalitrapadiayar" says "Evan avan aagaan." The man can never become God. God does not create souls. He gives the physical and mental bodies to souls. Our knowledge is incomplete. This limitation, according to Saiva Siddhanta is due to its association with anavam (malam or impurity). When the soul is free from fetters which bind it, it gains God's grace. When souls attain liberation though "anavam" looses its power, it does exist in the souls.

The philosophical systems that did not accept Sivagamas are called the "outer religion." The theological systems that give importance to Sivagamas in general but varied in the concept of anavam are called "inner religion." Saiva Siddhanta systematically proved beyond doubt that monism is not a logical theory, not worthy to be pursued. The God is not the passionless impersonal absolute of Sankara's advaita Vedanta and the material world is not regarded as illusionary or unreal. Saivam means association with Lord Siva. Saiva Siddhanta explains the nature of God, soul and world and the relationship between
them. Saiva Siddhanta speaks of three kinds of relationship between God and soul – God is one with soul, along with soul and different from soul.

Sivagnanabotham is the primary text of Saiva Siddhanta philosophy. The author, St. Meikandar in his first aphorism establishes the existence of God by logical reasoning.
The world which consists of three classes of beings designated by he, she, it and which is subject to the three operations – creation, preservation and destruction will be dissolved in the same way in which it is developed and preserved and will be re-developed from malam (Mayai). He who causes the dissolution the scholars say is the almighty responsible for all three acts.

The world is preserved by successive and continued resolution and development of things. In this world, which is a real effect, the resolution is first in order, the development follows and the preservation is the intermediate stage. That which is destroyed will be reproduced by him who destroyed it. The world being resolved into "Mayai" will in the same way be again developed from "Mayai". Hence the God is the efficient cause and Mayai is the material cause of the universe.

References:
Treatises of Hindu Philosophy- Henry R. Hoisington
Saiva Siddhanta Perumanram- Prof M. Ramalingam
Echoes of Sivagnanbodham- K. Ganesalingam

**Yogar Swamigal** was a gnani. The result of gnanam is mounam--silence and his greatest experience was summa iruttal and his greatest emphasis was on mounam. Yet for those on the road to self-realisation he was never so silent as not to draw up the itinery for their pilgrimage. Even a cursory reading of the sayings that follow will suffice to show wherein he laid the greatest stress -

**(i) Summa iruttal (being still) to permit the Inner Guide to be heard from mounam;**
**(ii) The study and recitation of Thirumuraikal as a way of controlling the wandering mind;**
**(iii) Purity of thought, word and deed;**
**(iv) The equality of all human beings and the innate divinity of every being.**

Fortunately for us, he himself has summed up all his teaching in the four maha-vakyas (great Truths):

**(i) There is no evil.**
**(ii) We do not know - Who knows?**
**(iii) All is Truth.**
**(iv) It was determined long ago.**

# தாய்மையைப் போற்றும் இந்துசமயம்

த.மனோகரன் (துணைத் தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்)

தோற்றுவாய் தெரியாத தொன்மைச் சமயமான இந்து சமயத்தில் இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் உருவகித்து உரிமையுடன் வழிபட நம்முன்னோர் வழிவகுத்துள்ளனர். உலகத்தின் இயக்கத்திற்கு மூலாதாரமாக விளங்கும் சக்தியைத் தாயாக உருவகித்து வழிபடுகின்றமை இந்துக்களின் மரபாகும். பண்டுதொட்டு நிலவிவரும் இம்மரபின் அடிப்படையிலே நோக்கும்போது பெண்மைக்கும் தாய்மைக்கும் இறைநிலை அளித்துப் போற்றும் பெருமைக்குரிய சமய நெறியாக இந்துசமயம விளங்குவதைக் காணலாம்.

"ஏகன் அநேகன் இறைவன்" என்ற கோட்பாட்டின் உரித்தாளிகள் இந்துக்கள். அதாவது ஒரே இறைவனைப் பல்வேறு திருவுருவங்களில் பல்வேறு திருப்பெயர்களில் கண்டும் அழைத்தும் தொழும்பான்மை கொண்டது இந்துசமயத் தத்துவம். அந்த வழியிலே பெண்மையின் உருவிலே தாயின் திருவுருவாகப் பக்தியுடன் வழிபடும் இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் ஒன்றாகச் சாக்தம் விளங்குகின்றது.

ஆதிசங்கரரால் வகுக்கப்பட்ட ஆறு இந்து சமயப் பிரிவுகளில் சிவனை முதலாகக் கொண்டு வழிபடும் பிரிவு சைவம் எனப்படுகின்றது. அதேபோல் திருமால் அதாவது விஷ்ணுவை முதலாகக் கொண்டு வழிபடும் பிரிவு வைணவம் என்றும், பிள்ளையாரை முதலாகக் கொண்டு வழிபடும் பிரிவு காணபத்தியம் என்றும், முருகனை முதலாகக் கொண்டது கௌமாரம் என்றும், சூரியனை முதலாகக் கொண்டது சௌரம் என்றும் குறிப்பிடப்படுகிறது.



சாக்தம் தாய்மையின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. இந்த உலகிலே வாழும் ஒவ்வொருவருக்கும் தாயும், தந்தையுமே உயர்ந்தவர்கள். பத்து மாதம் சுமந்து பெற்று, பாலூட்டி, தாலாட்டி அன்பும் அரவணைப்பும் வழங்கும் அன்னையின் நிலை ஈடுஇணையற்றது. இந்த உலகிலே தான் கண்ட தெய்வமான அன்னையைப் போன்று உலகத்தை இயக்கும் அந்த ஆதிபராசக்திக்கும் தாய்மை இடம் அளித்துப் போற்றும் சிறப்பு இந்த சமயத்தவர்கள் கண்ட அன்புப் பிணைப்பு. அது சிந்தனையின் ஆழத்தில் உதித்த உயர்ந்த உணர்வு.

சகல சக்திகளுக்கும் அதாவது இயக்கங்களுக்கும் தாயாகக் கொள்ளும் இறைசக்தியே உள்ளது என்பது நமது நம்பிக்கை. சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை என்பது அதனாலாகும். உலகின் ஒவ்வொரு இயக்கமும் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியாலேயே நடக்கின்றது. அதையே இறைசக்தியாக, தாய்மையின் சக்தியாக பெண்மையின் சக்தியாகப் போற்றுகின்றோம்.

"அம்மா என்பது தமிழ் வார்த்தை; அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை" என்பது ஒரு பாடல் வரி. குழந்தையின் முதல் வார்த்தை மட்டுமா அம்மா? குழந்தை உருவாகும் அந்தக் கருவறையைத் தாங்கி நிற்பவளும் அந்த அம்மா அல்லவா?

அம்மா அதாவது உலக உயிரினங்களுக்கெல்லாம் உற்பத்தித் திருவிடமான கருவறையைத் தாங்கி நிற்கும் இறைசக்தியைப் போற்றி வணங்கும் சிறப்புத் தினங்கள் பல இந்துக்களிடம் உள்ளன.

அவற்றிலே நவராத்திரித் தினங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. உலக இயக்கத்திற்கு அடிப்படையாக விளங்கும் வீரம், செல்வம், அறிவு ஆகியவற்றை வழங்கும் தாய்மையின் சக்திகளாக துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகியோர் கொள்ளப்படுகின்றனர். இவர்களை முறையே மலைகள், அலைமகள், கலைமகள் என்றும் குறிப்பிடுகின்றோம்.

நவராத்திரியின் முதல் ஒன்பது நாட்களிலே முதல் மூன்று நாட்களும் வீரத்தின் சக்தியாகிய துர்க்காதேவியின் அருள்நாடி வழிபாடு செய்யப்படுகின்றது. துர்க்காதேவி பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் சக்தியாகக் கொள்ளப்படுகின்றாள்.

சமூக நடைமுறைக்கும், ஆட்சியின் சிறப்பிற்கும் தனிமனித வாழ்வின் நிறைவிற்கும் துர்க்கையம்மனின் கருணை வேண்டும். சிவபிரானின் தேவியாகக் கொள்ளப்படும் துர்க்கை ஒவ்வொரு சக்தியின் வெளிப்பாட்டின்போதும் ஒவ்வொரு திருப்பெயர் கொள்ளுகின்றாள். சாந்த சொரூபியாகவும் அகோரநிலை பூண்டவளாகவும் அன்னையின் திருவுருவம் சித்தரிக்கப்படுகின்றது.

துர்க்கை வழிபாட்டின்மூலம் மனவுறுதி, சக்தி, நிம்மதி, அமைதி, ஆனந்தம் எல்லாம் கிட்டும். இவற்றை அடைவதற்கு வீரம் வேண்டுமல்லவா? வீரம் என்றால் என்ன என்று சிந்திப்போம். வீரம் என்பது உடல் வலிமை மட்டுமல்ல; மனவலிமையும் சேர்ந்ததே வீரம். எதையும் தாங்கும் சக்தி. அதாவது உளவலிமையே வாழ்வின் நல்லியக்கத்திற்கு, நிம்மதிக்கு வழிகோலும். துன்பங்கள், துயரங்கள் நம்முள்ளத்தில் குடிகொண்டு நமது நிம்மதியான வாழ்வைச் சிதைக்காதிருக்க மனவலிமை வேண்டும். அதைத் தருபவள் அன்னை துர்க்கா தேவி. நாம் தினமும் பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுக்கின்றோம். விரும்பத்தகாத, வேண்டத்தகாத அவலங்கள் நம்மைச் சூழ்ந்து வாட்டுகின்றன. இவற்றை முறியடித்து முன்னேற மனமவலிமை வேண்டும். மனவலிமை அதாவது தன்னம்பிக்கை இருந்தால் மட்டுமே உடல் வலிமையைக் காட்டலாம். மனவலிமை அற்று விட்டால் உடல் வலிமையால் பயனில்லை.

மனவலிமை எதையும் தாங்கும் சக்தியைப் பெற்று வாழ்வில் எதிர்நீச்சல் போட துர்க்கையம்மனின் அருள்நாடி வழிபாடு செய்யும் நாட்களாக நவநாட்களில் முதல் மூன்று நாட்களும் அமைகின்றன.அடுத்துவரும் மூன்று தினங்களும் காக்கும் கடவுளான திருமாலின் துணைவியாக, சக்தியாகக் கொள்ளப்படும் செல்வத்திற்கு

அதிபதியாக விளங்கும் மகாலட்சுமித் தாயாரின் திருவருளை நாடித் துதிக்கும் தினங்களாய் அமைகின்றன. நிம்மதியான வாழ்வுக்குத் தேவையான செல்வத்தை வழங்கும் திருமகளாக மகாலட்சுமி அன்னை விளங்குகின்றாள்.

செல்வங்கள் என்பது சொத்து சுகங்கள் மட்டுமல்ல; நிம்மதி, தேகசுகம், நற்பண்பு, நல்லார் உறவு, நல்லறிவு, குடும்ப நல்லுறவு, சமுதாய நல்லுறவு, புத்திரப் பேறு, தொழில், கல்வி போன்ற துறைகளில் நல்லுறவும் மேன்மையும் பாதுகாப்பு, பஞ்சமின்மை, நாட்டு வளம், செழிப்பு. பருவ மழை என்ற பலவும் செல்வத்துள் அடங்குகின்றன.

இயற்கையின் இலக்கணமாக, இயற்கையின் சொரூபமாகத் திகழும் மகாலட்சுமித் தாயார் பூமியைத் தாங்கிநிற்கும்போது பூமாதேவியாகப் போற்றப்படுகின்றாள்.

அதேபோன்று புத்திரப்பேறு வழங்கும்போது சந்தானலட்சுமியாகவும் மனவுறுதி தரும்போது வீரலட்சுமியாகவும், வெற்றியை வழங்கும்போது விஜயலட்சுமியாகவும், தைரியம் தரும்போது தைரியலட்சுமியாகவும், பயிர்கள் செழித்து விளைவைப் பெருக்கும்போது தானியலட்சுமியாகவும் பொருட்செல்வங்களைத் தரும்போது தனலட்சுமியாகவும் விளங்கும் அன்னை எழுச்சியை வழங்கும்போது கஜலட்சுமியாகவும், நிம்மதியைத் தரும்போது ஆதிலட்சுமியாகவும் செல்வாக்கைத் தரும்வேளை ஐஸ்வர்யலட்சுமியாகவும் போற்றப்படுகின்றாள்.

இயற்கையின் சக்தியாகக் கொள்ளப்படும் மகாலட்சுமி வழிபாட்டின் நோக்கம் நாட்டிலே நல்ல மழை பொழியவேண்டும். விளைநிலம் செழிக்கவேண்டும். பசி, பட்டினி இல்லாதொழிய வேண்டும். பஞ்சமாபாதகங்கள் உள்ளிட்ட சகல தீயவையும் அகன்று நிம்மதி, அமைதி போன்றவை நிலைக்கவேண்டும் என்பதாயமைகின்றது.

நவராத்திரியின் இறுதி மூன்று தினங்களும் அறிவின் தெய்வமான கல்விக்கதிபதியான சக்தியாகிய சரஸ்வதி தேவிக்குரிய சிறப்புத் தினங்களாக அமைகின்றன. படைத்தற் கடவுளான திருமாலின் துணைவியாக, சக்தியாகக் கொள்ளப்படுபவர் சரஸ்வதிதேவியே. படைக்கப்பட்ட சகலரதும் வாழ்க்கையைக் கொண்டுநடத்த அறிவு தேவை. மனித குலமாகட்டும்; ஏனைய உயிரினங்களாகட்டும்; சகலவற்றிற்கும் அவற்றின் தன்மைக்கேற்ப வாழ அவ்வவற்றிற்குரிய புத்தியைத் தருபவள் சரஸ்வதி.

மிருகங்களும், பறவைகளும், ஏனைய உயிரினங்களும் உயிர்வாழ இரைதேட, உறைவிடம் நாட புத்தியைக் கொடுக்கும் அன்னை, மனித குலத்திற்கு மட்டும் சுயமாகச் சிந்தித்து வாழ்வை அமைத்துக்கொள்ள ஆறாவது அறிவாகிய பகுத்தறிவையும் தந்துள்ளாள். மிருகங்களும் பறவைகளும் ஏனைய உயிரினங்களும் பிறக்கின்றன; இறுதியில் இறந்து விடுகின்றன. இடைப்பட்ட காலத்தில் உண்கின்றன; உறங்குகின்றன; சந்ததியைப் பெருக்குகின்றன. இவையே உயிரினங்களின் வாழ்க்கை வட்டமாக நியதியாக இருந்தபோதும் மனிதகுலம் ஆறாவது அறிவால் மேன்மையுறுகின்றது.

பகுத்தறியும் சிறப்பால் பிறப்பில் உயர்வுகொண்ட மனித குலம் ஏனைய உயிரினங்களைவிட வாழ்வில் உயர்நிலை பேணவேண்டும். இதனை நினைவிற்கொள்ளும் நாட்களாக சரஸ்வதிதேவியின் வழிபாட்டுத் தினங்கள் அமைகின்றன.

மனிதகுலத்திடையே சிந்தனைத் தெளிவு, சீரிய நோக்கு, பண்பட்ட நடத்தை போன்றவை மிளிர அறிவு பயன்பட வேண்டும். அறிவு என்பது ஆக்கத்திற்குரியது. உலக நலனுக்காக மனிதகுல மேம்பாட்டிற்காகச் சிந்தித்துச் செயற்படுவதே அறிவு. அறிவிற்குப் பல விளக்கங்கள் கூறப்பட்டாலும் வாழ்வை வளமுடனும், நலமுடனும் நடத்திச் செல்வதே அறிவின் பெருமைக்குக் கட்டியம் கூறுவதாயமைகின்றது. தானும் வாழ்ந்து மற்றவர்களையும் நலமாக, வளமாக வாழ வழிகாட்டுவதே அறிவின் வழியாக அமைகின்றது. அது அன்பு வழியாக, பண்பு வழியாக மலர்கின்றது.

நல்லொழுக்கம், பண்பு, பணிவு, பக்தி, பாசம், கருணை, பொறுமை, அன்பு என்று பல நல்ல மேன்மையான மரபுகளின் உறைவிடமாக அறிவு விளங்க வேண்டும். சில நூல்களைக் கற்றறிந்துவிட்டால் மட்டும் அறிவாளியாகிவிட முடியாது. கற்றறிந்தவற்றை நடைமுறையில் செயற்படுத்திக் காட்டும்போதே ஒரு மனிதன் அறிவாளியாகின்றான்; முழு மனிதனாகின்றான்.

நல்லறிவுசார் சிந்தனைகள் மூலம் நாடும், வீடும், சமூகமும், உலகமும் உயர்வடையும். வேற்றுமை களைந்து ஒற்றுமைக்கான அறிவுசார் முறையிலேதான் இந்துக்களின் தாய்மை வழிபாடு அமைகின்றது.

அறிவுசார் இந்துவின் இனிய தமிழிலான நான்கு வரிப் பிரார்த்தனையின் சிறப்பு மேன்மையானது; பெருமைக்கும் பெருமிதத்திற்கும் உரியது.

“தென்னாடுடைய சிவனே போற்றி” என்ற செந்தமிழால் இறைவனைப் போற்றி வழிபடும் இந்து, “எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்று “உலகிலுள்ள சகலருக்கும் இறைவா உன்னருள் கிட்டவேண்டும்” என்று வேண்டுதல் செய்கின்றான். இன, மத, மொழி, நாடு, நிறம் யாவும் கடந்த வாழ்த்தாக இது அமைகின்றது. அடுத்து “இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க” என்று கூறி வாழ்த்துகிறான்; வேண்டுதல் செய்கின்றான்.

இது சீரிய சிந்தனையால் வெளியாகும் உயரிய பிரார்த்தனையாக, அறிவின் நிறைவின் உச்சமாக அமைகின்றது.

மனித குலத்திலே இறைவனின் படைப்பிலே வேறுபாடு காணாதிருக்க அறிவைத் தருகின்ற அன்னை சரஸ்வதி வழிபாடு சிந்தையைச் சீர்செய்கின்றது. இயற்கையின் சக்தியாக விளங்கும் மகாலட்சுமி வழிபாடு நிம்மதியான வாழ்விற்கு வழிகாட்டுவதுபோன்று துர்க்கை வழிபாடு மனவலிமையைத் தந்து வாழ்வில் உயிர்ப்பை ஏற்படுத்துகின்றது.

வெறும் சம்பிரதாயத்திற்குரிய வழிபாட்டுத் தினங்களாக சமய முக்கியத்துவ தினங்களைக் கொள்ளாது அவற்றின் தத்துவக் கருத்துக்களை, வழிகாட்டல்களை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். அதுவே சமய வாழ்வாக அமையும்.

நவராத்திரி நாட்களிலே அழகாகக் கொலு வைத்து, பார்த்து, ரசித்து மகிழ்வது வழக்கம். அதேபோன்று ஒவ்வொருவரும் தமது உள்ளத்திலே உள்ள தீமை தரும் பகை, பொறாமை, கோபம், குரோதம் போன்ற குணங்களை அகற்றிச் சுத்தம் செய்து அங்கு புனிதமான பண்பு நிறைந்த சிந்தனைகளை வரிசைப்படுத்தி நிறைத்து கொலுவைத்து வாழ்வில் உயர்ச்சி காணவேண்டும்.

இதுவே தன்னலங் கருதாது அன்புசெய்யும் தாயின் உருவிலே இறை சக்தியை வழிபடும் பண்பாக அமையவேண்டும். கருணைக் கடலான அன்னையின் அருளையும் அரவணைப்பையும் அடைய தாய்மையைப் போற்றுவோம்.

எதையும் தாங்கி இனியதே செய்யும் பெற்ற தாயின் உருவிலே இறைசக்தியைப் போற்றும் வாழையடி வாழையாக வழக்கிலுள்ள இந்துக்களின் வழிபாட்டு மரபு மனித மனங்களில் மாசுபுகாது காக்கும் என்பது திண்ணம். ☑



* சத்தியப் பத்திரம் தயாரித்திட

* ஸ்பொன்சர் படிவங்கள் நிரப்பிட

* பிரதிகள் அத்தாட்சிப்படுத்திட

# கனக மனோகரன்
# KANAHA MANOHARAN

**(Lawyer - Sri Lanka)**
**(Commissioner - Canada)**

சட்டத்தரணி (இலங்கை)

சத்தியப் பிரமாண ஆணையாளர் (கனடா)

**Legal Assistant of John M.Guoba (Barrister & Solicitor)**

**Tel: (416) 531 1650 Fax: 416 531 3466**

email: kanahamanoharan@gmail.com

**மாகாண குற்றவியல் மன்றுகளில் தோற்ற அங்கீகாரம் பெற்றவர்**

*அகதி வழக்குகள், வீடு வாங்குதல் விற்றல்
*குற்றவியல் வழக்குகள்
*உரிமையியல் பணமோசடி வழக்குகள்
*துரித விவாகரத்து, ஸ்பொன்சர் மேன்முறையீடுகள்

**ஆகிய பன்முகப்பட்ட துறைகளில் அனுபவம் நிறைந்த முன்னணி சட்டத்தரணிகளின் சட்ட உதவியாளர்**


இரு இடங்களில் பணிமனை

ஏழு தினங்களிலும் வேலை - கூடியநேர சேவை

**Kennedy/Eglinton & 14th Avenue/9th Line**
**720 Kennedy Road (# 311), Toronto, Ontario M1K 2B7**

# SVKRK JOTHISHAM

## மீனாட்சி இந்துமத சேவை




**கனடா இந்து மாமன்றம்**
**உவகையுடன் படைத்திடும்**
**"சர்க்கரைப் பொங்கல் 2009"**
**சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறோம்.**


பிரதிஷ்ட கிரியாமணி, ஜோதிடமாமணி

**சிவஸ்ரீ விஸ்வநாத ரெங்கநாதக் குருக்கள்**

இந்துமத குரு

ஜோதிடர்

கனடிய திருமணப் பதிவாளர்

Tel: 416 570 4763


Fax: 1 866 266 5618

website: svkrkjothsham.com

Email: info@svkrkjothisham.com

# The Story of Periyapuranam

**Kumar Punithavel**



Anabaya Cholan was the king of Chola Kingdom iin South India. He was an excellent king and all his citizens loved and revered him like God himself. He was not only a righteous king, but at the same time he had none equal to him in valour. King Anabaya one day called his chief minister and requested him to clear three doubts. When king had doubts it was the duty of the chief minister to clear them. His chief minister was a very elderly wise man, who always found good answers for the king's questions. The three questions raised by the king were;

1. What is bigger than a mountain?
2. What is bigger than the world?
3. What is bigger than the ocean?

The minister felt there must be something more than what appeared on the surface of the question, and he asked for time, and promised to find the answer to the riddle by next day.

When he got home, he started contemplating over the three questions of the king. However much he considered he couldn't find a suitable answer. He couldn't sleep the whole night because of deep thought. Very early in the morning he got up and sat down under the Neem tree at the back yard still contemplating on the questions the King had asked. His young son Arulmolzithevan seeing his father's worried face asked him what was bothering him.

The elderly minister told him about the three questions and told he is finding it difficult to get an answer that cannot be refuted by the king. The son smiled at his father and told him that he would be back in an instant and went into the house.

He returned shortly with a small note with three couplets from the holy Kural. When the elderly wise minister read through he realized that the couplets from the Kural were the best possible answers, for the three questions. Armed with the small note the minister went to the king and handed it to the king. Reading through the note the king was very delighted and praised the Minister saying "It is really

smart of you to get the best answer possible and that too from the holy Kural.

The minister meekly told the king "My lord it was not me who got the answer, but my son Arulmolzithevan, who came up with the answer. The king was really surprised that a small boy was so clever and he read the couplets again.

In his station, all unswerving, if man self subdue,

**Greater be than mountain** proudly rising to the view. (124)

A timely benefit, - though thing of little worth

The gift itself, - in excellence **transcends the earth**. (102)

Kindness shown by those who weigh not what the return may be;

When you ponder right its merit, it's **vaster than the sea**. (103)

He was so enthralled that he sent an entourage from the palace and invited the young lad to his court. He not only praised and honoured him but offered him the position of chief minister as his father had already expressed his desire to retire. The lad after discussing with his father, accepted the offer, and performed official duties well as chief minister to the satisfaction of the king and the citizens alike. The king was very pleased with his young chief minister he bestowed on him the title 'Uthamach Cholap Pallavar'.

The young Minister was an ardent devotee of the Lord Shiva, the deity in Thirunageswaram. As it was impossible for him to travel daily to Thirunageswaram he built an exact replica of that temple in his own home village and gave it the same name and performed regular Poojas to the deity.

A good minister is supposed to guide the king not only on royal matters but also in his private life. He is expected to be a good guide and model. A good minister will be a friend, philosopher and guide to the King. When a king doesn't have some one to hold him back when he is doing things wrongly will perish even without an enemy as stated in the 448th Kural;

The king with none to censure him bereft of safeguards all,

Though none his ruins work shall surely ruins fall.

The king Anabaya Cholan was well versed in Tamil, and was an ardent reader of Tamil Lliterature. He liked the book Seevaka Sinthamani one of the five Kapiyams of grand Tamil literature. It was undeniably a wonderful literature in Tamil. But its erotic theme is not uplifting. It saddened Sekilar that the king was wasting his valuable time indulging in such futile effort of reading a worthless book. The book was written by a great Jain saint by the name Thiruthakkathevar. It bothered our minister that the great Hindu king might be influenced to embrace Jainism which does not believe in the concept of God.

Sekilar went up to the king and told him, "Sir, Your ancestors had been strong believers in God, but you are indulging in literature written by a Jain who does not believe in God. You should be spending your time in reading in good Saiva literature. That will give you true peace of mind"

The king in turn asked the minister, "If you say it is a flawed literature then do tell me what is a superior literature so that I could enjoy reading during my free time". In reply the minister observed that in Thiruvarur by the grace of Lord Shiva the Saint Suntharar had composed a short anthology comprising of all the sixty three Saiva saints. By the divine grace of Polla Pilayar of Thirunaraiyur expounding the meaning of the anthology to Nambiandar Nambi a Saiva saint, who had later composed an anthathi (A form of poetic literature where the last word of the preceding verse becomes the first word for the next).

The Chola emperor was very keen to know how the saint Nambiandar Nambi came about to be initiated by Lord Ganesha. The minister described the incident in detail.

In Thirunaraiyur Polla Pilaiar temple, the chief priest was from an Athi Saiva clan. The word Polla means that which was not sculptured. The main deity in the temple was found naturally and not was sculptured. Nambi was the son of the priest, and one day the father had to go to another city and stay over night. He requested his son to perform the usual pooja and make the offering to the deity. Nambi too performed the pooja and made the offering. When he observed the stone statue of the deity did not come and eat the food offered he thought he had made a mistake in the pooja. Nambi was greatly distressed, and with tears rolling down his eyes went to pound his head on the granite step of the alter. At the last moment there was a celestial voice that said 'Nambi wait'. The Lord appeared in person and ate the food that had been offered.

Nambi prostrated on the ground and innocently made the appeal; 'My Lord I am already late to school and the teacher will punish me, out of your benevolence to-day you be my teacher'. The kind Lord was greatly taken up by the young lad's innocence and faith, agreed to teach him. When Lord Ganesh the personification of knowledge and benevolence agreed to teach the child, he became all knowing immediately. He with the newly acquired knowledge sang the great eulogy 'Thiruvirati Manimalai' praising Lord Ganesh.

Hearing about the miracle that Nambi has been blessed by Lord Ganesh, the great Chola emperor Rajarajan, with offering to Lord Ganesh came to Saint Nambi and implored him to make the offering to Lord Ganesh on his behalf. Lord too obliged the devotee and ate the food that was offered.

The emperor appealed to saint Nambi that he should unravel the psalms of the triads of Saiva saint so that the future generations may benefit by singing them. Saint Nambi too beseeched Polla Pillaiar to reveal the location and means of obtaining them.

"Dear devotee, the collection of songs is stored in the room with doors marked with the hand print of the triads in Thillai". The kind Lord also enlightened the devotee Saint Nambi about the biographies of the triad saints.

The emperor together with Saint Nambi went to Thillai to retrieve the script. The custodian of the temple refused to open the room until all three Saints had come together to retrieve the script.

The Emperor performed pooja to the main deity of the Thillai temple and had prayers to the image of the triad Saints images, took the images around the streets in a procession and brought to the door of the locked room and told the custodians that the three have come together and to open the door. All were pleased and the custodians opened the door.

The devotees assembled were in for a great shock. Many of the scripts had been destroyed by white ants. Indeed the assembled were greatly distraught by the finding. At that time a voice was heard which said 'Leaving the ones relevant to the present time, the balance has been destroyed'. The king requested Nambiandar Nambi to arrange and codify all the scripts. He then grouped all the psalms into eleven groups called 'Thirumurai". The word literally means holy path. He also composed a song with eighty nine verses giving a summary of the lives of the Shiva's disciples, and named the anthology 'Thiruththondar Thiruvanthathy. Saint Nambi had used the short compilation by St Sundarar 'Thiruthondar thokai'.

Hearing all these details the Emperor requested that Sekilar should expand and compile respective biographies of these holy men. The king offered all assistance, financially and otherwise, for this noble effort.

Agreeing to embark on the noble task, he desired that he should pray and get the blessing of Lord Nadarajah, and live in Thillai till the task was completed. The King agreed to the suggestion and promised he would be relieved from all state duties until the venerable task is complete.

Reaching Thillai, Sekilar prayed to Lord Nadarajah, and asked for his guidance. There was

a celestial voice heard from the heaven mentioning "Start with the word **'Ulakelam'** and compose the great epic of my devotees". Using that word the great Sekilar started compiling the biographies of the sixty three saints. To compile the biographic details of the saints it took 4,253 verses. The last word of this epic too was **'Ulakelam'** the same as the first word of the epic. The name given to the composition by the composer was "Thiruthondar puranam" meaning epic of holy devotional volunteers.

The emperor was living elsewhere in the capital, but kept himself informed about the development of the great epic. From time to time he would send messengers to Thillai and be informed how far the project proceeded and how much more time was needed. When he was informed of the completion of the epic the emperor immediately proceeded to Thillai with an entourage to honour the great saint poet for his wonderful epic.

Accompanied by the great poet minister, the emperor went to the temple of Lord Nadarajah in Thillai. When praying a voice was heard saying 'I have given the first word for the great epic. May you hear the rest of it and be blessed for your contribution to it'.

It was the custom then that, any new composition should be read in front of a learned panel of poets in the royal court and with the approval of the panel the king would give his assent. The king true to tradition made elaborate arrangement for the reading of the epic in the golden domed temple in Thillai. Distinguish guests were invited for the ceremony. Being a long epic it took a whole year, starting from Chithirai thiruvathirai to next year Chithirai thirvathirai.s for the saint poet to read and elaborate on the 4,253 verses. At the end of it every one assembled unanimously agreed it was a great book, as great as the four Veda's. They praised it as the fifth Veda.

On acceptance, the King, took the book and Sekilar the author, on his royal elephant with the king fanning poet like a servant. The Shiva devotees with the eleven thirumurai codified by Nambiandar Nambi made Thiruthondar Puranam as the twelfth Thirumurai. At the end of all the celebrations, the saint poet Sekilar sought permission from the king, to relieve him from the ministerial duties, as he wished to spend the rest of his life in the surrounding of the Thillai temple where his heart was totally lost. Today the book is more commonly known as Periya Puranam. It is a historical book giving an insight of the life of the people nearly thousand years ago in the Tamil home land.

In Periya Puranam the biography of sixty three saints are narrated in poetic form. The cosmopolitanism of Saiva religion can be seen from the fact that the saints belong to various casts and professions. Thirteen of the sixty three saints are vellala or Farmers, twelve are Brahmins, six are Kings, five are Chieftains, five Merchants, four Adivasis, two Sheppard, one person each belongs to the following trades namely, washer man, potter, weaver, warrior, Chukler, Harijan, fisherman wandering minstrel, hunter Mamathira Brahmin. The six of the saint's casts are not known. Three of the saints are women.

In this great book on the fifth chapter of the first book Sekilar has brought out the common traits of these saints as they don't experience poverty or affluence and they treat alike a piece of tile and gold . They worship God out of pure love and not in a sprit of bargaining with a view to get any worldly pleasure or even Moksha or liberation. Any one who wants a role model for their life could find it in these saints. Most of them were house holders and attended to day– to –day work connected to their professions, but their central thought revered God. They held firmly to certain principles in life, in manifestation of their love of God and no sacrifice was too great for them in holding fast to the principle. One saint gave up his eyes, another his life, another sacrifices his affection for his child or wife, yet another gave the pleasure of youth, and in this way they proved their worth by the test of sacrifice. God ultimately manifests himself to them and showers his Bliss. These saints performed many miracles which we shall see in the succeeding pages.

# சொல்லற்கரியானைச் சொல்லும் திருக்கோவில்கள் மூன்று

திருமதி சகிதேவி கந்தையா

தொன்மை, வியாபகம், பிற மதங்களை மதிக்கும் பெருந்தன்மை, புதுமை எனத் தனி ஒருவரால் அல்லாது சிந்தனைச் செழுமையால் மாத்திரம் உருப்பெற்ற எம் சமயத்தின சிறப்புகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஞானிகள் பலர் வெவ்வேறு (இந்திய) மொழிகளில் வெவ்வேறு காலப்பகுதியில் திருவாய் மலர்ந்து அருளிய பக்திப் பாடல்கள் (mystic poetry) பொருட் செறிவாலும், அவற்றிற்குரிய பண்களான இசை இனிமையாலும் உள்ளத்தை உருக்கி மனதை ஒருமுகப்படுத்தி பேர் நிம்மதியாம் 'உறக்கத்தில் ஆழ்த்தும்' தன்மையன. ஆனால் என்னதான் தத்துவங்கள், பக்திப் பாடல்கள், சிந்தனைச் செழுமையென சொல்லற்கரியானைச் சொல்ல முயன்றாலும், ஓர் உரு, ஒரு தன்மை என ஏதுமிலானை விளக்கி வந்தாலும், சொல்லற்கரிய இறை தத்துவத்திற்கு, உருவிலிக்கு உருவம் கொடுத்துத் துலக்கிநிற்கும் எம் திருக்கோயில்கள்தான் எம் சமயத்தின் பெருமைக்கு நிலைபெற்ற ஸ்தூல சான்றுகளாக இருக்கின்றமையை மறுக்க முடியாது. புகழ்பூத்த மூன்று திருக்கோயில்களைப் பார்ப்பதன்மூலம் புதுமையை, கால வளர்ச்சியின் சிந்தனை மாற்றத்தை எங்ஙனம் நாம் ஏற்று மதிக்கிறோம் என்பதைக் காட்டும் ஒரு முயற்சியே இக்கட்டுரை.


கோவில்கள் என்றதும் சோழப் பேரரசு அதன் கருவூலமான சிற்ப எழில்நயம், இந்துமா சமுத்திரத்தில் அதன் கடற்படை ஆட்சியின் விரிவு கம்போடியா, கடாரம், சுமத்திரா என பல்வேறு நாடுகளைத் தொட்டமை இவையெல்லாம் எம்முன் பெருமைதந்து விரிகின்றன.

## கம்போடியாவில் அங்கோர் உவற் திருத்தலம் (**Anghor Wat**)

கிழக்காசியாவில் கம்போடியாவில் 13ஆம் நூற்றாண்டில் உலகில் இன்றுவரை எழுந்த இந்துக் கோவில்களில் முதல்நிலை வகிக்கும் மிகப் பெரிய கோவிலை இராஜராஜ சோழன் இளவல்கள் எழுப்பினர் (The biggest Hindu Temple in the World) கஞ்சா கடத்தும் கும்பல் (drug trafficing) கமரூச் Kamer Rouge வன்முறை எனப் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்தது இந்த மட்கல்லாலான(sand stone) தலம். காடு மண்ட சிங்கம், புலிகள் (இறைவன் இவர்களிலும் உளன் எனும் எம் சிந்தனையின் விளக்கமாகப் போலும்!) பரந்த மண்டபங்களில் படுத்துறங்கின. இவற்றையெல்லாம் எதிர்கொண்டு இன்று 30,000 மக்கள் தினம் வந்துபோகும் பேரெழில் நிலையாக இது விளங்குவது அதிசயமே!

அங்கோர் திருத்தல அமைப்பு கொஞ்சம் வித்தியாசமானது. மத்தியில் பொன்முகடுகள் பளீரிடும் மிக உயர்ந்த கோபுரம் (படத்தில் உள்ளபடி) மேரு மலையின் பிரதியாய், இத்தூல பிரபஞ்சத்தின் சமய உணர்வின் திரண்ட உருவாய் நிற்கிறது. வழமைக்கு மாறாக மேற்கு நோக்கி அமைந்த இத்திருத்தலம் "ஹரியும் அரனும் ஒண்ணு" எனும் சாதாரண கூற்றை விளக்க விஷ்ணு திசையை நோக்குகிறது.

அங்கோர் வற் கோவில் முகப்புத் தோற்றம்



இருமருங்கும் உயரமான, மத்திய கோபுரத்திற்குச் சற்றுக் குறைந்த இரு கோபுரங்கள். நீண்ட வரிசையில் படிகள் அமைக்கப்பெற்று செங்குத்தாக உயர்வது ஏறுவதற்குச் சிரமம் தருகிறது.

கமரூச் போராளிகள் இத்தலத்தை தம் மறைவிடமாகக் கொண்டு, பாதுகாப்பிற்காக கண்ணிவெடிகளைத் தாட்டனர். உலகின் கவனத்தைக் காலப்போக்கில் இச்சிவத்தலம் கவர, UNESCO, Bonnie Burtham (தலைவர், Non profit organisation, New York) இவர்கள் முயற்சியால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, காடுவெட்டி, பாதையிட்டு, சிதிலங்கள் நேர்செய்யப்பட்டு இன்று இத்திருத்தலம் மிகமிக அவதானமாகப் பராமரிக்கப்படுகிறது. அங்கு போவோர் சித்திர வேலைப்பாட்டின் நுண்மையால் கவரப்பட்டு, தொட்டு உரஞ்சி ஆர்ப்பரிப்பதால் அதன் நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்த தேர்கள், அவற்றில் சவாரிசெய்யும் போர்வீரர்கள் உருவங்கள் சிதிலமடையும் அபாயம் உள்ளது. பல்வேறு அன்பர்களின் முயற்சியால் இத்தலம் ஓரளவிற்குத் திருத்தப்பட்டுள்ளது. இந்த வருடம் ஒரு மில்லியன் மக்கள் அங்கோர் உவாற்றைப் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கிறார்கள்.

"Now it's suddenly become the destination where everybody wants to be at the end of the day to see the sunset and see the view which are spectacular" என்கிறார் Burntham. இவருடைய அமைப்பிற்கு 1 மில்லியன் டொலரை புஷ் அரசாங்கம் கொடுத்துள்ளது. ஒபாமாவும் இப்பணியைத் தொடர்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சோழப் பேரரசு நிர்மாணித்த இத்தலத்தை அதன் புனிதம் குன்றாது பல்வேறு நாட்டு மக்களும் வந்து பார்த்து மகிழ பாதுகாக்கும் அமெரிக்கப் பேரரசின் செயலைப் போற்றுவதா அல்லது எவ்வித வன்முறையுமின்றி, எம் சமயம் கூறும் தத்துவங்களில்

மாத்திரம் ஈர்க்கப்படும் பிற மதத்தவரை வியப்பதா? சிவனே! என்ன அதிசயம் இதுவெலாம்?

தென்கிழக்கு ஆசியாவின் கம்போடிய நாட்டின் அங்கோர் உவாட் பார்த்தாயிற்று. இனி மேற்கு நோக்கி இலண்டன் மாநகர் பறப்போமா? 20ஆம் நூற்றாண்டின் விடியல். ஹீத்துறா விமான நிலையத்தில் இறங்கி சொகுசு வண்டியில் நீட்சன் நகர் சென்றால் - அட, இது என்ன அதிசயம் எம்முன் எழுகிறது?

## சுவாமி நாராயண மந்திர்

தொன்மைச் சிற்ப சாத்திரத்திற்கமைய 2828 தொன் Bulgarian lime stone 2000 தொன் இத்தாலியன் அம்பாஜி மாபிள் என்பன நுட்பமாகச் செதுக்கப்படுகின்றன 1500 கலைஞர்களால். எந்த இரும்புத் தூணோ கம்பியோ உபயோகிக்காமல் இலண்டன் கொண்டுவரப்பட்ட சிற்பத் துண்டுகளை மிகப் பொறுமையுடன் நுட்பமாக ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் பொருத்தி பிரமாண்ட பளீர் வெண் பளிங்குக் கோவிலை நிர்மாணிக்கிறார்கள். நாராயண பக்தர்களில் ஐந்தாவது மகாராஜாவான பிரமுத் சுவாமி மகாராஜாவின் புனித அருளே இத்தலத்தின் திரு அமைப்பின் ஆணிவேர். விக்னவிநாயகன், சிவன் பார்வதி, இராமர் சீதை எனப் பல்வேறு மூர்த்திகள். அமைப்பு வட இந்தியக் கலைநெறி. பேரமைதி, ஜில் என்ற ஒரு தண்மை, புனிதம் தரும் இனிமை என இத்தலம் மிகக் கவர்ச்சிகரமானது. அரச பரம்பரையின் இறுகிய கட்டுப்பாட்டில் வளர்ந்தவர் இளவரசர் சார்ள்ஸ்(Prince Charles). மன அமைதி வேண்டின் அவர் வருவது இத்திருக்கோவிலுக்கு. மணங்கமழ் மாலையும் சந்தண குங்குமம் தவழ் நெற்றியுமாய் இவரைப் பார்க்கும்பொழுது 20ஆம் நூற்றாண்டில் எம்சமயத்தின் பெருமையின் ஒரு புதுமுகம் தெரிகிறது. பல்நாட்டில் இருந்தும் வருவோர் புனிதமான எம் சமயத்தின் விரிவை, தொன்மையை, நூல்களை அறிந்துகொள்ள ஏதுவாக இத்தலத்தின கீழ் தளத்தில் விஸ்தாரமான கூடத்தில் ஒரு பொருள்பொதிந்த கண்காட்சியை (Exibition) அமைத்துள்ளனர். இந்து சமயத்தின் விளக்கமாக எம் சமயத்தின் தொடக்கம், வளர்ச்சி, புகழ், கோட்பாடுகள், தனி மனிதனுக்கு அதன் அத்தியாவசியம், பரந்த உலகிற்கு அதன் பங்களிப்பு எனப் பல்வேறு நிலைகளில் படங்களுடன் விளக்கங்கள் அருமையாய், அமைதியாய் தெளிவாய் அமைந்துள்ளன.

## குவாய்ப் பதி இறைவன் கோவில்

பசிபிக் பெருங்கடல் மேற்கின் எல்லை. இதில் அமெரிக்காவின் மேற்குக் கடற்பகுதியில் அமைந்த தீவுகளில் மரகதப் பச்சை வண்ணத்தில கண்ணுக்கும் மனதிற்கும் பெரு விருந்தாக அமைந்த சிறு தீவு குவாய். இயற்கையின் எழில் முழுவதையும் ஒரே இடத்தில் அள்ளி வீசிய திருவருள் தானும் அங்கு வதியவேண்டிப்போலும் யாழ்ப்பாணம் உலகுக்கு அளித்த பெருநிதி குருபரன் யோகர்சுவாமிகளின் நேரடி யோக தீட்சைபெற்ற குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகளின் உள்ளத்தில் தன்விருப்பை உணரச்செய்தது. ஆணை கிடைத்ததும் உடனே செயற்பட்டார் குருதேவர். 553 ஏக்கர் நிலபரப்பைச் சொந்தமாக்கினார். காடுகளை வெட்டினார். பூந்தோட்டம், கனிமரங்கள், உருத்திராக்க மரங்கள் என வைலுவ நதிக்கரை ஒரு தெய்வீக தலமாயிற்று.

இங்கு மையமாக 21ம் நூற்றாண்டில் முற்றிலும் கருங்கல்லாலான திருத்தலமாக சன்மார்க்க இறைவன் கோவில் நிர்மாணிக்கப்படுகிறது. இராஜராஜ சோழனே குருதேவர் என்று கொள்வர் பலர். தஞ்சாவூர் பெருங்கோவிலை நிர்மாணித்த ஸ்தபதி வழித்தோன்றலான டாக்டர் கணபதி ஸ்தபதியே இப்பணிக்குப் பொருத்தமானவரெனக் குருதேவர் கணித்தார்.

கருங்கற் பாறைகள் மிக நுட்பமாக அவதானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்லாயிரம் கலைஞர்கள் பங்களூரில் சிரத்தையுடன் கையாலேயே பொழிந்து வடிவமைக்கும் பல்வேறு பகுதிகளும் கப்பல்மூலம் கொண்டுவரப்பட்டு குவாயில் சிரத்தையுடன பொருத்தப்பட்டு படிப்படியாக உருப்பெறுகிறது இறைவன் கோவில். சுற்றுப் பிரகாரம் கிழக்கு, மேற்கு, வடக்கு என மூன்று பக்க வாயில்கள் மீதும் 26 அடி விமானங்கள். 34 அடி உயரமுள்ள இரண்டடுக்கு விமானம் பிரதான நுழைவாயியில் பொன்னோடு வேய்ந்த மேற்பரப்பு இசைத்தூண்கள் இரண்டு, கருங்கற் சங்கிலித் தொடர், சந்தனக் கதவு என மிகுந்த கலைநயத்துடன் நிர்மாணிக்கப்படுகிறது. சகல சிறப்புக்களையும் ஒருசேரப்பெற்றுள்ள இச்சிவாலயம் இந்தியாவிலுள்ள சிறப்பான ஆலயங்களில் உள்ள சிறந்த வேலைப்பாடுகளைப் பெற்றதோடு சோழர்காலச் சிற்பங்களின் உன்னதமான சிற்பங்களும் கலை மற்றும் தத்துவம் நிறைந்த சிதம்பரக் கோவில் போன்று தெற்குப் பார்த்த சிவன் கோவிலாக அமைந்திருப்பது சிறப்பு.

இறைவன் கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்கென ஸ்படிக லிங்கமாக ஒரு மூலவர் குருதேவருக்கு 1987ல் கிடைத்தார். ஆறுகோணங்கள் உள்ள இந்த ஸ்படிகலிங்கம் 700 இறாத்தல் எடையும் 39 அங்குல உயரமும் உள்ளது. சுயம்புவாகத் தோன்றிய - உலகிலேயே மிகப் பெரிய ஸ்படிகலிங்கம், குவை ஆதீனத்திலுள்ள சிவநடராசர் கோவிலில் நித்திய பூசைக்குரியதாய் இறைவன் கோவில் மகா கும்பாபிஷேகத்திற்காகக் காத்திருக்கிறது. தற்பொழுது மிக அடக்கமான சிவ நடராஜர் கோவிலில் (24 மணித்தியாலமும் உபாசனை உண்டு) வைக்கப்பட்டுள்ளது. 108 நடராச தாண்டவ வடிவங்களை இச்சிறுகோவிலில் பார்க்க முடிகிறது.

ஆகம விதிமுறை இம்மிபிசகாது, கலைநயம் சிறிதும் குறைபடாது குருபக்தி ஒன்றையே ஆயுதமாகக் கொண்டு கற்பாறைகளைக் கனியவைக்கும் இம்மாபெரும் முயற்சியின் பின்னணியில் எவ்வித ஆரவாரமும் இன்றிச் செயற்படுபவர்கள் எம்மை வியக்க வைக்கிறார்கள்! எம் சமயத்தின் ஆழ்ந்த தத்துவங்கள், அதன் பெருமை நோக்கால் கவரப்பட்டு, படித்து விளங்கி, பின் மிகச் சிரமப்பட்டு விஷேட ஆணைபெற்று – (இந்துக்கள் பிறக்கிறார்கள் - மாற்றப்படுவதில்லை) தாமாகவே எம் சமயத்தைத் தழுவியவர்கள். பெரும்பாலும் அமெரிக்கர்கள் மிகமிகக் கட்டுக்கோப்பான குருகுலவாசம், வேதப் பயிற்சி, கடும் தியானப் பயிற்சி என புடம்போடப்பட்டு குருத்துவம் பெறுகிறார்கள். இத்திருத்தலப் பணி 80 வீதம் இவர்கள் பங்களிப்பு. பிறபணி – பிரதானமானது **Hinduism Today** எனும் மிக உயர்ந்த சஞ்சிகையை வடிவமைத்து உலகெலாம் பரப்பல்.

“இறைவன் கோவில் கும்பாபிடேகம் எப்பொழுது?”

“இறைவனே அமைக்கும் கோவில். அவனே நாட்குறிப்பான்”

எனப் புன்னகைக்கிறார் தற்போதைய போதிநாதர் வேலன் சுவாமிகள். கும்பாபிடேகத்திற்குப் பின் மேற்கில் உள்ள திருத்தலங்களில் இங்குதான் பெருந்தொகைப் பக்தர்கள் வருவார்கள் என்பது இவர்கள் திடமான நம்பிக்கை.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் உருண்டோடும் இவ்வுலகில் எம் சமயத்தில் பழமையும் பேணப்படுகிறது. புதுமையும் மேளதாளத்துடன் வரவேற்கப்படுகிறது! இது பெருமையாயில்லை?

“முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனே!”

# தெவிட்டாத இன்பம்

மலர் சிதம்பரப்பிள்ளை

போதலர்ந்து தேன் சொரியும் பொங்கு திருவாசகத்திற்கு
ஏதும் ஒருவாசகமும் இணை இல்லை என்றிடலாம்.

திருவாத வூரர் சொல்ல சிற்றம்பலவர் எழுதிப்
பெரும்பேறு பெற்றதிந்த மணிவாசகம் ஆகும்.

தேன் என்றால் நா இனிக்கும்
திருவாசகம் என்றால் உளம் இனிக்கும்

தித்திக்கும் வாசகத்தைத் தீந்தமிழில் யாத்தெமக்கு
வைத்தமணி வாசகரை வாழ்த்தி வணங்கிடுவோம்!

மணிவாசகம் தன்னை மணிமணியாய்க் கோர்த்தெடுத்து
ஒருவாசகமாக உருவாக்கி உருக வைத்த

திருவா சகத்திற்கு உருகா தோர்
ஒருவாசகத் திற்கும் உருகாதோர் என்றிடுவர்.

உடற்பிணியைத் தீர்ப்பதற்கு உதவுகின்ற தேனினைப்போல்
உயிர்ப் பிணிக்கு மருந்தாக உயர்ந்த திருவாசகமே!

பலாச்சுளையை நறவத்தில்
பதித்தெடுத்துத் தருஞ்சுவையை
பாக்களது ஒவ்வொன்றும் படிக்கச் சுவைப்பதன்றி

பக்தி தனை வளர்த்துப் பரவசத்தில் எமை ஆழ்த்தி
சக்தி தனைக்கொடுத்து முக்திபெற வைக்கிறது.

ஐம்பத் தொரு பதிகம் அடக்கியுள்ள வாசகத்தில்
அடங்கி யுள்ள பாடல்களோ அறு நூற்றைம் பத்தாறு.

அத்தனையும் முத்துக்கள் ஆழமுள்ள சத்துக்கள்
அணு அணுவாய் அவன் பெருமை
அகழ்ந்துரைத்த தத்துவங்கள்!

திருவாசகம் தனிலே சிகரமதாய் திகழ்ந்து நிற்கும்
சிவபு ராணம் இங்கே சிறப்புப் பெறுகிறது.

சிவன் நாமம் தன்னுடனே திரு மந்திரம் ஐந்தும்
சேர்ந்தமைந்து தொடங்குகின்ற நுழை வாசலாகி எமை

நுழைத்து உள்ளே இழுக்கிறது
அடுத்து வரும் ஒவ்வொன்றும்
எடுத்திசைக்க இனிப்பவையே!

கடல் கடக்க உதவுகின்ற கலம்போலப் பிறவி என்ற
பெருங் கடலை நீந்துதற்கு பெருமை மிக்க தெப்பமிது.

கல்லைக் கனியாக்கி அல்லல் தனை யறுத்து
தொல்லை வினை நீக்கி எல்லை யற்றோன் கழல் நண்ண
வல்லமையைத் தருவதிந்த வண்ண மணி வாசகமே!

சாக்கடை நீர்கூட சங்கமித்தால் கங்கையுடன்
போற்றற் குரிய நல்ல புனித நீராகிறது.

பொல்லா மனத்தினரும் நல்ல திருவாசகத்தை
உருகிப் படித்து வரின் - இறை
அருளில் உறைந்திடுவர் உள்ளத்துறைந்திடுவர்

சொல்லழகும் பொருளழகும் சொக்கவைக்கும் இசையழகும்
அருள் அழகும் ஒருங்கமைந்த அழகு திருவாசகமே!

சுடச்சுட ஆவின் பாலோ சுவை அதிகரித்தல் போல
அடிக்கடி பாடப் பாட அவனருள் பெருகு மன்றோ!

கிருஷ்ண பரமாத்மாவுக்கு கீதை அதுபோல
திருவாத வூரருக்கு திருவா சகமாகும்!

பலங்களில் உயர்ந்தது ஞான பலம்
ஞான பலத்தினை நன்கு ஊட்டி

ஆன்ம பலத்திற்கு ஆணி வேராக
அசைக்க முடியா அவனருள் தன்னில்
லயிக்க வைப்பதித் திரு வாசகம்.

சுடர் விளக்கிற்கு தூண்டுகோல் போன்று – அவன்
திருவருள் பெற்றிட உதவுகோல் இதுவே!

மானிடர்க்கு வழிகாட்டி மன இருளுக்கு ஒளியூட்டி
ஞானிகளாய் மிளிர்வதற்கு நல்லதொரு அறிவூட்டி!

மாயையை விலக்கி மனத்தினைத் துலக்கி
ஆசையை அகற்றி அரன் இன்பம் எய்திட


பக்குவம் அளிக்கும் அற்புத வாசகம் - அது
இத்திருவாசகம் - அது மெய்ப் பொருள் வாசகம்

விலங்கு மனத்தை விமலன் பாற் செலுத்தி
கலங்கு மனத்தைக் கட்டி இழுத்து

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போல
சிவனடியார் சிந்தை எல்லாம் சிவனோடு ஒன்றிவிட

ஊனினை உருக்கி உள் ளொளி பெருக்கித்
தேனினைச் சொரியும் தெவிட்டாத இன்பம் - இத்
திருவாசகமே – தெவிட்டாத இன்பம்!

☑



# எமக்கூடாக மோட்கேஜ் எடுப்பது இதுபோல இலகுவானது...

CENTUM™
Veedu Mortgages Inc.

201-1711 McCowan Road, Toronto ON M1S 2Y3



**Das Narayanasamy** AMP
Mortgage Specialist

**Cell: 416-543-6614**
Business: 416-759-1818
Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

# ஈகை திறன்

குப்பிழான் தங்கம்

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றார் மகாகவி பாரதி. சொந்தங்கள் துயர்கண்டு, சிந்தை நொந்து, உளங்கனிந்து அவர்களுக்கு இனியவை செய்தலே ஈதல் ஆகும். நாம் செய்த வினைக்கேற்ப பிறவி எடுப்பதாக இந்துசமயம் கூறுகின்றது. இன்னும் நாம் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்பவே வாழ்க்கையில் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம் என்கிறது. அதனாலேதான் "தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்கிறது பழமொழி. இன்னும் "மேலைத் தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்" என்கின்றார் ஔவையார். இதிலிருந்து ஊழ்வினைப் பயனை நாம் நம்பக்கூடியதாக இருக்கின்றது.

நாம் செய்த ஊழ்வினைப் பயனோ அன்றி உழைப்பின்மையோ முயற்சியோ முயற்சியின்மையோ ஈவோரும் இருக்கிறார்கள். இரப்பவர்களும் இருக்கிறார்கள். பசித்து வந்தோருக்குப் புசிக்கக் கொடுத்து பூரித்திருத்தல் வேண்டும். இல்லத்திலே அதாவது வீட்டிலே இருந்து வாழ்க்கை நடாத்தும் குடும்பமே இல்லறம். இல்லத்தில் இருந்து அறஞ்செய்து உய்தலாகும்; அதுவே நல்லறமுமாகும்.

இரவும் வருகிறது; பகலும் வருகிறது உலகிலே. இன்பமும் துன்பமும் மனித வாழ்வில் வருகிறது. காலம் சூழ்நிலைக்கேற்ப எமக்கு வசதி வரும்போது இன்று, நாளை என்று காலந்தாழ்த்தாது உடனே அறஞ்செய்தல்வேண்டும். இரப்போர்க்கு ஈந்து இதயம் மகிழ்ந்திருந்தனர் அன்று மக்கள். ஈதலை இன்றியமையாததாகக் கருதினர். இல்வாழ்வில் இருந்து செய்யும் கருமங்களில் ஈதலை முக்கியமாகக் கருதினர்; ஏன் அறத்தை உயிரினும் மேலானதாகக் கருதினர் என்பதை கம்பராமாயணத்திலே கைகேயியின் மனத்தை மாற்றும் சூழ்ச்சியிலும்கூடக் கூனி ஈதலை வலியுறுத்தும் பாங்கு மிகவும் அழகாகக் கூறப்படுகின்றது இப்படி:

"தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டுவந் துன்னை இரப்பவர்க் கிருநிதி அவளை
வேண்டி ஈதியோ வெகுள்தியோ விம்மல் நோயால்
மாண்டு போதியோ மறத்தியோ எங்ஙனம் வாழ்தி"

அதாவது, வறுமையால் வந்து உன்னை இரப்ப வர்களுக்கு கோசலையிடம் வாங்கிக் கொடுப்பாயோ? இல்லை என்று சொல்வாயோ? இல்லை என்று சொன்ன துயரால் இறந்து போவாயோ என்று ஈதலின் முக்கியத்துவத்தை, சிறப்பை கவிச்சக்கரவர்த்தி கம்பன் மிகவும அழகாகக் கூறுகின்றார்.

வறுமையென்றால் பணத்தில் வறுமை, உடையில் வறுமை, உடற்பிணி தீர்க்கும் மருந்தில் வறுமை மொத்தத்தில் வறுமையில் வாடும் மக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து உதவுதலே உண்மையான ஈதலாகும். கொழுகொம்பின்றி, தாவிப்படர வழியின்றித் தவித்த முல்லைக்கொடிக்கு பாரி தேர்கொடுத்துப் படரவிட்டான். உணவு கொடுத்தான்; உடை கொடுத்தான்; உறையுள் கொடுத்தான்; கேட்டதெல்லாம் கொடுத்தான். ஈற்றில் தான் செய்த தருமத்தினையே கொடுத்து உயிரையும் கொடுத்தான் உத்தமன் வள்ளல் கர்ணன். தன் பசியைப் போக்கப் புறாவைக் கொல்ல வந்தான் வேடன். அவன் பசியைப் போக்கவும் புறாவின் உயிரைக் காப்பாற்றவும் தன்னையே கொடுக்கத் தராசில் ஏறினான் சிபிச் சக்கரவர்த்தி.

இவர்களின் பெருமை பேசி, ஈதலின் சிறப்பை உன்னி இன்று நம் தாயக மண்ணில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்கப் பாயின்றி - ஏன் நோய்க்கு மருந்தின்றி கொட்டும் மழையில் நனைந்தும் கொதிக்கும் வெயியில் கருகியும் குண்டு வீச்சுகளால் உடல் சிதறியும் அங்கவீனம் உற்றும் பசியால் மெலிந்து ஆயிரம் ஆயிரம் மக்கள் யார் எமக்கு உதவுவார் என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பால் என்ன, பழம் என்ன எதுவும் குறைவில்லை இந்த நாட்டிலே. ஏன் தயங்க வேண்டும் அவர்க்கு ஈவதில்? வசதிபடைத்தோர்க்கு தான தர்மம் என்று விருந்துகொடுத்துச் செலவழிப்பதிலும் பார்க்க, போர்ச்சூழலில் சிக்கித் தவிக்கும் மக்கள் முகம்பார்த்துக் கொடுப்போமாயின் அதுவே உண்மையான ஈதலாகும். இதையே வள்ளுவரும்

"வறியோர்க் கொன்றீதலே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

என்கிறார். அதாவது வறியவர்க்கு வேண்டியதைக் கொடுத்து உதவுவதே உண்மையான தானம். மற்றைய தானங்கள் யாவும் சுயநலனைக் கருதிச் செய்பவைகள் என்று மிகவும் ஆணித்தரமாகக் கூறுகின்றார். பஞ்சக் கொடுமையால் பஞ்சாய்ப் பறக்கும் நம் உறவுகளுக்கு உதவுவோம்; உய்திபெறுவோம்.

பிறக்கும்பொழுது நாம் கொண்டுவந்ததில்லை இச்செல்வம். இறக்கும்பொழுதும் கொண்டு போவதுமில்லை. இடைநடுவிலே நாம் தேடிய செல்வத்தைச் சிவன் தந்ததென்று இரப்போர்க்குக் கொடுக்க வேண்டுமென்கிறார் பட்டினத்தார்.

"பிறக்கும்பொழுது கொடுவந்ததல்லை பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடு போவதில்லை இடைநடுவில்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பனே"

ஈதலில் சிறந்தது ஒன்றுமில்லை. அதனால் ஈதல் செய்குவோம்; இறையருள் பெறுவோம்.

☑

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெங்கும்
அன்னை மொழியை நாளும் பொன்னெனப் போற்றி வாழ்க

அமிழ்தெனும் தமிழைக் கற்று அருங்கலை வளர்ப்போம் நாளும்

# The Co-operators

**Insurance / Financeial Services**

உங்கள் காப்புறுதித் தேவை எதுவானாலும் குறைந்த செலவில்
கூடிய பாதுகாப்புப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்

## Call us for all types of Insurance

| | |
|---|---|
| ** LIFE | ** FARM |
| ** RRSP | ** BUSINESS |
| ** HOME | ** GROUP |
| ** AUTO | ** TRAVEL |

# SENTHOORAN PUNITHAVEL

**Sales Representative**

**Call:**

**Bus: 416 396 0707**
**Fax : 416 396 1221**

# 1265 Morningside Ave, Unit 108
# Scarborough On. M1V 3V9

# தியானம்

திருமதி ஜோதி செல்வராஜா

தியானம் என்பது மோட்சலோகம் போக விரும்புபவர்களுக்கான சாதனை மட்டுமல்ல; குடும்பத்திலே உலகச் சூழ்நிலையில் இருக்கும் ஒவ்வொருவருக்குமே உரியது ஆகும். உடல் பலம், கல்வி பலம், பொருட்செல்வம், உலக அனுபவம் முதலியவற்றால் தீர்க்கப்பட முடியாத அனேக சிக்கல்களை தியானத்தால் தீர்த்துக்கொள்ளமுடியும். வேறு எந்த முயற்சியாலும் மாற்றிக்கொள்ள முடியாத கெட்ட பழக்க வழக்கங்களைக்கூட தியானத்தால் மாற்றிக்கொள்ள முடியும். தீராத நோய்களைக் கூட தியானத்தால் மாற்றிக்கொள்ள முடியும்.

இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையில் இறை நம்பிக்கையே தியானமாக இருந்தது. அதனால் அவர்களுடைய வாழ்க்கைமுறை ஆனந்தமாக அமைந்திருந்தது.

உயர்ந்ததோ எளியதோ தியானம் என்றால் மனித உணர்வு (மனம் அல்ல) தியானிக்கப்படும் பொருளுடன் இரண்டறக் கலத்தல் ஆகும். தியானத்தில் நினைப்பை விட பாவனைதான் முக்கியம். தியானத்தின் பலன்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

1. அவனது உணர்வே தியானிக்கப்படும் பொருளாக மாறுவதால் தியானப் பொருளின் முழுத் தன்மையும் அவனுக்குத் தெரியவரும்.

2. தியானிக்கப்படும் பொருளின் தன்மை, குணம், அவனுள் உண்டாகத் தொடங்கும். உயர்ந்த தியான நிலையில் அவன் ஒரு சிறிய பிரம்மம் ஆகின்றான். அதனால் தியானத்தின் முன் தியானப் பொருளின் நற்குணங்கள், சிறப்பு, பயன் என்பவற்றை நன்கு ஆராய்ந்து தியானம் செய்யவேண்டும்.

3. ஒரு பொருளை நாம் எப்படிப் பார்க்கிறோமோ அந்தப் பொருளில் அந்த மாற்றம் ஏற்படும். இதைச் செயல் தியானம் என்பர். உங்கள் வாழ்க்கையே உங்கள் உணர்வில்தான் தங்கியுள்ளது. அந்த உணர்வின் தன்மையை நீங்கள் மாற்றினால் அதற்குத் தக நீங்களும் உங்கள் குணமும் வாழ்க்கையும் மாறிப்போகும்.

தியானம் என்பது மனதின் இயக்கம் அல்ல. உணர்வின் (consciousness) இயக்கம் என்பதை நாம் புரிந்துகொள்வோம். ஆன்ம உணர்வு மனதைத் தாண்டி வெளியே வருவது அவ்வளவு எளிதல்ல. ஏனென்றால் உணர்வு எப்போதும் மனதோடு சேர்ந்தே இருப்பதாகும். மனநினைப்பில் இருந்து உணர்வு பிரிந்தால்தான் தியானம் கைகூடுகிறது. மன நினைப்பில இருந்து உணர்வைப் பிரிப்பது 'தாரணை' அல்லது 'ஏகாக்ரம்' எனப்படும். தாரணை இல்லாமல் தியானம் வராது.

எதைப்பற்றி தியானிக்க விரும்புகிறோமோ அதைப்பற்றி முதலில் தாரணை செய்யவேண்டும். அதைப்பற்றிய நினைப்பின் தெளிவே தாரணையாகும். ஒரு நிலையில் அதைப்பற்றிய எண்ணங்கள் எல்லாம் தீர்ந்துவிடும். இனி ஒன்றும் இருக்காது. அந்நிலையில் உணர்வு தனியே அப்பொருளோடு இணையத் தொடங்கும். அதுவே தியானம் ஆகும்.

தியானங்களில் பலவகைகள் உண்டு. ஒளித் தியானம், உடல் உறுப்பு தியானம், பக்தி தியானம், பிரணவத் தியானம், உள்முகத் தியானம், செயல் தியானம், பிரம்ம லயத்தியானம், குண்டலினி தியானம் என்பனவாகும்.

சிறப்பாக இங்கு குண்டலினி தியானம் பற்றி சற்று நோக்குவோம். மனித உடலை இயக்கிச் செயல்படுத்தும் மின்கம்பிகள் போன்ற மூவகை நரம்புக் கூட்டங்கள் இருக்கின்றன. அவை புலன் நரம்புகள் (sensual nerves) இயக்க நரம்புகள் (Motor nerves) அனிச்சா நரம்புகள் (Autonomic nerves) என்பனவாகும்.

புலன் நரம்புகள் முன்மூளையில் இருந்தும் (cerebrum) இயக்க நரம்புகள் பின்மூளையிலிருந்தும் தொடங்கி முகுளத்தின் (Medulla oblongate) வழியாக கீழே முதுகெலும்பின் இருபக்கங்களிலுமாக இறங்கி பல சிறு கிளைகளாகக் கிளைத்து உடலெங்கும் பரவியுள்ளன. இந்த நரம்புகளும் சிறுமுதுகு (cerebro spinal system) நரம்புகள் எனப்படும். முகுளத்தின் அடிப்பகுதியிலிருந்து தொடங்கி முன் நரம்புகளுடன் தொடர்பில்லாமல் தனியாகக் கிளைத்து உடலிற் பரவி உடலுறுப்புகளை இயக்குவது அனிச்சா நரம்புகள். இதன் பல கிளைகள் பிண்டங்களின் வடிவாகி, முன்சொன்ன நரம்புக் கிளைகளுடன் சேர்ந்திருக்கின்றன.

உடலின் சில இடங்களில் இந்த அனிச்சா நரம்புகள், மற்ற நரம்புகளின் கிளைகள் என்பன உடல் முழுவதும் இரத்தத்தை வகித்துச் செல்லும் நாடிகளுடன் பின்னியிருக்கின்றன. இத்தகைய சக்தி மையங்கள் ஆதாரங்கள் அல்லது சக்கரங்கள் என்று சொல்லப்படும். இச்சக்கரங்கள் ஏழுவகைப்படும்.

1. மூலாதாரம் (Anus plexus) 2. ஸ்வாதிஸ்டானா (Spinal plexus) 3. மணிபூரகம் (soinar plexus) 4. அநாததா (heart plexus) 5. விசுக்தி (Throut plexus), 6. ஆக்ஞா (Brow centre plexus) 7. சகஸ்ராரா (Brain plexus) என்பனவாகும். இந்த ஆதாரங்களில் உடலைப் பேணி வளர்த்துக் காப்பதற்கான இரசாயனத் திரவங்களைக்

கசியும் மாமிசக் கிரந்திகள் (Duttless glands) இருக்கின்றன.

இவை தியானத்தின் மூலம் ஊக்குவிக்கப்பட்டு நம் உடல், மன, ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கின்றன. நம் உள் உலகம் மாறினால்தான் நாம் இன்று அனுபவிக்கும் அனைத்து வெளி உலகப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.

நம் உடல் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், கர்மமயம், ஆனந்தமயம் எனும் ஆறு கோசஷங்களால் ஆனது. நம் உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்கள் முதலில் பிராணமய கோசத்திலேயே ஏற்படுகின்றது. நாம் பார்த்த ஆதாரங்களும் அமைந்திருக்கும் இடமும் பிராணமய கோசத்திலேயாகும். இச்சக்கரங்களும் நாடிகளும் முறைகேடான வாழ்க்கை முறை, மற்றும் சீரற்ற உணவுப் பழக்க வழங்கங்களாலும் தவறான கண்ணோட்டங்கள், எதிர்மறையான கர்மாக்களின் சுமையாலும் பாதிப்படையும்போது உடல், மனம், உணர்ச்சி, மற்றும் ஆன்மீக ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. எதிர்மறையான எண்ண அலைகளே ஒருவரின் வாழ்வில் எதிர்மறையான சூழ்நிலைகளை உருவாக்குகிறது.

ஆனால், நாம் இச்சக்கரங்கள் மேல் தியானம் செய்யும்போது நம் சக்கரங்கள் அதிர்வடையத் தொடங்குகின்றன. இதனால் நம்முடைய அதிர்வெண்ணும் பூமியின் அதிர்வெண்ணும் ஒன்றாகின்றது. இதனால் பூமியோடு சேர்ந்து இயங்குவதால் நம்முள் நல்ல பிராண சக்தி ஏற்படுகின்றது. இதுவே நம்முள் நல்லாரோக்கியத்தை ஏற்படுத்துகின்றது. ஆரோக்கியமான மனிதனே ஆனந்த மனிதனாவான். ஆனந்தமான மனிதனாலேயே ஆனந்தமான சமூகத்தை உருவாக்க முடியும்.

இக்குண்டலினி தியானத்திற்கு நான்கு முக்கிய அம்சங்கள் உண்டு. ஆசனம், முத்திரை, பீஜமந்திரம், வடிவம் ஆகியவையே அவை.

தினமும் இத்தியானப் பயிற்சி செய்பவர்களின் மூளையில் உறங்கிக் கிடக்கும் பல பாகங்கள் ஊக்குவிக்கப்படுவதால் வாழ்வைப்பற்றிய ஒரு முழுமையான கண்ணோட்டம் கிடைக்கும். அதாவது இப்போது நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் பயம், பாதுகாப்பற்ற தன்மை, எதிர்மறையான எண்ணங்கள், நோய்கள் (காம, குரோத, ரோகம்) என்பவற்றிலிருந்து விடுபட்டு அன்பு, கருணை, நன்றியுணர்வு, சரணாகதி, ஞாபக சக்தி, விழிப்புணர்வு, ஞானம், முக்தி என்கின்ற உயர் சைத்தன்ய நிலைகளை நோக்கிய பயணம் தொடங்கும். இச்சக்கரங்கள் அதிரத் தொடங்கும்போது பஞ்சபூதங்களையும் வசப்படுத்தும் சக்தியும் எம்முள் தோன்றும். ஏனென்றால் பஞ்சபூதங்களும் நம்முள்ளேதான் இருக்கின்றன. இதையே பிண்டத்தில் உள்ளதே அண்டத்திலும் உள்ளது என்பர்.

இந்து சமயம் கூறும் முக்தி நிலையான குண்டலினி சக்தி பிரபஞ்சத்துடன் கலக்கும் நிலையை இத்தியானத்தின் மூலம் சாதிக்கலாம்.

ஒரு தனி மனிதனின் உள்ளுணர்வு மாற்றமே பிரபஞ்சத்தின் மாற்றம் ஆகும். வெற்றியைத் தியானிப்போம்; வெற்றி பெறுவோம். ☑

## நால்வகை வழிபாடு

1. ஸ்துதி: கடவுளை உள்ளுருகி வாயாரப் புகழ்ந்து பாடுதல்.
2. ஜபம்: மும்மூர்த்திகளின் நாமங்களையேனும், புனிதமான பிரணவம் முதலிய மந்திரங்களையேனும் வாய்விட்டோ, வாய்க்குள்ளேயோ உச்சரிப்பதாம். ஸ்துதி, ஜெபம் ஆகிய இவ்விரு சாதனங்களிலும் மனம் சில சமயம் குவிந்தும், சில சமயம் விரிந்துமிருக்கும். இந்நிலையினர்க்கு மனதின் சலனம் எளிதில் விளங்காது.
3. தியானம்: மனதையே வாயாகக் கொண்டு உச்சரிக்கும் ஜபமும் பாவனைகளுமாம். இதில் மனதின் நிலை எளிதில் புலனாகும். எங்ஙனமெனின், மனம் ஏககாலத்தில் குவிதலையும், விரிதலையும் அடையாது. தியானத்திலிருக்கும்போது விஷயங்களிலும், விஷயங்களிலிருக்கும்போது தியானத்திலும் மனம் வியாபிப்பதில்லை. இந்நிலையிலுள்ளோர் அப்போதைக்கு அப்போது மனத்தின் சலனங்களை எளிதிலுணர்ந்து இதர சிந்தனைகளினின்று உடனுக்குடன் மனதைத் தடுத்து தியானத்தில் கவனம் செலுத்த வேண்டும். தியானத்தின் பரிபாக ஸ்திதியே தகாகார நிலையாகும்.
   தியானமென்பது மனம் உதிக்கும் இடத்தில் அதி சூட்சுமமாக நடப்பதால், அங்கு மனதின் தோற்றவொடுக்கங்கள் உடனுக்குடன் பிரதிபலிப்பதில்லை.
4. யோகம்: சுவாசத்திற்கும், மனத்திற்கும் உற்பத்தி ஸ்தானம் ஒன்றேயாதலாலும், இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று ஒடுங்கின் மற்றதும் முயற்சி இன்றியே ஒடுங்கும். ஆதலால், பிராணாயாமம் முதலிய சாதனங்களால் உண்டாகும் பிராண லய வாயிலாக, மனோலயம் உண்டாகச் சாதனைபுரிய வேண்டும். அது யோக சாதனையாகும்.

- ரமண மகரிஷி -

# தேவாரப் பண்ணிசை மரபு

- கௌசல்யா சுப்பிரமணியன் (முனைவர்ப்பட்ட ஆய்வாளர்) -

## தோற்றுவாய்:

தமிழரின் இசைமரபிற்கு நீண்டதொரு வரலாறு உளது. பண்டைத் தமிழிலக்கியங்களில் - குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் - தமிழரின் இசைவளம் தொடர்பான பல செய்திகள் பயில்வதை நோக்கமுடியும். இசையைக் குறிப்பதற்கு வழங்கிய சொற்களிலொன்று 'பண்' ஆகும். இச்சொல் பொதுவாக இசையைக் குறிப்பதோடு மட்டுமல்லாது இசையின் ஒரு கூறாகிய இராகவகைகளையும் குறிப்பதாக வழங்கிவந்துள்ளது என்பது வரலாறு. இவ்வாறு வழங்கிவந்துள்ள பண் என்பது பக்தி இலக்கிய காலத்தில் - குறிப்பாகத் திருமுறை இலக்கியப்பரப்பில் - மிகச் சிறந்ததொரு வளர்ச்சியை எய்தியிருந்தது. திருமுறைப்பரப்பிலும் குறிப்பாகத் தேவாரப்பதிகங்களில் இது சிறப்பாகப்பயின்றது. இச்சிறப்பு நோக்கி, இப்பக்தியிசைசார் பண்மரபுக்குத் 'தேவாரப் பண்ணிசை' என்ற பெயர் உருவாகி நிலைத்துவிட்டது. இத் 'தேவாரப் பண்ணிசை மரபு' பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பாக இச்சிறு கட்டுரை அமைகிறது.

## தேவாரம் - சொல்வழக்கு:

'தேவாரம்' என்ற சொல்லைப் பொதுவாக முதல் ஏழு திருமுறைகளிலுள்ள பாடல்களைச் – சம்பந்தர், சுந்தரர், அப்பர் ஆகியோரது பாடல்களை – சுட்டவே நாம் வழங்கிவருகிறோம். ஆனால், நாயன்மார்கள் காலத்திலும் (கி.பி 600-900) அதன் பின்னர் அவர்களின் வரலாறு கூறும் பெரியபுராணம் எழுதிய சேக்கிழார் காலத்திலும்(கி.பி.12ஆம் நூ.ஆ.) கூட 'தேவாரம்' என்ற சொல்லானது முதல் ஏழு திருமுறைகளைக் குறிக்கும் சொல்லாக வழக்கிலிருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. அப்பாடற்பரப்புக்கு ஆரம்பத்தில் 'திருப்பாட்டு', 'திருப்பதிகம்', 'திருப்பாசுரம்', 'கீதம்' போன்ற சொற்களே வழக்கிலிருந்தன என்பதை அப்பாடல்களின் அகச்சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. தேவாரம் என்ற சொல்லானது மூவர் பாடல்களைச் சுட்டும்வகையில் பயிலத்தொடங்கிய காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டாகும்.

கி.பி.1321-கி.பி1339வரை படைவீட்டு ராச்சியத்தையாண்ட மல்லிநாத சம்புவராயன் காலத்தில் வாழ்ந்த இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பரநாதருலாவில் மூவர்பாடிய பாடல்கள் 'திருப்பாட்டு'எனவும் அவற்றை இசைக்கும் செயற்பாடு 'தேவாரம்' எனவும் வழங்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ்செய்த திருப்பாட்டும்'

என்பது மேற்படி உலாநூல் தரும் சான்று. மேற்படி சான்றில் தேவாரம் என்ற சொல் பெயர்சொல்லாக அன்றி வினைச்சொல்லாகப் பயன்பட்டுள்ளதைக் காண்கின்றோம்.

தேவாரம் என்ற சொல்லைப் பெயர்நிலையில் முதலில் மூவர் பாடல்களுக்குப் பயன்படுத்தியவர் 17ஆம் நூற்றாண்டினரான சைவ எல்லப்ப நாவலர் ஆவார். இவர்பாடிய திருவருளைக் கலம்பகத்தின் காப்புச் செய்யுளில்,

'வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே'

எனச் சைவசமய குரவர் நால்வரைப் போற்றுவதாக இக் காப்புச்செய்யுள் அமைகிறது. இதில் சமயக்குரவர் நால்வரில் முதல் மூவர் பாடல்கள் தேவாரம் எனச் சுட்டப்பட்டமை உய்த்துணரக்கூடியதாகும்.

இவ்விடத்திலே மேற்படி தேவாரம் என்ற சொல்லின் பகுதியாக அமையும் 'வாரம்' என்ற சொல்லின் பொருண்மைபற்றிய ஒரு குறிப்பை முன்வைப்பது அவசியமாகிறது. இச்சொல் இசையோடு தொடர்புடைய தொன்றாக பண்டைக்காலம் முதல் வழங்கிவந்தமைக்குச் சான்றுகள் உள.

'வல்லோன் புணரா வாரம் போன்றே....'

என வரும் தொல்காப்பிய மரபியல் நூற்பா(109)ப்பகுதியிலே 'வாரம்' என்ற சொல்லானது இயற்பாடலுடன் புணர்க்கப்படும் இசைக் கூறுபாட்டினைச் சுட்டிநிற்கின்றது.

'நடை, வாரம், கூடை, திரள் என்ற நான்கு இயக்கங்களில்
சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் பெற்ற வாரப்பாடலை
அளவுகண்டு நிறுத்தவல்லவராகக் குழலோன் இருக்கவேண்டும்'

எனவரும் சிலப்பதிகார அரும்பதவுரையிலே இசைப்பாடலுக்குரிய இயல்பைப் பெற்ற வாரப்பாடல்பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம்.

இவ்வாறு இசையோடு தொடர்புடையதாக வழங்கிவந்த வாரம் என்ற சொல் இறையுணர்வு சார்ந்த இசைப்பாடலைச் சுட்டும் நிலையில் வளர்ச்சியுறும் பொழுது தேவாரம் என்ற புதியபெயரைத் தாங்கத்தொடங்கியது என ஊகிக்க முடிகிறது. நாளடைவில் இப்பெயரே முதல் மூவர் பாடல்களைக் குறிக்கும் பெயராக நிலைத்துவிட்டமையையும் உணருகிறோம்.

மேற்சுட்டியவாறு கி.பி. 17ஆம் நூற்றாண்டளவில் மூவர் பாடல்களைச் சுட்ட வழங்கிய தேவாரம் என்ற சொல்லானது அதற்குமுன்பே இறை வழிபாட்டுடனும் மூவர் பாடல்களுடனும் தொடர்புடைய பொருண்மைகளில் வழங்கிவந்துள்ளது என்பது ஆய்வுகள் மூலமும் தெரியவருகிறது.

'தேவாரம்' என்ற சொல் 'பூசனை' செய்யப்படுதல் என்ற பொருளிலும் 'தேவாரப்பெட்டி' என்பது 'அரசர் புறப்பாட்டில், அவர்களுக்கு முன்பாகக் கொண்டு செல்லப்படுவதும், பூசைக்குரிய விக்கிரகம் முதலியவற்றை வைத்திருப்பதுமாகிய பெட்டி' என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

"தேவாரத்து உள்ளால் இருந்து பிறப்பிக்கப்பட்ட கட்டளை"

என்று தஞ்சைக் கல்வெட்டில் ஒரு குறிப்பு வருகிறது. இங்கு 'தேவாரத்து உள்ளால்' என்பது கோவிலுள் இருக்கும் இறைவனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சோழப் பெருமன்னர் காலத்தில் மூவர் பாடியருளிய பாடல்கள் ஓதப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட்டன என்பது வரலாறு. இப்பாடல்கள் பாடும் முறைமையோடு 'தேவாரம்' என்ற சொல் தொடர்புபட்டிருந்தது என்பதனைக் கல்வெட்டாதாரங்கள் மூலம் அறியமுடிகிறது. இப்பாடல்களால் வழிபடப்படும் இறைவன் திருவுருவினை, 'தேவாரதேவர்' எனவும், வழிபாடு செய்யும் இடத்தினை 'தேவாரத்துச் சுற்றுக்கல்லூரி' எனவும் இப்பதிகங்களைப் பாடி இசைத்தொண்டு செய்பவரைத் 'தேவாரநாயகம்' எனவும் சுட்டும் வழக்கு நிலவியதனைக் கல்வெட்டுச் சான்றுகள் அறியத்தருகின்றன.

இவ்வாறு இறைவனோடும் மூவர் பாடல்களோடும் தொடர்புடையதாக வழங்கிவந்த தேவாரம் என்ற சொல் நாளடைவில் மேற்படி மூவர் பாடல்களுக்குரிய பெயராக வழங்கத் தொடங்கிவிட்டதென்பதே இச் சொல்வரலாறு தரும் செய்தியாகும்.

**பண் மரபும் அதன் பக்தியிலக்கியப் பயன்பாடும்.**

'பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும் - பாவாய்
எடுத்தன் முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண்ணென்று பார்'

என குரல்சார்ந்து வெளிப்படுத்தப்படும் இசைக்கோலத்திற்கே 'பண்' என்ற பெயர் வழங்கி வந்துள்ளமையை பஞ்சமரபு என்ற இசை இலக்கணநூல் காட்டுகிறது. அதாவது தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் முதலிய எட்டுத் தானங்களாலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு முதலிய (இருநான்கு) எட்டுக்கிரியைகளாலும் பிறப்பித்து ஓசைப்படுதலால் 'பண்' என்ற பெயர் உண்டாயிற்று என்பதாகும். சுருக்கமாகக் கூறுவதானால் எட்டுத்தானங்களாலும் எட்டுக்கிரியைகளாலும் பண்ணப்படுதல் 'பண்' ஆகும் என்பதாம்.

'இராகம்' என்ற சொல் முதலில் மதங்கரின் பிருகத்தேசி(5ஆம் நூற்றாண்டு) என்ற வடமொழி நூலில் காணப்படுகிறது. 'அழகிய கமகங்களோடு கூடிய சுரக்கூட்டங்கள்' என்றும், 'மக்கள் கேட்டு இன்புறும் தன்மையது' என்றும் அந்நூலில் இராகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழின் பண் மரபுடனும் இராகம் என்ற சொல் தொடர்புபட்டுள்ளமையை 'நட்டராகம்', 'தக்கராகம்', 'பழந்தக்கராகம்', 'மேகராகக் குறிஞ்சி' ஆகிய பண்களின் பெயர்கள் உணர்த்திநிற்பன. இவற்றின் மூலம் பண்களுக்கும் இராகங்களுக்கும் காலங்காலமாக ஒரு தொடர்பு இருந்து வந்ததனை அறிகிறோம்.

சங்ககாலத்திலே முல்லைப்பண், ஆம்பல்பண், காஞ்சிப்பண், காமரப்பண், குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண், நைவளப்பண், படுமலைப்பண், பாலைப்பண், மருதப்பண், பஞ்சுரப்பண், விளரிப்பண் ஆகிய பெயர்களிற் பண்கள் பெயர்சுட்டி வழங்கப்பட்டுவந்துள்ளன. இவை அக்காலத்து மக்களின் இயல்பான உணர்வெழுச்சிகளின் வெளிப்பாடுகளாக அமைந்தவையாகும். இவற்றிற்பல அக்கால இறைவழிபாடுகளுடன் தொடர்புபெற்றிருந்தன. பாணர், விறலியர், பாடினி, பொருநர் எனப் பலதிறப்பட்ட ஆண்களும் பெண்களும் இறைவழிபாட்டில் பாடல்களுடன் பல்வகைக் கூத்துக்கள் ஆடுதற்குப் பண்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை பண்டைய இலக்கியங்கள் வாயிலாக நாம் அறியும் செய்திகளாகும்.

இயற்றமிழின் தொல்லிலக்கணமாகிய தொல்காப்பியத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களுக்கும் உரிய பண்களும் அந்நிலத்துக்குரிய இசைக்கருவிகளான யாழ்வகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. நாற்பெரும்பண்களாவன பாலையாழ்ப்பண், குறிஞ்சி யாழ்ப்பண், மருதயாழ்ப்பண், நெய்தலியாழ்ப்பண் என்பனவாகும். இவற்றில் பாலையாழ்ப்பண்ணிலிருந்து குரல்திரிபினால் ஏழ்பெரும்பாலைகளான அரும்பாலை, செவ்வழிப்பாலை, படுமலைப்பாலை, செம்பாலை, மேற்செம்பாலை, விளரிப்பாலை, கோடிப்பாலை என்பன உருவாகின்றன. பின்னர் இந்த ஏழ்பெரும்பாலைகளிலிருந்து 103 பண்கள் தோற்றம் பெருகின்றன. இவைபற்றிய தகவல்களனைத்தும் இலக்கண-இலக்கிய நூல்கள் வாயிலாகவே நாம் அறிகிறோம். குறிப்பாகச் சிலப்பதிகாரமும் அதன் உரைகளும் பிங்கலநிகண்டு, சேந்தன் திவாகரம், சூடாமணிநிகண்டு முதலான நிகண்டு நூல்களும் பஞ்சமரபு, இசைநுணுக்கம், கூத்தநூல் போன்ற இசை இலக்கண நூல்களும் இவ்வகைத் தகவல்களைத் தருவனவாக அமைந்த நூல்களாகும்.

சங்க இலக்கியமான பரிபாடலே பண்ணமைதியுடன் கூடிய பாடல்களைக் கொண்டதாக எமக்குக் கிடைக்கும் முதல் இலக்கியமாகும். இதில் அமைந்த பாடல்களை இயற்றியவர்கள் வேறு. அவற்றுக்கு இசையமைத்தவர்கள் வேறு. இவ்வமைப்பிலே காந்தாரம், நேரதிறம் ஆகிய பண்கள் பற்றிய குறிப்புகள் உள.

இந்த நூலுக்குப் பின் எழுந்ததாகக் கொள்ளப்படும் காரைக்காலம்மையாரின் மூத்ததிருப்பதிகங்களின் பாடல்கள் பதிக அமைப்பினைக் கொண்டவை. இயற்றியவரே இசையமைத்த நிலையை இவை உணர்த்துவன. நைவளம், இந்தளம் ஆகிய பண்கள்

இப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வரலாற்றில் காரைக்காலம்மையாரே பதிகஅமைப் புடன் பண்முறைமையை இயைவித்த முதல்வராகிறார். இவர் தொடக்கிவைத்த மரபை அடியொற்றியே நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பல்லாயிரக்கணக்கான பண்கனிந்த பாடல்களைச் சைவ உலகுக்கு வழங்கினர். திருஞானசம்பந்தரும் சுந்தரரும் முறையே நைவளம் மற்றும் இந்தளம் ஆகிய(அம்மையார் பயன்படுத்திய) பண்களிலலேயே தத்தம் முதல் பாடல்களைப் பாடியள்ளனர் என்பது இங்கு நாம் மனங்கொள்ளவேண்டிய வரலாற்றச் செய்தியாகும். இவை பக்திப் பாடல்களாக மட்டுமன்றித் தமிழின் பண்வளத்தைக் காட்டும் இசைப்பாடல்களாகவும் - இசை உருப்படிகளாகவும் - திகழ்கின்றன.

இப்பாடல்கள் மக்களைச்சென்றடைவதன் மூலம் சைவம் தழைக்கவேண்டுமென்பதே அவர்களது நோக்கமாக இருந்தது. பக்தியோடு, தமிழோடு, கோவில்களோடு இசையை வளர்க்க விரும்பியவர்கள் இவர்கள். எனவே அவர்களின் தேவாரப்பாடல்கள் யாவும் பக்தியை மட்டுமல்லாது செந்தமிழின் இனிமையையும் உணர்த்துவன. நாவுக்கரசர் 'தமிழோடிசைபாடல் மறந்தறியேன்' எனப் பாடியுள்ளமை இத்தொடர்பில் நம் சிந்தனைக்குரியது.

சோழப்பெருமன்னர் காலத்தில் நம்பியாண்டார்நம்பியின் பெருமுயற்சியால் தேவாரங்கள் மீட்டெடுக்கப்பட்டு மதங்கசூளாமணியாரால் இசையமைக்கப்பட்டுப் பேணப்பட்டன என்பது வரலாறு. தமிழ்ப் பண்களின் தொகை 103 என்பது மேலே சுட்டப்பட்டது. ஆனால் மேற்படி நாயன்மார் மூவரின் பாடல்களில் பயின்றனவாக நாமறியும் பண்களின் தொகை 23மட்டுமே என்பது இங்கு நம் கவனத்துக்குரியது. மேற்படி 23 பண்களின் பெயர்களும் அவற்றிற்கு ஒப்பானவையாகச் சுட்டப்படும் கர்நாடக சங்கீத இராகங்களும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் காந்தாரம், பியந்தைக்காந்தாரம், கொல்லி, கொல்லிக்கௌவாணம் ஆகிய பண்கள் 'நவரோசு' என்ற ஒரே பண்ணைக் குறிப்பதாகவும் சாதாரி, நட்டஇராகம் போன்ற பண்கள் 'பந்துவராளி' என்ற ஒரே இராகத்தைக் குறிப்பதாகவும் தக்கேசி, தக்கராகம் ஆகிய இருபண்களும் 'காம்போதி' என்ற ஒரே இராகத்தைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளமை நோக்கற்பாலது. மேற்கூறிய பண்கள் சிறுசிறு வேறுபாட்டால் வெவ்வேறு பெயர்கள் கொண்டமைந்தாலும் அவற்றின் பயில்நிலையினை அறியமுடியாதிருப்பதால் ஒரே இராகப்பெயர் கொண்டமைகின்றன.

## தேவாரப்பண்களின் பெயர்களும், இராகங்களின் பெயர்களும்:

| | |
|---|---|
| 1. இந்தளம், - மாயாமாளவகௌளை | 2. நட்டபாடை - நாட்டை |
| 3. காந்தாரபஞ்சமம், - கேதாரகௌளை | 4. குறிஞ்சி, - குறிஞ்சி-கரிகாம்போதிபோல் |
| 5. காந்தாரம், - நவரோசு | 6. பியந்தைக்காந்தாரம் - நவரோசு |
| 7. கொல்லி - நவரோசு | 8. கொல்லிக்கௌவாணம் -நவரோசு |
| 9. கௌசிகம் - பைரவி | 10. சாதாரி - பந்துவராளி |
| 11. நட்டஇராகம்- காமவர்த்தனி(பந்துவராளி) | 12. செவ்வழி - யதுகுலகாம்போதி |
| 13. தக்கேசி - காம்போதி | 14. தக்கராகம் - காம்போதி |
| 15. பஞ்சமம் - ஆகி | 16. பழந்தக்கஇராகம் - சுத்தசாவேரி-ஆரபிபோல் |
| 17. பழம்பஞ்சுரம் - சங்கராபரணம் | 18. புறநீர்மை - பூபாளம் |
| 19. மேகராகக் குறிஞ்சி-யாழ்மூரி - நீலாம்பரி | 20 அந்தாளிக்குறிஞ்சி. - சாமா |
| 21. வியாழக்குறிஞ்சி - சௌராஸ்டம் | 22. சீகாமரம் - இந்தளம் - நாதநாமக்கிரியை |
| 23. செந்துருத்தி - மத்தியமாவதி | |

## பண்ணாராய்ச்சி

பண்களுக்கும் அவற்றுக்க ஒப்பான இராகங்களுக்கும் உள்ள இயைபு மற்றும் இயைபின்மை ஆகியன தொடர்பாக தமிழகத்தில் ஆழமான ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. பண்ணாராய்ச்சியை முன்னெடுக்கும் நோக்கில் தமிழிசைச்சங்கம் என்ற நிறுவனம் 1943இல் சென்னையில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பண்ணாராய்ச்சிக் கருத்தரங்கங்களை முத்தமிழில் புலமைபெற்ற சான்றோர் மத்தியில் வருடாவருடம் நிகழ்த்திவருகின்றது. பண்களும் அவற்றிற்கு ஒப்பான இராகங்களும் பற்றிய சிந்தனைகள் மற்றும் பண்கள், இராகங்கள் என்பவற்றின் பெயர்களில் காலங்காலமாக நிகழ்ந்துவந்துள்ள மாற்றங்கள் பற்றிய வரலாற்றுப் பார்வைகள் என்பன பண்ணாராய்ச்சிக் கருத்தரங்குகளில் முக்கிய கவனத்தைப் பெற்றுவந்துள்ள விடயங்களாகும். இவற்றை ஆராய்வதன் மூலம் பண்கள் பற்றிய சில தெளிவான கருத்துகளை 'கருத்தரங்க முடிபு'களாக தமிழிசைச் சங்கம் முன்வைத்து வருகின்றது.

தமிழ் இசையிலக்கண நூல்கள் பல காலவெள்ளத்தில் மறைந்தொழிந்த நிலையில் மேற்படி கருத்தரங்க முடிபுகளே தமிழிசைமரபு பற்றிய அறிவுக்கு வளம் சேர்ப்பனவாகின்றன.

## நிறைவாக.......

தேவாரப்பாடல்களும் அவற்றை இசைக்கும் முறைசார்ந்த பண்மரபுகளும் தமிழருடைய குறிப்பாகச் சைவத் தமிழர்களுடைய ஆழ்ந்தகன்ற இசைவளத்தை உணர்த்தி நிற்பன. கர்நாடக இசை மரபிலே தியாகையர் போன்றவர்கள் அதனுடைய இசைப்பரிமாணத்தை வளம்படுத்திக் காட்டியவர்கள் என்பதை நாம் அறிவோம். அதற்கு முன்பாகவே தமிழரின் பண்ணிசையானது மகத்தானதொரு பரிமாணத்தை எய்தியிருந்ததென்பதைத் 'தேவாரப் பண்ணிசை மரபு' எமக்குத் தெளிவுற உணர்த்திநிற்கின்றது.



# A1 - TOP QUALITY FLORIST

பூமாலைகள், பூமாலை, பூச்செண்டு, பூக்கூடை

~ மணவறை CASKET அலங்காரம் -

CASKET SPRAY

**அனுபவம் - தரம் - விலை - வாடிக்கையாளர் திருப்தி**

**அனைத்திலும் அனைவராலும் பாராட்டப்படுகின்ற பூக்கடை பிள்ளையின்**

## அதி உயர்தர மலர்க் களஞ்சியம்

## Tel: 416 269 5522

2871 LAWRENCE AVENUE EAST
(BRIMLEY & LAWRENCE)
SCARBOROUGH, ON.
TEL: 416 269 5522





**பொங்கல் விழா இனிதே நடைபெற**
**எனது வாழ்த்துக்கள்!**



## NADA NADARAJAH B.V.Sc

SALES REPRESENTATIVE
ONTARIO EMERALD CLUB MEMBER


வீடுகள் வாங்க விற்க
அடமான (Mortgage) ஒழுங்குகள்
என்பன குறைந்த வட்டி வீதத்தில்
இலவசமாகச் செய்திட...

**அழையுங்கள் உங்கள் நண்பன்**

## நடா ஜீ. நடராஜா

**Res: 905 472 8703 Cell 416 616 8751**
**Bus: 416 293 5093 (24hrs)**
**Email: nanadarajah@trebnet.com**
**5200 Finch Ave. East, Suite 206, Scarborough, ON M1S 4Z4**

# மாணவர் பகுதி



## ஔவையார்

- சாயிசங்கர் சத்தியகுமார், ஆண்டு 4.

இவர் "ஔவைப் பாட்டி" என்று குழந்தைகளால் செல்லமாக அழைக்கப்படுவார்.

ஔவையார் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பெண் புலவராவார். இவர் இளமையில் மணம் புரிய மனமில்லாமல், தனக்கு முதுமையை அளிக்குமாறு இறைவனிடம் வரம் கேட்டு முதியவரானார் எனக் கூறப்படுவதுண்டு. இவருடைய படைப்புகள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், விநாயகர் அகவல், மூதுரை, நல்வழி நாற்பது, ஞானக்குறள், பந்தனந்தாதி ஆகியவை.

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதியமான் அளித்த நெல்லிக்கனியை உண்டு இவர் நெடுங்காலம் உயிர் வாழ்ந்தாரெனச் சங்க நூல்கள் கூறுகின்றன.
முருகப் பெருமான் ஔவையாரிடம் நாவல் மரத்தின்மேல் நின்று, "பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டு திருவிளையாடல் புரிந்தார்.

ஔவையாரின் ஆத்திசூடியில் சில:
கடவுள் வாழ்த்து
ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி
ஏத்தித் தொழுவோம் யாமே.

உயிர் வருக்கம்

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்
13. அஃகம் சுருக்கேல்

## நட்பு

- சாகித்யா சிறிரஞ்சன்

நட்பு என்கின்ற ஒரு வார்த்தைக்குப் பல கருத்துக்கள் உள்ளன. நட்பில் பாசமும் உண்டு. சந்தோஷமும் உண்டு. ஓர் உண்மையான நட்பு எப்பொழுதும் நம் நெஞ்சிலிருந்து நீங்கிவிடாது. ஒரு நண்பருக்காக நாம் எப்பொழுதும் உதவுவோம். அதைப்போல், நமது நண்பர்கள் எமக்கும் உதவுவார்கள். ஒரு மனிதன் தனது ஆடைகள் நழுவும்போது அதை நழுவ விடாது பாதுகாப்பது போல் தனது நண்பனது துன்பங்களைக் கண்டால் கேட்காமல் தானே சென்று உதவி செய்பவனே உண்மையான நண்பன்.
திருவள்ளுவர் கூறினார்: (787)

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

# AK MART RENOVATION

## 24 hrs Service



* Kitchen Renovation
* Wash Room
* Plumbing and Repairs
* Drain Service, Tiling Wall and Floor

உங்கள் சகல விதமான வீட்டுத் திருத்த
வேலைகள் எதுவானாலும்
குறைந்த விலையில் தரமாக
செய்து கொள்வதற்கு அழையுங்கள் -

**Vathanan**
**Tel: 416 293 1399**
**cell: 416 998 4752**

30 Perthshire St.
Scarborough, ON M1V 3A9

## மாணவர் பகுதி

# ஆறுமுக நாவலர்

சயந்தன் சத்தியகுமார்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூர் என்னும் ஊரில் 1822 ஆம் ஆண்டு டிசம்பர் 18 இல் புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு கடைசி மகனாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர்.

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தயாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் இருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் கற்று ஆங்கிலத்திலும் திறமைபெற்றார். அவரது இருபதாவது வயதில் அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும் அதிபராயும் இருந்த பேர்சிவல் பாதிரியார் கிறிஸ்தவ வோதாகமத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார்.

நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவ சமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார். சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதென்று தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசம்பர் 31, 1847 ஆம் நாள் நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.



வண்ணார்பண்ணையில் ''சைவப் பிரகாச வித்தியாசாலை'' என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து, செப்டம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரி ஆசிரியப் பணியைத் துறந்தார்.

சைவப் பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக 1849 ஆம் ஆண்டு ஆடி மாதம் சென்னைக்குச் சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப் பிரசங்கம் செய்து, தமது புலமையை வெளிப்படுத்தி "நாவலர்" பட்டத்தைப் பெற்றார். தமது இல்லத்தில் ''வித்தியானுபாலன யந்திரசாலை" என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உரை, நன்னூல் விருத்தியுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசனநடையில் எழுதி அச்சிட்டார்.

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளது குருபூசைத் தினமான ஆடிச் சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நாவலரது உடல்நலம் குன்றி, 21ஆம் நாள் வெள்ளிக் கிழமை (05.12.1879) இரவு, தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படி கட்டளையிட்டு அவைகள் ஓதப்படும்போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத் தலங்களின் விபூதி அணிந்து, உருத்திராட்சம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

# எழுத்தாளர்கள்

- ஜனகன் சிறிரஞ்சன்

எழுத்தாளர்கள் கதைகள் எழுதுவார்கள். எழுத்தாளர்கள் பல விதமான கதைகள், சிறுகதைகள், சிறுவர்களுக்கான கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதுவார்கள். ஒரு கதை எழுதியபின் அவர்கள் அதை அச்சகத்திற்கு எடுத்துச்சென்று பதிப்பு செய்வார்கள். அதற்குப் பின்பு நூல்களைக் கடைகளுக்கு விற்பார்கள். எழுத்தாளர்கள் சமுதாயத்திற்கு முன்னோடிகள். அவர்களுடைய எழுத்தாற்றல் சமுதாயத்திற்குப் பல நன்மைகளுக்கும், மனித சமுதாயத்தின் மேம்பாட்டுக்கும் ஊன்றுகோலாக அமையும்.

**Cash Point®**
*The Buck Starts Here!*

# CHEQUE CASHING
# MORTGAGES
# WORLDWIDE MONEY TRANSFER


# 416.284.7000

காசோலை மாற்றல் **Foreign Currency Exchange**

**G03-3852 Finch Ave.E, Scarborough, ON. M1T 3T9**



**ONE STOP**



# FINANCIAL SERVICES

- RESIDENTIAL MORTGAGES
- REFINANCING
- COMMERCIAL MORTGAGES
- BUSINESS LOANS
- REAL ESTATE NEEDS
- BUY & SELL HOMES & BUSINESSES

# 416.284.0005

**202-3852 Finch Ave. E, Scarborough, ON. M1T 3T9**

Apex Creation- 647.439.3310

# தொன்மைச் சமயமே சைவம்

த.சிவபாலு

இந்தியாவில் தோன்றிய மதங்களைப் பொதுவாக இந்துமதம் (Hinduism) என அழைப்பது மரபாகிவிட்டது. இந்துமதம் என்னும் பெயர் எப்படி வந்தது; ஏன் வந்தது என்பது இன்றும் ஆய்வுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியாவில் ஆதியில் காணப்பட்ட சமயங்களை அடியொற்றிப் பார்க்கும்போது சனாதன தர்மம் "eternal religion" வைதிக தர்மம் "religion of the Vedas" எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளமையை அறியமுடிகிறது. பொதுவாக இந்தியாவில் ஆதியில் தோன்றிய மதங்கள் அனைத்தையும் ஒன்றாக நோக்கிய மேலை நாட்டவர் குறிப்பாக ஆங்கிலேயரின் வருகையின் பின்னர் 'இந்துமதம்' "Hinduism" என பொதுவான ஒரு பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்படுகின்றது. இதற்கு இந்திய உபகண்டத்தில் காணப்படும் பல்வேறு சமயப் பிரிவுகளை எல்லாம் உள்ளடக்கியதாக ஆங்கிலேயரால் கொடுக்கப்பட்ட பெயராகக் கொள்ளப்படுவதாக ஒரு சாராரும், இல்லை; இது பார்சிய மொழித் திரிபாக அவர்களால் இந்தியன் என்ற பெயர் அழைக்கப்பட்டு வந்தது. நதியோரத்தில்"சிந்துமக்கள்" வாழ்ந்தமையால் 'சி' என்பதற்குப் பதிலாக 'இ' என்பது மாறி இந்து என மாறியுள்ளது என ஒரு சாராரும், சிந்து நதி இந்து நதியாக மாறியது என்பதனை ஆதாரம் காட்டி வருவதும், அதற்கு மாறாக இல்லை - இல்லை இது பழமை வாய்ந்த சிந்து வெளியில் அதாவது இந்துஸ்தானியக் கல்வெட்டுக் குறிப்பில் இருந்து மருவி வந்திருத்தல் வேண்டும்; அதாவது பாரத நாடு இந்துஸ்தான் என இன்று அழைக்கப்படும் பிந்து சரோவராவுக்கும் இமாலய மலைக்கும் இடையே அமைந்துள்ளது; ("*The country lying between the Himalayan mountain and Bindu Sarovara is known as Hindusthan by combination of the first letter 'hi' of 'Himalaya' and the last compound letter 'ndu' of the word `Bindu.*'" Bindu Sarovara is called the Cape Comorin sea in modern times – Krishna Kumar SOURCE: Hinduism Today, April 1992) இந்த இரு சொற்களின் இணைப்பால் அதாவது 'இமாலயா' என்பதும் 'பிந்து' என்பதும் இணைந்து, பிந்து என்னும் சொல்லில் உள்ள 'பி க்குப் பதிலாக 'இ' 'இந்து' என மாற்றம் பெற்றுள்ளது எனவும் கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன.

இது எவ்வாறிருப்பினும், இன்று இந்து மதம் என்றே பொதுவாக இந்தியாவில் உள்ள சனாதன தர்மம் அல்லது வைதிக தர்மம் என அழைக்கப்படும் பெரும் பிரிவுகளும் அதனுள் அடங்கியுள்ள அனைத்துப் பிரிவுகளும் சேர்த்து அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் தோன்றிய மதங்கள் பல. சமணம், பௌத்தம், சீக்கியம் ஆகியன இன்று தனிப் பிரிவுகளாகப் பிரிந்துபோயுள்ளன. இவையனைத்தும் இந்துமதத்தின் பிரிவுகளாகவே கருதப்பட்டு வந்துள்ளன. இந்து மதத்தில் காணப்படும் நெகிழ்வுத் தன்மையும் இறுக்கத்தன்மையும் பல பிரிவுகளாகப் போவதற்கு வழி வகுத்தது எனலாம். கட்டுப்பாடும், கட்டுப்பாடற்ற தன்மையையும் கொண்டது இந்து மதம். இஸ்லாமிய மதத்தைப் போன்றோ அல்லது கிறிஸ்தவ மதத்தைப் போன்றோ இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டதாக இந்திய மதங்கள் காணப்படவில்லை. அதே நேரம் கடவுளோடு தொடர்பு கொள்ளும் பூசகர்கள் குலமுறை ஒட்டிய கட்டுப்பாடு அதன் உடைவுக்கும் காரணமாக அமைகின்றது. இறுக்கமாக எழுதிவைக்கப்படாத விதிமுறைகளும் காரணம் எனக் கொள்ளலாம்.

இந்தியாவில் தோன்றிய இந்துமதத்தில் சைவம், வைஷ்ணவம் ஆகியன இரண்டும் மிக முக்கியமான பிரிவுகளாகக் கொள்ளப்படுகின்றன. சைவ சமயத்தவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்றனர். வைஷ்ணவர்கள் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றனர். சைவம் சிவனே ஆதிமூலம் எனக் கொண்டுள்ளது. சிவன் அருஉரு ஆனவன். அதாவது உருவம் அற்றவன். ஆனால் உலக ஆன்மாக்களுக்கு அருள்பாலிப்பதற்காக அவன் பல்வேறு தூல உருவங்களைக் கொண்டு செயற்படுகின்றான் என நம்பிக்கை கொண்டுள்ளனர் சைவர்கள். அவன் மகேஸ்வர முகூர்த்தம் எனப்படும் நிலையில் சுலோகங்களோடு கூடிய 25 மூர்த்தங்களையும், வேறும் 64 மூர்த்தங்களையும் கொண்டுள்ளான் எனப்படுகின்றது. அதிகாரப் பகிர்வினால் வெவ்வேறு உருவங்களில் உலகு செயற்பட, தன்னால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும் அருள்பாலிக்கின்றான் எனக்கொள்ளப்படுகின்றது. சக்தியாக உமை அல்லது பார்வதியின் வடிவிலே அவன் அருள்பாலிக்கின்றான் என்கின்றது சைவம். பிரம்மா படைத்தற் தொழிலையும், விஷ்ணு காத்தல் தொழிலையும், உருத்திரன் அழித்தற் தொழிலையும் புரிவதாகக் கொள்ளப் படுகின்றது. இவர்களை மும்மூர்த்திகள் எனவும் அழைப்பர்.

இறைவன் சக்தி வடிவானவன். அனைத்துக்கும் மேலான பரப்பெருமம் எனக் கொள்ளப்படுகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் வெவ்வேறு மூர்த்திகளாக சிவனே தொழிற்படுகின்றான் என்கின்றது சைவம். இறைவன் சக்தியோடு இரண்டறக் கலந்து அனைத்து உயிர்களுக்கும் அருள்பாலிக்கின்றான். பார்வதியாகச் சக்தியை உருவாக்கிக் கொண்டு அருளாட்சி செய்யும் விந்தை உலகியல் வாழ்வியலை ஊக்குவிக்கும் உன்னத நிலையைக் காட்டும் தத்துவமாகக் கொள்ளப்படுகின்றது. அருவமும், உருவமும் ஆனாய் போற்றி எனப் போற்றிப் புகழப்படும் இறைவன், அருவ நிலையிலும் அருவுருவ நிலையிலும் உருவ நிலையிலும் நின்று மனித குல மீட்சிக்காக அருளாட்சி புரியும் பாங்கு முன்வைக்கப்படுகின்றது.

சைவ சமயம் அனாதியானது; அது எப்போது தொடங்கியது என அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆனால் சைவ சமயத்தில் காஷ்மீரிய சைவம், வீர சைவம், சித்த சைவம் என முப்பிரிவுகள் காணப்படுகின்றன. காஷ்மீரிய சைவம் காஷ்மீரப் பிரதேசத்தில் கி.பி. 9ம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கொள்ளப்படுகின்றது. வசுகுப்தர், சோமநந்தர், அபிநவகுப்தர் போன்றோர் இந்த சமயத்தின் முக்கிய கோட்பாட்டாளர்களாக அல்லது சித்தாந்திகளாகக் கொள்ளப்படுகின்றனர். வேதங்களில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களையும் சாதி முறைகளையும் நிராகரிக்கும் ஒரு சமயமாக இது காணப்படுகின்றது. சிவனே முழுமுதற் கடவுள் எனக் கொள்ளுகின்றது. தாந்திரிக தாக்கத்தின் தன்மை காஷ்மீரியச் சைவத்தில் உண்டு என பீர் முகமது அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுகின்றார். பெண் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய தன்மை சக்தியையும் சிவனையும் இரண்டாகக் கொள்ளமுடியாத நிலையை காட்டுகின்றது. மதச் சடங்குகளுக்கோ, தியான சடங்குகளுக்கோ முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை எனப்படுகின்றது.

வீர சைவம், இலிங்க வழிபாட்டை முதன்மையாகக் கொண்டது. லிங்கத்தைக் கழுத்தில் அணிவதோடு, அதனைக் கையில் வைத்துப் பூசிக்கும் வழக்கத்தையும் கொண்டதாகப் பின்பற்றப்படுகின்றது. இலிங்காயதமதம், இலிங்காயதம், சக்தி விசிஷ்டாத்வைதம் என்றும் வழங்கப்படுகின்றது. இஷ்ட இலிங்கமே

இவர்களது வழிபடு தெய்வமாகும். விக்கிரக வழிபாட்டையும் பல தெய்வ வழிபாட்டையும் கண்டிப்பதோடு ஆலய வழிபாட்டை விடுத்து வீர சைவ மடாதிபதிகளின் கீழ் இயங்குபவர்களாக உள்ளனர்.

சைவ சித்தாந்தம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் முறையைக் கொண்டது. ஆரியரின் வருகைக்கு முன்பிருந்தே இந்த சமயம் தோன்றி இருத்தல் வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்படுவதற்கான ஆதாரங்களைக் காட்டுகின்றனர். அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள சிவலிங்க வடிவங்களும், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்கத் தமிழ் இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சைவம் சாராத சமண சமயம் சார்ந்த நூல்களிலும் சைவம் பற்றியும் சிவன் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. திருமூலரால் எழுதப்பட்ட திருமந்திரத்தில் சைவ சித்தாந்தம் என்னும் சொற் பயன்பாடு விரவி நிற்பதைக் காணமுடிகின்றது.

இந்து மதம் எனப்படும் வைஷ்ணவம் சார்ந்து நிற்கும் பிரிவினர் வேதங்களையும், அவற்றின் இறுதிப்பகுதியான உபநிடதங்களையும் அடியொற்றி நிற்க, சைவ சித்தாந்தமானது வேதங்களையும் ஆகமங்களையும் அடியொற்றியதாகக் காணப்படுகின்றது. ஆகமங்கள் சைவம், வைஷ்ணவம், சாக்தம், சனாதனம் என்னும் பிரிவுகளால் வெவ்வேறாகப் பின்பற்றப்படுகின்றன. இவற்றுள் சைவ ஆகமங்கள் 28 ஆகும். சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல்கள் மெய்கண்ட சாஸ்த்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் மெய்கண்டர் எழுதிய சிவஞான போதம் தலை சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

சைவ சித்தாந்தத்தின் அடிப்படை பதி,(இறைவன்) பசு(உயிர்), பாசம்(மலங்கள்) ஆகியன அழிவில்லாதன எனக் கொள்வது சைவசித்தாத்தின் அடிப்படையாகும். உலகியல் வாழ்க்கை இம்மூன்றையும் இணைத்ததாக உள்ளதாகக் கொள்கின்றனர் சைவ சித்தாந்திகள். பாசம் எனப்படும் மலங்கள் சடப்பொருள்கள். அவை அறிவற்றவை. பதியை பசு அடையவிடாது தடுப்பவை இவை. உயிர் பாசத்தால் பிணிப்புண்டு கட்டுண்டு கிடக்கும் நிலையில் இருந்து விடுபட தேவையானது இறை அருள். அதனை வேண்டி அடையும் அறிவாற்றல் உயிருக்கு உண்டு. அந்த அறிவைப் பயன்படுத்தி விடுபடுதலே ஆன்ம முத்தி எனக் கொள்கின்றது சைவ சித்தாந்தம். பாசத்திலிருந்து விடுபடும் வழியினைக் காட்டுவனவாக சிவாகமங்கள் காணப்படுகின்றன. இது ஞானம் பற்றி விளக்கம் தருகின்றது. இது ஞானா, கிரியா மார்க்கங்கள் எனக் கொள்ளப்படுகின்றது. மனித உடலின் அமைப்பை அடியொற்றி ஆலயம் அமைத்து வழிபடும் முறையினைத் தெளிவாக்குகின்றது சைவம்.

சைவசித்தாந்தம் சாதிகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை யாயினும் இடையில் புகுந்துகொண்ட ஆரிய ஆதிக்கம் அதனைப் பாதித்துள்ளது. ஆலயங்களின் முதன்மை அந்தணர்களின் கைகளில் உள்ளமையும், சாதி அடிப்படையில் ஆலய அர்ச்சனைகள் குல முறையிலன்றி சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் செய்யமுடியாமையும், இன்றும் சில ஆலயங்களுக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது சில சாதியினர் உட்புகக் கூடாது எனத் தடுக்கும் முறையும் பெரும் குறைபாடாக உள்ளது. அது மட்டுமன்றி 'கடவுள் விடை தந்தாலும் பூசாரி விடை கொடான்' என்பது போன்று ஆலயத்திற்கும் சமுதாயத்தில் உள்ள மக்களிற்கும் இடையே பொருளாதார அடிப்படையில் இடைவெளிகள் காணப்படுகின்றன. பொருள் படைத்தவர்களுக்கும், செல்வாக்கு நிறைந்தவர்களுக்கும் ஆலயங்கள் கூட முதன்மையை அளிக்கின்றன என்பனபோன்ற குறைகள் முன்வைக்கப்படுகின்றன. இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களில் குருமார்கள் சமூகத்தின் எந்தச் சாதியினரிலிருந்தும் அல்லது பிரிவிலிருந்தும் வரமுடியும். ஆனால் இந்து மதத்தில் அது பிறப்புரிமையாக உள்ளமையும் மக்கள் விளங்கிக்கொள்ள முடியாத மொழி உபயோகமும் பெரும் குறைபாடாகவே கருதப்படுகின்றது என்னும் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

இந்தியாவில் காணப்படும் சமயங்கள் பலவாக உள்ளன. அவை பின்பற்றும் வழிபாட்டு முறைகள், தத்துவங்கள் தம்முள் வேறுபட்டனவாகவும் உள்ளன. பல்வேறுபட்ட நிலைகளைக் கொண்டு காணப்படும் சமயங்களின் தன்மைகளை ஒருமைப்படுத்தி ஒன்றாக நோக்கி இந்து மதம் என அழைக்கப்படுகின்றது எனினும் இந்துமதம் என்னும் பெயர் பொருத்தமானதா? என்பது கேள்விக் குறியே. இந்தியாவில் தோன்றிய மதங்கள் என்று கொள்ளப்படும் சைவம், வைஷ்ணவம், சனாதனம், சாக்தம் என்பன வெவ்வேறு தன்மைகளைக் கொண்டனவாக இருக்க இவற்றை உள்ளடக்கி இந்துமதம் என அழைக்கின்றார்கள்.

சைவ சமயமே அனாதியானது ஏகமானது என சைவ சித்தாந்திகள் நம்புகின்றனர். சைவம் வட இந்தியாவில் காஷ்மீர், குஜராத், மாநிலங்களிலும் இமயமலைக்குத் தெற்கே உள்ள நேபாளத்திலும், ஆந்திரப் பிரதேசம், தமிழ் நாடு, கர்நாடகம், வங்காள மாநிலம், உத்தரப் பிரதேசம், பீகார், இலங்கை ஆகிய இடங்களிலும் முதன்மை பெறுகின்றது. இங்கு சிவனை முழுமுதற்கடவுளாக வணங்கும் தன்மை குறிப்பிடத்தக்கது. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்னும் கருப் பொருளைக் கொண்டது சைவசமயம். "யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் கணியன் பூங்குன்றனாரின் கருத்தாழம் மிக்க கவிதையிலே உலக மக்கள் அனைவரும் சமம், ஒரே பிரிவினர் என்பதனைக் குறிப்பிடும் பண்பினையே சைவசமயத்து கோட்பாட்டாளர்களும் கொண்டிருந்தனர். தமிழகத்தில் தோன்றிய திருமூலம், சிவஞான போதம், சிவஞான சித்தியார் போன்றன சைவத்தின் தனித்துவத்தையும் அதன் தத்துவத்தையும் தெளிவு படுத்துகின்றன. சனாதன தர்மம் குறிப்பிடும் பல தெய்வ வழிபாட்டு முறையும் சைவசமயத்தின் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு பின்பற்றி வருகின்றது என்பதும் குறிப்பிடற்பாலது. ☑

## இறையுணர்வின் ஆதாரம்!

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார். அப்போது, ஒருவர் எழுந்து, "இறையுணர்வு கொள்ளவேண்டும் எனில், எதற்காக ஆலயம் செல்ல வேண்டும்? கோயிலுக்குச் செல்லாமல் இறை உணர்வை அடைய முடியாதா?" என்று கேட்டார். விவேகானந்தர் பதிலேதும் கூறாமல் அவரிடம் "குடிக்கத் தண்ணீர் கொண்டுவா" என்றார். அவர் ஓடிச்சென்று செம்பில் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தார். உடனே விவேகானந்தர் "நான் தண்ணீர்தானே கேட்டேன். கூடவே செம்பு எதற்கு?" என்றார்.

அவர், "சாமி, தண்ணீர் எடுத்துவர ஆதாரம் வேண்டுமல்லவா? வெறும் நீரை மட்டும் கொண்டுவர இயலாதே...' என்றதும் விவேகானந்தர் "அதேபோல் இறை உணர்வுகொள்ள ஆலயம் தேவை. ஆலயம் ஒரு கருவி. ஆலயமே ஆதாரம்" என்றார்.

# Sri Nataraja Moortham and Modern Science

**Presented by: Prof. T.Balasubramanian, M.A.,M.PHIL.,M.Ed.**

**(In World Saiva Conference – 1999, Toronto Canada)**



The aim of this article is just trying to compare the dance of Lord Natarajar (One of the 25 Maheswara Moorthangal of Lord Sivaperuman) to the dance or the movement of the atom of micro Cosmic live particles. It also tries to show the similarity between the principles of creation of Saiva Siddhantham and the modern scientific principle of galaxy (Andam) and body (Pindam).

## Dark Matter:

Modern science believes that the creation of the universe is only from the Dark matter the so called Moolapprakruthi. i.e. a dark matter that contains everything into it. From this dark matter, all things were ooze out and formed. These findings are confirmed by the modern scientists only on the basis of hypothesis.

There was a time when it could not be counted. At that time there was nothing. Everything was contracted and frozen into a dot. Then there was no place, No day and no night. There was no hour, minute, and second. But that one "existed". The things that are visible to and the things that are not visible were all into the dark matter.

## The Creation of Universe:

The creation of universe just starts. The dark matter burst with a big bang. All the things like the light, sound, time, place, matter, energy and rule come out from the dark matter, so fast. That first second is called Blank Time. It is named after Blank who was the father of quantum principle. According to the quantum principle that was $10^{-43}$ seconds, i.e. after a dot 42 zeros and after that the number one (.0000000000 00000000000000000000000000000001.)/ At the particular second all the things came out from the dark matter, and started to various forms and shapes. Energy was the first one to come out. Atoms or their quark participles came next. Even in the energy, gravity was the first one to come out. At the time of next $10^{-36}$ seconds, the strong force of the nucleus of the atom come out. At that time there were no atoms, but a strong heavy energy that has the power to clutch the atom, tightly, appeared. Because of the deviation of the energy the universe expands, so fast. There a large number of quarks and anti quarks appeared in the expanding universe. Among them the quark particles and anti quark particles in the ratio of 1:1 billion fused together and got saved and formed as matters.

At the last $10^{-12}$ seconds, there appeared the electro magnetic force and the weak energy. The electro-magnetic force makes a kind of gravity among the negative and positive particles. This appears to be as light. This is called photons. The weak force controls radiation among the atoms. The above said four forces and the quarks appeared and spread. Now at the second of $10^{-5}$. The universe started to cool down. The level of cooling point is trillion $K^2$ (The boiling point of water is 373K; Then you can guess the other things).

In this stage each three quarks joining together to form neutron, proton etc. (There are three quarks in neutron only. i.e. Proton + Electron + Neutrino) The Temperature of the universe further comes down. The neutron the neutral particle which does not accept any charge, the proton (the male particles) which accepts the positive charge, and the electron (female particles) that accepts as negative charge, are joining together to form an atom. The neutron and proton are united and settled at the centre of the atom so that they revolve round the nucleus of the atom. For the rotation, they get the energy force from the atom only. They give that energy to the external molecules. Thus the bondage of atom formed and the external panchapoothangal (Soil, Water, Fire, Air, Sky) appeared. In this way the solar system and the stars, formed and functioned. Then the influence of matters started. After the appearance of matters, the gravity forms. The matters are the courses for the gravity force. Though the matters are forming 99% of the matters are invisible during the formation. That's why they are called as dark matter. After 300 thousand years the universe expands further, and gets cool down. In this juncture, the matters and the electro magnetic force are divided in to

two single types. The nuclear of the atom attract the electrons and forms the atoms of Hydrogen, Helium, Lithium, etc. The milky universe is filled up. The empty space of universe is prepare to allow the penetration of the photons. Then the photons started to travel freely and independently. These photons are spread over every where as a kind of micro waves. Then the matters become settled as Quasars. then, further some galaxies are formed. They deviate themselves and started moving very fast. This is the position of today.

Atom the internal matter too has its own pancha poothangal. They are as follows:

1) Quark particles are fractional particles (air).

2) The fundamental particles of an atom are Neutron, Proton, Electron combined to form the structure of the Atom (liquid).

3) Molecules, Ions, Bonds are all called Atomic matter of building pillars (Soil).

4) Quark particles, atoms, Molecules, Ion, Bonds are combined with and gives various energies (Fire).

5) Quark particles, Atoms, Molecules, Ions, Bonds, Energies are all present combined chaired, Motioned in spatial gap called absolute space (Sky). Hence we can correlate the dance (the movement) into the atoms, and the movement of galaxy and the universe which are made of atoms and the great graceful dance of Lord Natarajan. Certainly it is a wonderful miracle.

## Natarajar And Cosmic Rays:

The Antiparticle of electron is positron. In a similar way every matter has its antimatter. Hence it is certain that there are anti worlds in the galaxy as our earth. If the above statement is accepted then the theory of life after life should also be accepted which is clearly explained by Saiva Siddhantham. It is true that the souls have other lives as they have on this earth. It is proved by the scientific logical prediction. The modern scientists also accept this truth. Here it is noteworthy to think of the 14 worlds which are spoken by Saiva Siddhantham,

During the beta radiation the neutrino particles, which have short life span are emitted. The spontaneous emission of these neutrino particles from the nucleus of the atom are changed into proton particles with in twelve minutes. During this change an electron and a neutron are given out. Thus a number of particles change in their physical state which finally leads to the change in their chemical property. Because of this change the molecular structure of the atom begins to destroy. At this crucial time the cosmic rays penetrate into the atom and protect if from the destruction. These cosmic rays are the grace of Lord Nataraja. In the absence of these rays an atom will destroy.

There will be no matter if the nucleus is absent. If there is no matter there will be no body. In the absence of body there will be no business at all for soul. If there is no business for the soul, there is no need for this world. Hence Lord Nataraja, for the sake of souls creates body, sense organs, the world and the things that are to be enjoyed by the souls. This Saiva Siddhantha Philosophy is accepted by the modern science.

Cosmic rays indirectly control the electrostatic field in an uniformed manner. Hence the atomic structure and intern the Prabanjam is retained (Cosmos). In this condition the atoms of the electric field get the light by which it has been stimulated and revolved around the nucleus.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான்என தென்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"
- மாணிக்கவாசகர்

Modern scientists say that without cosmic rays, there is no universe. Similarly Saiva Siddhantham rays that without the graceful light from Lord Nataraja, There is no universe.

"Oh Lord you are the Heavens and the Earth
You are the wind and the light
Flesh and the life as well
You are the King as well of all these and
the manipulator of those puppets who
speak of 'I' ness and 'My'ness (mine)
oh Lord you who are all these
How shall I praise you?"
- Manikkavachakar.

## Dancing Natarajar (Adalvallan):



Lord Natarajar, the Alimighty is a great figure of perfect grace, with superpower and wisdom. He along with the help of his love, action, and wisdom creates five Sivathathuvangal from Maayai the raw material (the first thing). With the five Sivathathuvangal of Nadham, Bindhu, Sathakkiyam, Maheswaram and Suddhavidhai, Lord Nataraja creates the Suddhamaya Bhuvanam (The pure universe) and then Asuddhamaya Bhuvanam (impure universe) in which there are seven thathuvangal as Kalam (time). Niyadhi, Kalai Viddhai, aragam, Purudan and Mayai. With the help of Asuddhamaya Bhuvanam (Impure universe) Lord Natarajar created the thathuvam, Moolaprakruthi from which creates the Anma thathuvangal (24 thathuvangal). From this Moolapirakruthi (Quark particles) we can see with our physical eyes the atoms and the world which are formed from the quark particles. ie Moolaprakruthi are visible to our eyes. This Moolaprakruthi is called as Dark matter by the Modern scientists. This dark matter contains three types of quarks. A number of quark particles fused together to from the dark matter. From it, various types of atoms are formed and then the universe is expanding.

It cannot be denied that without the power that emits from the forehead eye of Lord Nataraja and his graceful movement, there can be no fusion at all between the atom and the universe. We cannot have thanu (body), Karanam (organs), Bhuvanam (the world), Bhogam (the means of enjoyment and suffering). This universal truth can be proved with a simple saivasiddhantha example. Without the primary source of mud, and the Secondary source of wheel and the doer (Nimithakaranam), we cannot have a pot. Likewise God the Doer, with the help of His power (Sakthi) has created everything from Mayai, the raw material. In order to explain all, He has three powerful postures i.e Yoha, Bhoga, and Veha Vadivangal. For the sake of souls Lord Natarajar takes these three postures and controls the universe and guides the souls. Hence Manickavasagar says that He (God) is the life of the world ("உலகிற்கு உயிரானாய்" ).

Lord Nataraja is always with his Sakthi. He bears the figure of Mantra (Si-va-ya-na-ma) which has the power of knowing and controlling everything. The sound is Sakthi. The matter is sivam. Sivam takes 25 types of postures which are called Maheswara Moorthangal. These postures are divided into five. The posture of Lord Nataraja belongs to Esana Mortham. While dancing, His form is mantra (Si-va-ya-na-ma). Si-stands for God. Va-for Sakthi or His power of grace. Ya- for the souls. Na- for the power of concealment. Ma- for ego and ignorance. His holy foot represents the mantra Na- the power of concealment. His shoulders represent Si- Sivam, the God. His face represents Va- power of his grace. His head represents Ya- the souls. The symbolic meaning of these five-lettered mantras of Lord Nataraja is to eradicate the bondage of the souls (Anavamala Pattru) and to give them eternal bliss.

The posture of Lord Nataraja itself is Saiva Siddhantham. His greaceful dance pervades the atom, the galaxy and all the souls. That is why, Saiva Siddhantam says that he is in the soul, with the soul and from the soul. The things that ore rotating in to the atom and the stars and planets that are rotating in the cosmos will make us understand the doctrines of Saiva Siddhanta and the philosophy of Lord Nataraja. It is told that he performed 108 types of dances. These types of dances have six organs like Karam (Hand), Siram (Head), Padam (Movement), Nilai (Position) etc., of these 108 types of dances, 16 types of dances are said to be excellent; of these 16 types, 10 types are more excellent; of these 10 types, 7 types are much more excellent. The book entitled ' Bharatha Sara Sangraham' speaks of the five types of dances of Lord Nataraja. Seven types of dances appeared from the seven types of Ragas (Music). Some philosophers claims that there were nine types of dances and others add one more dance (i.e) Sangara Thandavam. It is widely spoken that the Pancha Krithiya Paramananda Thandavam of Nataraja is considered to be great. It is Nataraja Moortham that makes the souls to experience the good and bad according to the past deeds and teaches the Gnanam (wisdom) and removes the anavamalam (ego and ignorance) and makes the souls to be matured and promotes them to the House of eternal bliss.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றலிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப் பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலரப்பதத்தே நாடு"

- உண்மை விளக்கம் - By Manavasagam Kadanthar.

The cause and effect of his cosmic dance is explained in Unmai Vilakkam, verse – 37.

During the creation of the Universe, He plays the Paramananda Koothu (dance). He shakes the small drum in his hand and produces the type of sounds. These are the basic sounds from which all letters are formed. At first the world of sound was created by Lord Nataraja, the bright figure of celestial light. It is the base for the material world. The sound originates from the sky. Hence the sound and the letters of the languages are formed. Through the movement of his small drum. Saiva Siddhantam explains in detail the philosophical truth of Lord Nataraja and his posture. He is the symbol of his five types of works, destruction, creation, protection, action of concealment and benediction. He has four hands. The hand that bears the small drum performs the creative work. The left hand that bears fire does the work of destruction. The raised leg blesses the souls. The other one stands on Muyalagan and does the action of concealment. The other amainda karam (hand) protects everything.

"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கிதன்னில் அறையில் சங்காரம்
அரனுற்று அணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே"

- Thirumoolar Thirumandiram

## The Dance at the Time of the end of the world (Kodukotti)

At the period of destruction Lord Natarajar gave asylum to all living things under his holy feet. At this juncture, his dance is called Kodukotti. Since he clapped his hands, while dancing cheerfully he is called "Kotti".

During the period of destruction, he dances. It looks very harsh. He kills all living things and put them into him. During the dance of his Kodukotti, he moves the thudi (a small two sided drum) and makes sound. That thudi makes different sounds.

By seeing Him, the goddess Ammai (Shakthi) makes the sound of symbols.

"பாடுபறை பலஇயம்பப் பல்லுருவம் பெயர்த்துக் கொடுகொட்டி
ஆடுங்கால் கோடுயர் அகல் அலகுல் கொடுபுரை நுகப்பினாள்
கொண்ட சீர்தருவாள்..."

- Kalithogai, The Sangam Literature

The recent photographs sent by the telescope Hipple will help us to imagine how God destroyed the universe. There is a black hole in this space which is 500 million times bigger that the sun. No Kind of light can penetrate into this hole because such is the density of the gravitational force of the black hole. The speed of the rotation of the gravitational force of the black hole cannot be imagined. A bright light part is there at the centre of the black hole.

The modern science wonders all things are nature. Siddhantam speaks that both the nature and the Vinai (deed) are lifeless objects. So they cannot act themselves. They should be acted by a great force and great wisdom, the supreme power-Almighty – who has eight qualities. He is God. Saiva Siddhantam calles him Lord Sivan. Sivan is Lord Natarajar. By his great dance doing the five works, creation protection, destruction, the action of concealment and benediction. His talent cannot be understood. It is Saiva Siddhantam that explains the power of God, the dependence of the souls, and their bondage. It is the only religion that logically and scientifically proves the relationship between God, soul and the bondage. The ultimate aim of God is to uplift the souls and put them into His world. That gives the eternal happiness to the souls.

Thus the aim of this article is just an effort to compare the doctrines of the Saiva Siddhantam and the modern scientific findings. The heat of it cannot be measured. This black hole has the power to burn thousand and thousands of suns and spit their ashes. It can smash all kinds of stars which are coming near the black hole. There may be a number of black holes in the universe. Though it is discovery of the modern scientists, the number is not known. Hence we can boldly say that the Kodukotti dance of Lord Nataraja will make the number of black holes to smash the universe into powder.

Here we can just compare the Kodukotti dance of Lord Natarajar to the doctrine of Saiva Siddhandam and destructive power of black holes the discovery of modern science. Behind the millions and millions of stars, there is a black spot which is not vacuum. According to the Hipple's telescope, there is no black space behind the stars. That telescope identified one black spot which has millions of stars, planets and suns. Such a huge galaxy controlled by the God , Lord Natarajar, is a great wonder.

Manickavasagar, a saint of Saiva Siddhanta, writes in his Thiru Andapagudhi –

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளம் பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின் றெழிற் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன.
சிறியலாகப் பெரியோன்"

He describes the vast areas of space and the infinite number of stars by the grace of God.

After the destruction of the universe, there is some gap. Then Lord Natarajar with his grace towards the souls starts creation. Modern science says that before the birth of Moolaprakriti, $10^{-43}$ seconds the energy comes first. Saiva Siddhandam says before that $10^{-43}$ seconds, there are two cosmos. They are Sudha Mayabhuvanam and Asutha Mayabhuvanam. The five Sivathathuvangal are created in the Sudha Mayabhuvanam and the seven Vidhya (Philosophy) Thathuvangal are created in the Asuthamaya bhuvanam: From these, Moolaprakriti, Mayabhuvanam (our world) is created with its own 24 philosophies. We believe all these things by the measurement of our thinking capacity and the sayings of our saints. It is noteworthy here that the modern scientists say about the black matter only by Hypothesis but not by conspicuous proof.

This Moolaprakiriti mayabhuvanam can be divided in to three. The five elements appeared through Rajo-Sathuva-Thamasam. These are all created, protected, destructed concealed and benedicted by Lord Nataraja. Saiva Siddhantam speaks of Sarkariyavadham (the scientific and logical argument). What doesn't exist, will not appear. What exists will appear and shine. It is also the version of Physical science. It speaks of the existence and immortality of God. The souls and Pasam-bondage-Anavam (ego & ignorance) Kanman (deeds), and Mayai (attractive worldly things).

These are all anadhi (i.e) They do not have beginning and end. From the raw material of Mayai (the bright matter) Lord Nataraja formulates (not creates) the world. For the sake of souls, with his great power and vast wisdom. This cosmic secret of Saiva Siddhanta will certainly be accepted by the modern science one day or other.

## Conclusion:

So Far, we have seen how scientific information and doctrine of Saiva Siddhantam of Lord Natarajar and his great activities are almost similar. Now we shall see the gist of this comparison.

Lord Natarajar opens his graceful eye of his forehead and emits the graceful light in order to uplift the souls. Through his movement (dance) and his holy intention, he created the body, sense organs, the universe and the things to be experienced by the five elements of soil, water, air, fire and space. The modern science proves that photons and quark particles are coming from the dark matter after its Big Bang. Thus we have everything including the universe. The creation of the universe is proved by the quantum theory, Blank time and other scientific hypothesis. Here we can thing of the blast of the Black matter and the graceful opening of the forehead eye of Lord Natarajar.

In order to give relief, to the souls that are tied of the continuous birth and death, Lord Natarajar performs the dance of Kodukotti and separates the souls from their body, sense organs, The universe, and the things to be experienced and contracts, into maya, the raw material. Thus He performs the destructive work. According to the modern science, the black holes, natural calamities etc., do the destructive work wonderfully, on earth as well as in the sky. The cosmic rays protect the atom from splitting and thus allowing the atom molecules to be alive. Thus everything exists. Even now Saiva Siddhantham tells that the great gracious light of Lord Natarajar the dancing god protects everything to a particular period according to his holy intention.

"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"
"By seeing his Holy foot I felt the things that cannot be seen."
- Appar

"தில்லையும், சிற்றம்பலத்து நட்டமாட
எடுத்திட்ட பொற்பாத மன்றோ நம்மை ஆட்கொண்டதே."
"Lord Natarajar who dance at Thillai Chittrampalam lifted the golden feet that blesses us and rules over us."
- Appar

Thus the Saiva Siddhantam speaks of the eternal world, (Paradise, Mukthi, Perinmba veedu, Erai Ulagu, Veedu Peru).

Modern scientists proved the anti matters and anti world. With the evidence of these things, we have come to the conclusion that certainly there is life in the other world for the souls.

(N.B. In this article the word "creation" is used in the sense of "formation").

Sutton®

# Jeseetha Mani, B.com

**Associate Broker**

## Jeyasuresh Jeganathan



**Smart choice for Buying or selling Your Property**

* **Commercial**
* **Residential**
* **Investment**

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான ஆலோசனைகளை இலவசமாகப் பெறவும், தற்போதைய சந்தை நிலை, மோட்கேஜ் வசதிகளை அறியவும், மோட்கேஜ் வசதிகளை அமைத்துக்கொள்ளவும் முதல்முறை வீடு வாங்குபவர்களுக்கான சலுகைகளை அறிந்துகொள்ளவும் நீங்கள் நாட வேண்டியவர்

# ஜெசீதா

**Tel: 416 746 9494**
**(24 Hour Pager)**
**Cell: 416 566 0337**
**Fax: 416 674 1682**

# Sutton Group - Commitment Ltd.

**AN INDIPENDENT MEMBER BROKER**
**45, Woodbine Downs Blvd., Toronto, On M9W 6N5**

# பெரிய புராணம்

எஸ்.சிறிஸ்கந்தராஜா



சைவசமயத்திற்குப் புகழ்சேர்க்கும் கருவூலமாக, பக்தி இலக்கிய வரலாற்றுக் களஞ்சியமாக திகழ்வது பெரியபுராணமாகும். இது பன்னிரண்டாவது திருமுறையாக விளங்குகிறது. இந்நூலை இயற்றியவர் சேக்கிழார். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல் அறுபத்துமூன்று நாயன்மார்களையும் ஒன்பது தொகை அடியார்களையும்பற்றிய வரலாறுகளைச் சித்தரிக்கும் காப்பியமாகக் கருதுவர். தழுவலும் மொழிபெயர்ப்பும் இல்லாமல் கற்பனை கலவாத காப்பியம் என்ற சிறப்பும் பெருமையும் பெரிய புராணத்திற்கு உண்டு.

இராமாயணம் அன்பு நூல், பாரதம் அறநூல், சிலப்பதிகாரம் விதி நூல், சீவகசிந்தாமணி இன்பநூல் என்றும் கூறும் பெரியோர்கள் பெரியபுராணத்தை அருள்நூல் என்று போற்றுகின்றனர். அடியவர்களைப்பற்றிப் பாடவேண்டும் என்றே சுந்தரருடைய அவதாரம் நிகழ்ந்தது. அவரே பெரியபுராண கதாநாயகனும் ஆகின்றார். பெரியபுராண கதாநாயகன் மாத்திரமல்ல; முதலும் நடுவும் இறுதியுமாகின்றார்.

பெரியபுராணத்தை எழுதுவதற்கு சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும், நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருவந்தாதி என்ற நூலும் அடிப்படையாக அமைந்தன.

'உலகெலாம்' எனப் பெரியபுராணத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் சிவபெருமான். சேக்கிழார் 'உலகெலாம்' என்ற முதல் அடியை ஆரம்பித்து முதல், இடை, கடை என்று எல்லாமாக 15 இடங்களில் இச்சொற்றொடரைக் கையாண்டுள்ளார். உலகை நினைத்து தொடங்கிய இக்காப்பியம் உலகை நினைத்து முடிவடைகிறது.

தில்லையம்பலத்தில் திருஞானசம்பந்தர் அவதரித்த திருவாதிரை நாளில் சேக்கிழார் தம் நூலை அரங்கேற்றத் தொடங்கினார். அடுத்த திருவாதிரை நாளில் அரங்கேற்றம் முடிந்ததாக பெரியபுராணம் கூறுகிறது.

ஞானப்பால் உண்டவராகிய திருஞானசம்பந்தர் தமிழ் இசைக்கும் சைவசமயத்திற்கும பெருந்தொண்டாற்றியவர். முதல் மூன்று திருமுறையும் அவருடையன. பெரியபுராணத்திலே இவருக்குத்தான் அதிக எண்ணிக்கையான 1257 பாடல்களை சேக்கிழார் பாடியுள்ளார். இதனாலேயே பெரிய புராணத்தைப்பற்றிக் கூறும்போது "பிள்ளை திருஞானசம்பந்தர் பாதி புராணம் பாதி" எனக் குறிப்பிடுவார்கள்.

சேக்கிழார் வாழ்ந்த காலத்தில் சமண சமயம் செல்வாக்கு குன்றியிருந்த போதிலும் திருத்தக்கதேவர் எழுதிய சீவகசிந்தாமணி மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தது. இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிசெய்தபோது அமைச்சராக இருந்த சேக்கிழார் பல்வேறு இடங்களுக்கும் சென்று நாயன்மார்கள்பற்றி வாய்மொழியாக அறிந்த செய்திகளை எல்லாம் திரட்டி பெரியபுராணம் என்னும் மாபெரும் வரலாற்றுக் காப்பியமாக எழுதியுள்ளார். சீவகசிந்தாமணி ஆசிரியர் வளர்த்த விருத்தப்பாவை எளிய நடைக்கு உரியதாக்கிய சிறப்பைத் தனதாக்கியவர் சேக்கிழார்.

எத்தனை வகையான நாயன்மார்கள், கற்றுக் கரைகண்ட திருநாவுக்கரசர், ஞானப்பால் உண்டு அறிவுபெற்ற திருஞானசம்பந்தர், சிவபெருமான்மீது மட்டும் பக்திகொண்டு வேறு எதனையும் அறியாத கண்ணப்பர் என பலதரப்பட்ட நாயன்மார்களின் வரலாற்றை எல்லாம் தோண்டி எடுத்து சேக்கிழார இந்நூலைச் செம்மையாக எழுதியுள்ளார்.

இவ்வாறு அரிய செய்திகளை எழுதிய சேக்கிழார்க்கு "தொண்டர் சீர் பரவுவார்" என்ற பட்டத்தை மன்னன் அநபாய சோழன் வழங்கினார். பெரியபுராணத்தில் சேக்கிழார் தம்மை அமைச்சராக விருது வழங்கிப் பெருமைசெய்த மன்னர் அநபாயசோழனை பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

சமணம் போன்ற மதங்களின் செல்வாக்கைப் பரவவிடாது எழுந்த பேரரணாகத் திகழ்ந்ததுடன். "அன்பே சிவம்" என்ற சைவசமயக் கொள்கையை சேக்கிழார் பெருமான் பெரியபுராண நெறியாகக் காட்டுகின்றார்.

இந்நூல் சமயக் காப்பியமேயாயினும் அதியுன்னத சமுதாயக் காப்பியமாகவும், பக்தி நெறியால் சமுதாய ஒருமை தோன்றி வளர வழிசெய்கின்றது. கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம் இந்நூலில் பேசப்படுவதோடு வாழ்வியல் அறங்களைப் பெரியோர்களின் வரலாறுகளால் விளக்குங்கால் ஒரு சமுதாய சீர்திருத்த காப்பியமாகவும் விளங்குவதைக் காணலாம்.

பெரியபுராணம் சைவம் செழிக்க சிவநெறி தழைக்க வழிசெய்ததோடன்றி, தேவார திருமுறைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையெல்லாம் அனைவரும் எளிதில் அறியும்வண்ணம் எடுத்துக் கூறுகிறது. பெரியபுராணம் 4387 பாடல்களைக் கொண்டது விருத்தப்பாவால் பாடப்பட்டு இரு காண்டங்களையும் திருமலைச் சருக்கம் முதல் மன்னிய சீர்சருக்கம் ஈறாக 13 சருக்கங்களையும் உடையது. நூலின் பாயிரம் திருமலைச் சருக்கம் என்ற பெயரிடப்பட்டுள்ளது. இதன் கருத்து சுந்தரர் வரலாற்றை தடுத்தாண்கொண்ட புராணத்தில் சொல்கிறார். இறுதிப்பாடலை'.... நின்றதெங்கும் நிலவி உலகமெலாம்" என முடிக்கிறார். நூலின் இறுதியில் வெள்ளானைச் சருக்கம் அமைக்கிறார். இதில் சுந்தரர் வெள்ளை யானை மீதமர்ந்து கயிலைமலை சென்ற வரலாறு சொல்லப்பட்டு காப்பியம் முடிவடைகிறது.



No One Beat Us!

On high, with your thoughts

உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்

PRO MAR

Awards & Promotions Ltd.

www.promarawards.com

One stop for all your promotional Ideas...




Trophies

Cop.Awards

Plaques, Medals

Laser Engraving

Sand carving

Screen Printing

416-291 2344

Fax: 416-291 1231

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

# திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகள்

சாந்தா குகதாசன்

இந்துசமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் வடபகுதியில் யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. இங்கு ஆனைக்குட்டிச் சுவாமியார், கடையிற் சுவாமியார், குடைச் சுவாமியார், செல்லப்பாச் சுவாமியார், யோகர் சுவாமியார் போன்ற பல சித்தர்கள் தோன்றிச் சமாதியடைந்தார்கள். இப்பெருமை யாழ்ப்பாணத்திற்கே சாரும்.

இந்தச் சித்தர் வரிசையிலே தோன்றியவர்தான் சபாரெத்தினம் சுவாமிகள். இவர் யாழ்ப்பாணம் கச்சேரியடியில் பாண்டியன்தாழ்வு என்னுமிடத்தில் சின்னத்தம்பி, சின்னத்தங்கம் தம்பதியினருக்கு மூத்த புத்திரனாக 1904ஆம் அண்டு பங்குனி மாதம் 28ஆந் திகதி அவனியிலே அவதரித்தார்.

இவர் சிறுவயதிலிருந்தே கல்வியில் ஆர்வமுள்ளவராகத் திகழ்ந்தார். பின் சிவயோக சுவாமியாரின் அருட்பார்வை பெற்றுப் பக்குவநிலை அடைந்தார். சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் அருட்தாகம் தலைப்பட சிதம்பரம் சென்றார். அங்கு தில்லைக்கூத்தனைப் பார்த்துப் பரவசம் அடைந்தார். அங்கிருந்து இந்தியாவிலுள்ள வேறு பல தலங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டார்.

பின் சுவாமிகள் தன் பிறந்த ஊராகிய யாழ்ப்பாணம் வந்து மறவன்புலவில் சின்னத்தம்பிச் சுவாமி சமாதி நிலையத்தில் தங்கியிருந்தார்கள். அப்போதுதான் பின்வரும் திருவாசகம் கனவிலே அவருக்கு உணர்த்தப்பட்டது.

ஒருவனேபோற்றி ஒப்பில் அப்பனேபோற்றி வானோர்க்
குருவனேபோற்றி எங்கள் கோமளக் கொழுந்துபோற்றி
வருகவென் றென்னைநின்பால் வாங்கிட வேண்டும்போற்றி
தருகநின் பாதம்போற்றி தமியனேன் தனிமைதீர்த்தே.
(சதகம் 68)

இப்பாடல் எங்கேயுள்ளதென்று ஆராய்ந்தார். ஒரு கோவிலில் ஒருவர் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் பொழுது இத்திருவாசகத்தைப் பாடினார். உடனே சுவாமிகள் விரைந்து இப்போ நீர் பாடிய பாடல் எதிலுள்ளது என்று வினாவ, அவர் திருவாசத்தில் உண்டு எனப் பதிலளித்தார். இதை அறிந்தவுடன் இத் திருவாசகத்தைத் தொடர்ந்து, அவரின் மனதில் முழுத் திருவாசகமும் (657) கனிந்த பாடமாகின. கலைவாணி அருளால் திருவாசகம் முழுவதும் அவர் நாவில் தவழ்ந்தன.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மணிவாசகப் பெருமானால் அருளப்பட்ட திருவாசகம் இற்றைவரை மொழி, இனம், மதம், நாடு முதலிய



எல்லைகளைக் கடந்து பல பெரியோர்களது பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. “திருவாசகத்திற்கு உருகாதவர் ஒருவாசகத்திற்கும் உருகார்” என்பர். திருவாசகத்தை உள்ளம் உருகி ஓதி இறையருள் பெற்றவர்களில் திருவாசகப் பேரூற்று எனப் போற்றப்படும் சபாரத்தினம் சுவாமிகளும் ஒருவராவார்.

இவர் எமது காலத்தில் ஆன்மீக ஒளியாக விளங்கிப் பலரைப் புனிதமடையச் செய்தவர். திருவாசகத்தின் மகிமையை இன்றைய தலை முறையினரும் உணரும்படி வாழ்ந்து காட்டியவர். இறை பணிக்கே தன்னை அர்ப்பணித்த சுவாமிகள் ஈழத்தில் பாடல்பெற்ற தலமாகிய பாலாவித் தீர்த்தக்கரையில் அமைந்திருக்கும் திருக்கேதீஸ்வரத்தில் நிலையாகத் திருமடம் அமைத்து அடியவர்களின் பசியையும் அறியாமையையும் நீக்கத் தீர்மானித்தார். மன்னார்க் கடலால் கடந்து மடங்கட்டும் பொருட்களைச் சேர்த்து மடத்தை உருவாக்கிச் சுண்ணாம்பினால் திருவாசக மடம் எனப் பெயர் எழுதினார்கள்.

திருக்கேதீஸ்வரத்தில் தங்கியிருந்து நல்ல கமக்காரனாயும் கர்மயோகியாகவும் வாழ்ந்தார். அடியார்களை உபசரித்து அமுது வழங்கினார். கௌரீசர் பாடசாலை, நெசவாலை என்பவற்றைக் கட்டினார். தனித்துநின்று திருவாசக மடத்தில் 35 அடி ஆழமான கிணறு ஒன்றை உண்டாக்கினார்.

இவர் திருக்கேதீஸ்வரத்திலிருந்து நல்லூர்த் திருவிழாவிற்கு கால்நடையாகவே வருவார். ஒருநாள் வரும் வழியில் வெள்ளாங்குளம் என்னுமிடத்தில் ஒரு காட்டுயானை இவரை மறித்தது. உடனே "உன்னிடத்தில் இருப்பதுதான் என்னிடத்திலும் இருக்கிறது" என்ற கூறி நின்றுவிட்டார். யானை வணக்கம் செய்து திரும்பிவிட்டது.

திருக்கேதீஸ்வரம் குடிசையில் சுவாமிகளுக்குத் தொண்டுசெய்துவந்த பஞ்சாட்சர அம்மா மரணப் படுக்கையில் இருந்தபொழுது சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். அவ்வேளை தொண்டர்கள் சுவாமிகள் இவ்விடம் இல்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த பொழுது, சுவாமிகளுக்குத் திருவருளுணர்த்த, திடீரென்று சுவாமிகள் திருக்கேதீஸ்வரம் வந்து சேர்ந்தார்கள். சுவாமி வந்தபின் அம்மா இறைவனடி சேர்ந்தார். இப்படியே அவரது பெருமையை எழுதிக்கொண்டே போகலாம்.

சுவாமிகள் திருக்கேதீஸ்வரத்தான் மீது பேரன்பு கொண்டவர். "கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறும்" கருத்துக்களை வான் மழையெனப் பொழிவார். ஆவல் உள்ளவர்கள் அள்ளிப் பருகி ஆனந்தமடைந்தனர்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்குக்கமைய திருவாசக மடம் அமைத்து திருவாசகத்தைப் பண்ணோடு பாடியும் பாடக் கூடியவர்களைப் பாடவைத்தும் பணிபுரிந்தார் சபாரத்தினம் சுவாமிகள்.

தன் இறுதி நாட்களை யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளி என்னும் இடத்தில் கழித்தார். எந்நேரமும் திருவாசக மழையைப் பொழிந்து கொண்டிருப்பார். அவரைச்சுற்றி அடியார் குழாம் சூழ்ந்து கொண்டேயிருக்கும். தன்னை நாடிவரும் அடியார்க்கு ஆசிவழங்கிக் கொண்டிருந்த சுவாமிகள் 1988ஆம் ஆண்டு தைமாதம் 25ஆந் திகதி அச்சுவினித் திருநாளில் இறையடி சேர்ந்தார்.

அவரது அஸ்தி அடங்கிய நினைவாலயம் அடியார்களால் மறவன்புலவில் நிறுவிப் போற்றப்படுகின்றது.

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினர் ஆண்டுதோறும் குருபூசை விழாவையும் திருவாசக முற்றோதலையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இச்சபைக்கு திருவாளர் எஸ்.ரீ.தியாகராஜா தலைவராகவும், திரு.தம்பு துரைராஜா செயலாளராகவும் இருந்து சுவாமிகள் விட்டுச் சென்ற ஆன்மீகப் பணியைத் தொடர்ந்தும் கொழும்பில் செய்துவருகின்றார்கள்.

சுவாமியின் புகழ் எங்கும் பரவட்டும்!

☑

## திருப்பால் கடல் கடைதல்

- பிரியா விவேகானந்தன்

ஈசன் படைப்பில் தேவர் அசுரர் அதாவது நல்லார் பொல்லாதார் ஆகிய இருதரத்தாரும் இடம்பெற்றிருக்கின்றார்கள். இவர்களுக்கிடையே ஒற்றுமை கிடையாது. இடையிடையே சண்டை நேர்வதுண்டு. பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெறுதற்கு இருதரத்தாரும் ஒன்று கூடினர். மேருமலையை மத்தாகக் கொண்டனர். வாசுகி என்னும் பாம்பு கயிறாக உதவியது. கடலைக் கடைந்ததன் விளைவாக லட்சுமி தேவி (செல்வம்), சரஸ்வதி (கல்வி), கௌதுஸ்துபம் (ஆபரணம்), ஐராவதம் என்னும் வெள்ளை யானை (மூட்டை சுமக்கும் வாகனம்), கற்பக விருட்சம் (விரும்பியதை எல்லாம் வழங்கவல்லது), காமதேனு (நாடியதை எல்லாம் நல்கவல்லது), ஆகிய இத்தனை வித சம்பத்துகள் வருவனவாயின. கடல் கடைந்தவர்கள் ஆலகால விஷம் (மரணம்) வந்தது. தேவர்களும் அசுரர்களும் மூவுலகங்களுக்கு ஓட்டம் பிடித்தனர். விஷமோ அவர்களை விடவில்லை. கடைசியாக அவர்கள் சிவனாரிடம் சென்று சரணபுகுந்தனர். பெம்மானும் பாம்பின் விஷத்தைத் தாமே ஏற்று உண்டு உயிர்களை உய்வித்தார்.

இது அன்று ஒருகால் நிகழ்ந்த நிகழ்ச்சியன்று. அன்றும் இன்றும் என்றும் நிகழ்ந்துவருகின்ற வாழ்க்கை நிகழ்ச்சியாகும். உயிர்கள் அனைத்தும் வாழ்வு என்னும் பால்கடலைக் கடைகிறார்கள். அவர்களுக்குச் செல்வம், கல்வி, வண்டி, வாகனம், ஆடை, ஆபரணம் முதலியன வாய்க்கின்றன. மரணத்தை ஒத்திவைப்பது அமிர்தபானமாகும். உணவின் வாயிலாகச் சாவு தள்ளி வைக்கப்படுகிறது. எனினும், அவ்விஷம் உயிர்கள் அனைத்தையும் காலக்கிரமத்தில் எடுத்து விழுங்குகிறது. ஆனால், சிவஞானத்தை அனுபூதியில் பெற்றுச் சிவனை அடைகிறவர்களுக்கோ மரணமல்லை.

சிவனார் தியாகராஜனாகப் போற்றப்படுகிறார். அதற்கு விளக்கம் இச்சம்பவத்தில் கிடைக்கிறது. வாழ்வு என்னும் பாற் கடலைக் கடைந்து உலகத்தவர் பலப்பல இன்பங்களைப் பெறுகின்றனர். சிவனார் அதில் பங்குகொள்கிறதில்லை. உலகம் நல்குகிற இன்பத்தை நாடாதிருப்பது அவரது தியாகம். தியாகத்தின் உச்சநிலையை அவரது செயற்கரிய செயலில் காண்கிறோம். உலகத்தவரை உய்வித்தல் பொருட்டு அவர்கள் உண்டுபண்ணிய விஷத்தை தாம் அருந்தினார். விஷத்தில் வரும் துன்பத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டார். உலக நன்மைக்காகப் பாடுபடுவதால் வருகிற துன்பத்தை அமைதியாக ஏற்றுக்கொள்பவனே தியாகி. இது துறவுக்கு முடிந்த விளக்கமாகிறது.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை வெளியாகிறது. வாழ்க்கையின் விளைவாக உயிர்கள் பஞ்சேந்திரியங்கள் வாயிலாக விஷத்தை விளைவித்துக் கொண்டே இருக்கின்றன. பஞ்சபூதமாயிருக்கின்ற சிவனார் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பூதங்கள் வடிவில் இருந்து அந்த விஷத்தை அமிர்தமாக மாற்றியருளிய வண்ணமாயிருக்கிறார். எனவே, உயிர்கள் நலத்துக்காக நஞ்சுண்ணுதல் அவரது ஓய்வு ஒழிவு இல்லாத செயலாகிறது.

# பண்ணோடிசைந்த இறை இன்பவாழ்வு

திருமதி க.சொர்ணலிங்கம்,
செயலாளர், கொழும்பு சிவத்திருமன்றம்

தமிழர் வாழ்வு, மொழி, சமயம், யாவும் தொன்மையானவை மட்டுமன்றி யாவும் இறைமயமாய் அமைந்து இன்பம் தருபவை. காதலையும் வீரத்தையும் வெளிப்படையாய் விபரித்த சங்க இலக்கியங்கள் இறையின்பத்தைச் சுட்டாமல் சுட்டின. பக்திநெறி சார்ந்த காரைக்கால் அம்மையார், நால்வர் ஆகியோர் வாழ்வு இறைகளோடு இசைந்த இன்ப வாழ்வு. அதில் பக்தியும் பண்பும் பரிமளித்தன. கர்நாடக இசையும் பழைய இசை என்பதால் அதுவும் பண்ணிசையின்பாற் பட்டதே. அவ்வப்போது தமிழுக்கும் சைவத்துக்கும் பிறரால் இடர்பாடு நேருவதும் சிவனடியார்களால் அவை களையப்படுவதும் சரித்திரம். திருமுறைகளும், அவற்றைப் பண்ணோடு பாடுதலும், பொலிவிழந்து திருமுறை செல்லரித்தமையும், பின் அவை புதுப்பொலிவு பெற்றமையும் இராசராசன் பண் வகுத்தமையும் சரித்திரம். இன்றும்கூட இந்துவெனத் தம்மை அழைப்போர் சைவத் திருமுறைகளை, சைவ சின்னங்களை ஒதுக்கி, சைவத்தை அறுசமயத்தில் ஒரு கூறாக்கினாலும்கூட தேவாரப் பண்ணிசை தன் மகிமையை உணர்த்திவருகிறது. பல்கலைக்கழகங்களில் பண்ணிசைப் பட்டப்படிப்பு நடைபெறுவதும் சைவ மன்றங்கள் பண்ணிசை ஒலிநாடாக்களை வெளியிட்டுவருவதும் இன்று கண்கூடு.

பண்டைத் தமிழ்ப் பண்பாட்டை நோக்கின் அவை அறம்சார்ந்த பொருள்தேடலும், அறம்சார்ந்த இன்பமயமான வாழ்வு வாழ்தலையும் காட்டிநிற்கின்றன. இவ்வாறு அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றும் வீட்டு நெறிக்கு இட்டுச்செல்வதாகிய உயரிய இலட்சியத்தை தம் நூற்பொருளாகக் கொண்டெழுந்த நூல்களையே சான்றோர் அனுபவித்து மதித்தனர். அகப்பொருள் நூல் அகத்திணையை முதலில் கூறும்போது நூல் நுதவிய பொருள் தமிழ் எனவும், நூற்பொருள் வீடு எனவும் கூறியமை தமிழரின் பண்பாட்டின் அதி உயர் விழுமிய பொருளைச் சுட்டுகின்றது. அதாவத மானிடக் காதலை மையமாகக் கொண்ட வாழ்வு தமிழ் வாழ்வாகி, அது பின் இறைகளோடு இயைந்த பேரின்பப் பெருவாழ்வுக்கு இட்டுச்செல்வதைக் காணமுடிகிறது. இத்தகைய இலட்சிய வாழ்வு பற்றிய செய்தி வேறெந்த நாட்டு நூல்களிலும் காணமுடியாது. புற அழகாகிய உடல் அழகு, ஆண் பெண்ணிடையே தோன்றும் அன்புடைக் காமமாய் ஐந்து வகை நிலங்களுக்குமுரிய ஒழுக்கமுமாய் (அன்பின் ஐந்திணையாய்) இறவாத இன்ப அன்பு வாழ்க்கைக்கு இட்டுச்சென்றமை திருக்கோவையார் மூலம் அறியக் கிடக்கின்றது.

மிகவும் அற்புதமான முறையில் புவியியல் சூழலுக்கேற்ப காடு, மலை, நதியோரம், கடலோரம் என்பவை நால்வகை நிலங்களாக முல்லை, குறிஞ்சி,



மருதம் நெய்தலென வகுக்கப்பட்டு, அவ்வந்நிலங்களில் மழையின்றி வெப்பம் மேம்பட்டபோது அது பாலை என வழங்கப்பட்டு அவ்வந் நிலத்திற்கே சிறப்பாகவுள்ள தெய்வம், மானிடர், மரம், பூ, பண்ணிசை, யாழ்வகை, பொழுது என்பன வகுக்கப்பட்டமை தமிழரின் சிகரமான சமூக, சமய, பொருளாதார பண்பாட்டு வாழ்வும் சமமாக உள்ளன. உதாரணமாக மலைசார் இடங்கள் உள்ள குறிஞ்சிக்குரிய முருகன், கானவர், குறிஞ்சிமரம், குறிஞ்சிப் பண்(இராகம் □ரிகாம்போதி), குறிஞ்சி யாழ் என வகுக்கப்பட்டுள்ளமையை சங்க நூல்களில் பரக்கக் காணலாம். சிவன் இந்நிலங்களுக்குரிய தெய்வம் மானுடர் தொழில் முதலியவற்றையெல்லாம் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடுபவனாய் தான் என்றும் மாறுபாடடையாத ஒருபெற்றித்தான தன்மையுள்ளவனாய் இருப்பவனெனச் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன. அவன் தென்னாடுடைய சிவனாகவும் தென்னாட்டுக்குரிய சிறப்பான தெய்வமாகவும் பொதுவில் என்னாட்டவர்க்கும் உரிய தெய்வமுமாவான். அவன் ஒருவனே தனிமுதல் என்பதனை "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்கின்றார் மணிவாசகர். எனவே, அவன் அறுசமயக் கூறுகளில் வரும் ஒருவன் அல்லன். சிவன் அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களின்படி வாழ்வோருக்குத் தன் திருவடிப் பேறாகிய பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கவே "குஞ்சிதபாதம்" எனப் புகழப்படும் தூக்கிய திருவடியைத் தனது இடது கரத்தினால் சுட்டி உயிர்களை வாவென அழைக்கிறார். இத்தகு பாங்கில் அமைந்து பஞ்ச கிருத்தியங்களைச் சுட்டும் நடராசர் திருவுருவத்தை ஜி.யூ.போப், அயன்ஸ்டீன் போன்ற மேல்நாட்டவரும் வியந்து போற்றியுள்ளனர். இத்தகு சிறப்புடைய சிவன் மறையோர்

கோலத்துடன் மணிவாசகரிடம் சென்று "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று கேட்டு, திருக்கோவையைச் சைவத் தமிழ் உலகுக்குத் தந்தமை நம் பெரும்பேறே. சிவனே முதற் சங்கத் தலைமைப் புலவனாக இருந்து கடைச் சங்கம்மருவிய காலத்தில் எழுந்தருளிவந்து சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் இணைக்கும் கோவையைப் படைத்தான்.

காரைக்காலம்மையார் முதன் முதலில் நட்டபாடைப் பண்ணிலும் (பந்துவராளி) இந்தளப் பண்ணிலும் (நாதநாமக்கிரியை) சிவன்மீது திருப்பாடல்கள் பாடியதால் அவை கோயில்மூத்த திருப்பதிகங்கள் எனப்பட்டு, 11ம் திருமுறையுள் முதலாவதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஞானசம்பந்தர் அழகிய தமிழில் பக்திச் சுவை நிரம்பிய பாடல்களை 23 பண்களில் அமைத்து (7ம் நூற்றாண்டில்) பாடியுள்ளார். தொடர்ந்து, அப்பரும் சம்பந்தரும் பலவிதப் பாடல் வகைகளைப் பண்பொருந்தப் பாடினர். இப்பக்தி இசை இயக்கம் வட இந்தியாவிற்கு முகமதியரால் எடுத்துச் செல்லப்பட்டது என சரித்திர ஆய்வாளர் கூறுகின்றனர்.

தெலுங்கு நாட்டவரான தியாகராச சுவாமிகள் திருவையாற்றில் வாழ்ந்த காலத்தில் பண்ணிசையைக் கேட்டறிந்தே கர்நாடக சங்கீதத்திற்குப் புது மெருகு ஊட்டினார். இதனால் பழைய பண்களுக்குப் பொருந்தக்கூடியதாக கர்நாடக இசை இராகங்கள் அமைந்தன. உதாரணம்: காந்தாரப் பண் - காம்போதி இராகம். பண்ணும் கர்நாடக சங்கீதமும் இராகப் பெயரால் மாறுபடினும் அவை ஒன்றே என்பாரும் உளர்.

சிவனுடைய வாக்கே தமது வாக்காக (தனதுரை எனதுரையாக) ஓதிய நால்வர் வாயிலிருந்து வந்த திருவார்த்தைகள் தமிழழகு, பண்ணிசை, இறைபக்தி, இறையன்பு என்பவற்றை பரக்கக் காட்டி நிற்கின்றன.

"சிவனின் அருளினால் சந்தமிவை தண்டமிழினின்னிசை எனப் பரவு பாடலுலகில் பந்தனுரைகொண்டு மொழிவார்கள் பயில்வார்கள் உயர் வானுலகமே" என்றும்,

"புணர்ந்த தமிழ் பத்துமிசை யாலுரை செய்வார் பெறுவர் பொன்னுலகமே" என்றும்

"பண்ணாரத் தமிழ் வல்லார் பரலோகத்திருப்பாரே" என்றும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இறைவன் உயிரின் உடல்பெறாத கேவலம், உடல்பெற்ற சகலம், மலமகன்று உடலகன்ற சுத்தம் ஆகிய மூன்று நிலைகளிலும் உயிரை அத்துவிதமாய் விட்டுப் பிரியாது உடன் கலந்திருப்பான். ஆயினும் உயிர் தன் மலமாயா மயக்கத்தால் மலத்துடன் அத்துவிதப்பட்டுத் தனது சுய இயல்பாய சிவாத்துவிதத்தை உணர்வதில்லை. உயிர் சாரவேண்டியது தனக்கு என்றும் முழுமுதலாயும் தன்னை விட்டுப்பிரியாதுமுள்ள இறைவனையே. அவனைச் சாருவதற்கு அவன் விரும்பும் பண்ணிசை சிறந்த சாதனையாகும் என்பதை "அர்ச்சனை பாட்டேயாகும்" ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுகென்றார் தூமறைபாடும் வாயார்" எனச் சிவன் சுந்தரருக்குக் கூறியதாகச் சேக்கிழார் கூறுகிறார். சுந்தரர் பண்ணோடு இசைபாடி, சிவனோடு இயைந்த இன்ப வாழ்வை வாழ்ந்து காட்டியவர். அவர் தனது பாடலில் தனது அனுபவத்தை "இறைகளோடு இசைந்த இன்பம், இன்பத்தோடு இசைந்த வாழ்வு" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பர் "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்றும், மணிவாசகர் "பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும் பெம்மான்" என்றும் இறைவனுக்கு உகந்த இசைபற்றிப் பாடியுள்ளனர்.

சைவப் பெருமக்கள் போற்றும் எட்டாம் திருமுறையான திருவாசகம் மணிவாசகரினால் சரியா, கிரியா, யோக, ஞான நிலையில் நின்று பாடப்பட்டதால் அது கேட்போரைப் பிணிக்கும் தன்மையது. போப்பையர் போன்ற மேல்நாட்டவரையும் கண்ணீர் மல்கச்செய்தது.

"மாணிக்கவாசகா, நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் பால் கலந்து, தேன்கலந்து பசுங்கனித் தீன் சுவை கலந்து ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என வள்ளலார் கூறுகின்றார். சிவனுடன் ஒன்றிக் கலந்து உருகிப் பாடும் பயன் சிவபுரம் சேர்தல் என்பதை "அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவடையாமே புடைபட்டுருகிப் போற்றுவோம் புயங்கனாழ்வான் புகழ்களையே" என மணிவாசகரும் கூறுகின்றார்.

பிறப்பு இறப்பெனும் வரம்பெல்லைகளைக் கடந்த நெறியாகிய "எல்லை மருவா நெறியளிக்கும் வாதவூரர்" தந்த தேன் திருவாசகம். மோகனம் என்னும் இராகமான முல்லைப்பண்ணில் திருவாசகத்தைப் பாடி உருகுதல் சைவத் தமிழர் பண்பாடாகும். சித்தாந்த சாத்திரக் கருத்துகள் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் அன்பின் ஐந்திணை ஒழுக்கமெனும் பண்பாட்டு வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இறை காதல் மயக்கம் தரும் மோகனத்தில் திருவாசகம் பாடப்படினும் அதில் வரும் அகவல், ஆனந்தம், அதிசயம், வீரம், ஊசல், அம்மானை போன்ற பாடல்களுக்கூடாக அன்புணர்வு வெளிப்படுவதால் இராகங்களும் இடையிடையே மாறும் சாத்தியமும் மரபும் இருக்கவே செய்கின்றது. இவ்வகையில் கொழும்புச் சிவத்திருமன்றம் நடத்திய திருவாசக முற்றோதலிலும் ஆரபி, ஆனந்தபைரவி, பைரவி, அடானா, சங்கராபரணம், புன்னாகவராளி முதலான இராகங்கள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்கியைய, கொழும்பு சிவத்திருமன்றம் திருமுறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 70 பாடல்கள் அடங்கிய ஒலிநாடாவினை அண்மையில் வெளியிட்டுள்ளது. இது "பண்ணிசைப் பயிற்சி" முறையில் அமைந்துள்ளது. மேலும் திருவாசகத்தை இயன்றவரை இவ்வண்ணம் பாடலாமென யாவரும் அறிந்து பயன்பெறும் பொருட்டு முப்பதுக்கு மேற்பட்ட இசைவல்லார்களைக் கொண்டு திருவாசக முற்றோதலை நிகழ்த்தி பத்து இறுவட்டுகளில் அவற்றை ஒலிப்பதிவு செய்து வெளியிட்டுள்ளனர்.

# சைவ சமயத்தில் அன்னை வழிபாடுகள்

பாலமுருகன், நல்லூர்.

பரம்பொருள் உருவமும் பெயரும் அற்றது. பேரறிவாகவும் எப்பொழுதும் எங்கும் எதிலும் ஊடுருவி நின்ற அனைத்தையும் இயக்கும் ஆற்றலாகவும் உள்ளது.

அறிவும் ஆற்றலும் இணைந்ததே பரம்பொருள். அறிவு - சிவன், ஆற்றல் - சக்தி, அறிவு - சதாசிவமாகவும் பரமசிவமாகவும் தந்தையாகவும், ஆற்றல் - பராசக்தியாகவும் ஆதி சக்தியாகவும் அன்னையாகவும் சக்தி வழிபடப்பெற்றது.

சௌந்தர்யலகரியில் ஆதிசங்கரர் பராசக்தியை, உலக அன்னை, பனிமலை அரசன் மகள், பரமசிவன் பத்தினி, உமை, சிவை. ஆதியும் அந்தமும் இல்லாதவள், பவானி, பார்வதி என்றெல்லாம் அழைக்கிறார்.

அன்னை பராசக்தியே கன்னியாகுமரியில் குமரியாகவும், காஞ்சிபுரத்தில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், நெல்லையில் காந்திமதியாகவும், திருக்கேதீச்சரத்தில் கௌரியாகவும், மயிலாப்பூரில் கற்பகாம்பாள் ஆகவும் இன்னும் பற்பல ஊர்களில் பற்பல பெயர்களுடனும் காட்சி தருகிறாள்.

பராசக்தி, பார்வதி, துர்க்கை, திருமகள், கலைமகள், காளி, பவானி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, லலிதா மகாதிரிபுரசுந்தரி எனப் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பெயர்களுடன் இருப்பவள் அன்னையே.

## லலிதா மகா திரிபுரசுந்தரி

லலிதா எனில் அழகு, திரிபுர எனில் அறிபவள், அறியப்படும் பொருள், அறிவு என்ற மூன்றும் பொருள்படும். சுந்தரி எனில் அழகி, மாதுளம்பூ நிறத்தாள், கைகள் நான்கு உடையாள். இடது பின் கையில் பாசம், வலது பின்கையில் அங்குசம் கொண்டுள்ளாள். ஆசையை அடக்கும் பாசம், குரோதத்தை அடக்கும் அங்குசம் கொண்டுள்ளாள். பாசம் இச்சாசக்தி, அங்குசம் ஞானாசக்தி.

முன் இடது கையில் கரும்பு. முன் வலது கையில் ஐந்துவித மலர்கள். கரும்பு உள்ளத்தையும் மலர்கள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து புலன்களையும் குறிக்கும் வில், அம்பு, கிரியா சக்தி.

மாணிக்கம், வைரம் புனைந்த முடி – ஞான ஒளி, முக்கண்கள், நறுமணக் கூந்தல், கஸ்தூரிப் பொட்டு, புன்னகை தவழும் முகம், பருத்த தனங்கள், செந்நிறப் பட்டாடை, ஒளிதரும் அணிகலன்கள். தன்னை வழிபடுவோர் அகத்திருள் போக்குவாள். அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் தருவாள்.

## துர்க்கை

திருமாலின் சகோதரி, துர்க்கை, திருமாலைப்போன்றே சங்கு, சக்கரம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களைக் கையில் ஏந்தியவள். சிங்கம் துர்க்கையின் வாகனம்.

மணிமுடி சூடிய தலையில் பிறைச் சந்திரன் உண்டு. மன்னர்களும் வீரர்களும் துர்க்கையை வழிபடுபவர். தன்னைச் சரணடைந்தவர்களின் இன்னலைத் துடைப்பாள்; துன்பங்கள் போக்குவாள்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் துர்க்கையை வழிபடும் நாட்களாகும்.

## திருமகள்

திருமாலின் சக்தி இலக்குமி செல்வத்தின் தாய் இவளே. ஒப்பற்ற அழகுடையாள். வெள்ளை முகம், பருத்த தோள்கள், சிவந்த இடை, சிவந்த பாதங்கள் உடையாள்.

மாலைகள், ஆடைகள், அணிகலன்கள் அணிந்தவள். சந்தனப்பூச்சு மேனியள், கவர்ச்சியான தோற்றமும் வனப்புமிக்க இளமையும் செறிந்தவள். தாமரையில் அமர்ந்திருப்பாள். நான்கு யானைகள் எப்பொழுதும் இவளை நீராட்டும். நான்கு கைகளில் பின் இரண்டிலும் தாமரை மலர்கள், முன்னிரண்டில் ஒன்று அபயகரம், மற்றது வரத கரம் ஆகும்.

தனலட்சுமி, தானிய லட்சுமி என எட்டுவகை இலக்குமிகள் அஷ்ட இலக்குமிகள் எனப்படுவர். திருமகளை வழிபடுவோர் பெரும் செல்வம் அடைவர். மேன்மையுடன் வாழ்வர்.

நவராத்தரி நாட்களில் நடுமூன்று நாட்கள் திருமகளுக்கு உரியன.

### அன்னபூரணி

பொன்வண்ண மேனி, பொன் அணிகலன்கள் அணிந்தவள். மாலை சூடியவள். வலது கையில் பொன் அகப்பை, இடது கையில் பொற்கலசத்தில் பாற்சோறு.

உயிர்கள் அனைத்துக்கும் உணவு வழங்கும் அன்னை அவள். காசியில் கோயில் கொண்டருளி இருப்பவள். அன்னபூரணித் தாய்.

### மகிடாசுரமர்த்தினி

கொற்றவை என்ற அன்னையே மகிடாசுரமர்த்தினி. சங்ககால நூல்களிலும் சங்கம் மருவிய காலத்ததான சிலப்பதிகாரத்திலும் கொற்றவை பற்றிய குறிப்புகள் உண்டு.

புலித்தோல் ஆடை, யானைத்தோல் போர்வை, காட்டெருமைத் தலைமேல் நிற்றல், சிங்கம் வாகனம், சிவனின் ஒரு பாதியே கொற்றவை.

மகிடன் என்னும் அசுரனைக் கொன்றதால் இப்பெயர் ஏற்பட்டது.

### சந்தோஷி மாதா

விநாயகப் பெருமானின் திருமகள் சந்தோஷி மாதா. மலைமகள், திருமகள், கலைமகள் மூவரின் சக்திகளையும் சிறப்புக்களையும் பெற்றவர்.

வெள்ளிக்கிழமையில் சந்தோஷி மாதா விரதம் தொடங்கலாம். அடுத்த வெள்ளிவரை விரதமிருக்க வேண்டும்.

நாள்தோறும் சந்தோஷி மாதா படத்திற்குப் பூசை செய்ய வேண்டும். வறுத்த கடலையும் வெல்லமும் அவருக்கு உகந்த நைவேத்தியம்.

விரதநாள்களில் சந்தோஷி மாதா கதையைப் படிக்க வேண்டும். அந்த நாட்களில் புளியோ, புளி சேர்த்த உணவே உண்ணக்கூடாது.

சந்தோஷி மாதாவை வழிபடுபவர்கள் எல்லாச் செல்வமும் பெற்றுச் சந்தோஷமாக வாழ்டவர். சந்தோஷத்தை அளிப்பதால் சந்தோஷிமாதா எனப் பெயர் பெற்றாள்.

### கலைமகள்

பிரம்மாவின் சக்தி சரஸ்வதி. கல்வியின் தாய் இவளே. வெள்ளை ஆடை அணிவாள். வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்.

நான்கு கைகளுள் பின் வலக்கையில் மாலை கல்வியைக் குறிக்கும். பின் இடது கையில் ஏட்டுச் சுவடி ஞானத்தைக் குறிக்கும். முன் இரு கைகளிலும் வீணையை ஏந்தியுள்ளாள். வீணையின் இசை ஆனந்தத்தைத் தரும். அறிவைக் குறிக்கும்.

பக்தியோடு கலைமகளை வழிபட்டு, அனைத்தையும் அறியும அறிவினைப் பெறுவர்.

நவராத்திரி நாள்களின் இறுதி மூன்று நாட்களும் கலைமகளுக்குரிய நாட்கள்.

### மகாகாளி

பத்துத் தலைகள், பத்துக் கைகள், பத்துத் தோள்கள், ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள்.

கரிய நிறமேனி, வாயில் தெற்றுப் பற்கள். தொங்கும் நாக்கு, கத்தி, அம்பு. கதை, சூலம், சக்கரம், பாசம், புசுண்டி, பரிகம், வில், இரத்தம் தோய்ந்த தலை இவற்றைப் பத்துக் கைகளில் கொண்டவள். செத்த உடல்களால் பின்னிய ஆடை. கபாலத் தலை அணி அணிந்திருப்பாள்.

உலகின் அழிவுச் சக்தி இவளே. போர், கிளர்ச்சி என்பவையும் இயற்கை அழிவுக் காரணிகளான புயல், பூகம்பம், எரிமலை, வெள்ளம், தொற்றுநோய் போன்ற அனைத்து அழிவுக்கும் இவளே இறைவி.

தன்னை வழிபடுவோருக்கு அனைத்து உலகையும் வசமாக்குவாள். இராமகிருஷ்ண பரம□ம்சர் அன்னை காளியை வழிபட்டு உயர்ந்தார்.

# இந்து மதத்தில் கன்மம் - ஒரு நோக்கு

நயினை கி.கிருபானந்தா

இந்துசமய மரபிலும் தத்துவ சிந்தனைகளிலும் கன்மக் கோட்பாடும், மறுபிறப்புக் கோட்பாடும் ஒன்றோடொன்று பிரிக்கமுடியாத வகையிலே பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. கன்மம் என்றால் செயல் எனப் பொருள்படும். செய்யும் செயல்கள் அனைத்திற்கும் பலன் உண்டு என்பதே கன்மக் கோட்பாட்டினுடைய அடிப்படையான அம்சமாகும். செயல்கள் மூன்று விதமாக அமைகின்றன. உள்ளத்தால் செய்வது, உடலால் செய்வது, வாக்கால் செய்வது என அவை முத்திறப்படும். உள்ளத்தினாலே ஒருவனுக்கு கேடு நினைப்பது தீது என்பதனை திருவள்ளுவரும் -

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாந் தலை" எனக் கூறுகிறார்.

எனவே, மனத்தளவில்கூட மற்றவர்களைப் புண்படுத்தக்கூடாது என்ற ஒரு நல்ல கருத்தினைக் கன்மக் கோட்பாடு எமக்கு எடுத்து விளக்குகிறது. நாம் செய்கின்ற எல்லாச் செயல்களும் கன்மத்தின்பாற்படுகின்றது. ஆகவே, நல்வினையாயினும் சரி, தீயவினையாயினும் சரி அது கன்மமே. இந்த கன்மம் இரண்டு வகைப்படும். ஒன்று நல்வினை, மற்றையது தீவினை. நல்வினையின் பயனாக புண்ணியமும் தீவினையின் பயனாக பாபமும் உண்டாகின்றது. ஒருவன் இருவினைகளையும் செய்யுமிடத்து அவ்விருவினைகளுக்கும் உரிய பயனையும் அவன் அனுபவித்தே தீரவேண்டும். அவன் செய்த புண்ணியம் அவன் செய்த பாவங்களை நீக்கமாட்டாது. அது மட்டுமன்றி அவரவர் செய்த வினைப்பயன்களையும் அவரவர்களே அனுபவித்து ஆகவேண்டும். அவன் செய்த நல்வினைகள் அவன் செய்த தீவினைகளைக் களைய மாட்டாது. இரண்டுக்கும் உரிய பலனை அவன் அனுபவித்தாக வேண்டுமெனலாம்.

"தினை விதைத்தவன் தினையறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

என்ற பழமொழி இதனையே விளக்குகின்றது எனலாம். ஒவ்வொரு மனிதனுக்குமிடையில் பல ஏற்றத்தாழ்வுகள், மாறுபாடுகள் இருக்கின்றன. இதற்கு எல்லாம் என்ன காரணம்? நாம் இப்பொழுது எப்படி இருக்கின்றோம், என்ன செய்துகொண்டு இருக்கின்றோம் என்பது எல்லாம் நாம் முன்பு என்ன செய்தோம் எப்படி இருந்தோம் என்பதைப் பொறுத்து இருக்கின்றது. அப்படி என்றால் எமது வாழ்க்கைப் போக்கின் விருப்பு வெறுப்பும் உயர்வு தாழ்வும் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுவிட்டதா? அப்படியாயின் நாம் இப்பிறப்பிலே என்ன முயற்சி செய்தும் எம் வாழ்வில் முன்னேற்றம் இல்லையா என்ற வினா எழுகின்றது. இதற்குத் தகுந்த விடை அளிக்கின்றது சைவசித்தாந்தம்.

வினைகள் ஒவ்வொன்றும் அதற்குரிய பலனைக் கொடுத்தே தீரும். அதனைத் தடுத்தல் முடியாது. ஆனால், பகுத்தறிவு உள்ள மனிதனால் ஓரளவுக் கட்டுப்படுத்த முடியும். இதற்கு திரு.இராதாகிருஷ்ணன் விளக்கம் கூறும்போது ஒரு சீட்டு ஆட்டத்தில் சீட்டுக்களைத் தெரிந்து எடுக்கும் உரிமை இல்லை. ஆனால், கிடைக்கப்பட்ட சீட்டுக்களைக் கொண்டு விளையாட்டை வெற்றிகரமாக ஆடுவதும் தோல்வி அடையச்செய்வதும் அவரவர் கையிலேயே இருக்கின்றது. அதுபோன்று கன்ம வினைகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆன்மாவுக்கு இல்லை. ஆயினும் கிடைக்கப்பட்ட சீட்டுக்களைக் கொண்டு விளையாட்டை வெற்றிகரமாக ஆடுவதும் தோல்வி அடையச்செய்வதும் அவரவர் கையிலேயே இருக்கின்றது. ஆயினும் கிடைக்கப்பட்ட வினைகளை தனது பகுத்தறிவினைப் பயன்படுத்தி அதன் தாக்கங்களை ஓரளவிற்குக் குறைத்துவிடலாம். கொல்லும் விஷமானது வைத்திய முறையிலே சுத்திகரிக்கப்பட்டால் அது மருந்தாவது போல எம்மைப் பந்தித்த வினைகள் செயற்படும்போது அதிலே பற்று வையாது, பயன் கருதாது ஆற்ற முற்படுவதே கன்ம பந்தத்தில் நின்று விடுபட ஒரே வழி என்று கூறுகின்றது.

இதனையே பகவத்கீதையும் "கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" என்கிறது. போர்க்களத்திலே பாண்டவர்கள் ஒருபுறமும் கௌரவர்கள் மறுபுறமும் நிற்கின்றார்கள். அருச்சுனன் உறவினர்களையும் நண்பர்களையும் கொல்லவேண்டி வந்துவிட்டதே என எண்ணி தேரிலே சோர்வுற்றவனாக இருக்கின்றான். இந்த நிலையில் கண்ணன் "அருச்சுனா! நீ கடமையைச் செய் பலனை எதிர்பாராதே. பலனை எதிர்பார்ப்பதால் கன்மமே உண்டாகின்றது. கன்மத்தினால் மீண்டும் பிறப்பு உண்டாகின்றது. எனவே, பலனை எதிர்பார்த்து கடமையைச் செய்தல் கூடாது" என்கிறார்.

ஒருவன் ஒரு பிறப்பில் செய்த வினைகளின் பயன்களை சில சமயம் அப்பிறப்பில் அவன் அனுபவிக்க நேரும். அது தவறின் அனுபவியாது எஞ்சியுள்ள வினைப்பயன்களை அனுபவிப்பதற்கு இன்னும் ஒரு பிறப்பு உண்டாகும். இதனை மறுபிறப்பு என்பர். ஒரு பிறப்பில் செய்த வினைப்பயனை அப்பிறப்பிலேயே

அனுபவித்தமைக்கு அயோத்தி மன்னன் தசரதச் சக்கரவர்த்தியை உதாரணம் காட்டலாம். அவனது தவறால் கண்ணிழந்த தாய், தந்தையர் புத்திர சோகத்தால் உயிர் துறந்ததுபோல அவனும் தனது மகனைப் பிரிந்த புத்திர சோகத்தால் உயிர் துறந்தான். ஒரு பிறப்பில் செய்த வினைப்பயனை அப்பிறப்பிலேயே அனுபவித்தான். ஒரு பிறப்பில் செய்த வினைப்பயன்களை அப்பிறப்பிலே அனுபவிக்க முடியாதுபோகுமிடத்து அதனைத் தொடர்ந்து வரும் பிறவியிலேயே அனுபவிக்க நேர்ந்தமைக்கு கோவலன் உதாரணமாகின்றான். அவன் முற்பிறப்பிலே கள்வன் இல்லாத ஒருவனைக் கள்வன் எனக் குற்றம் சாட்டி கொன்றவன் என்றும், அவ்வினைப் பயன் அவன் தொடர்ந்து வந்த பிறப்பிலே அவன் கள்வன் அல்லாதபோதும் பாண்டிய மன்னனால் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்படுகின்றான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதிலிருந்து ஒருவன் தனது வினைப்பயனை ஒரு பிறப்பிலேனும் அல்லது தொடர்ந்து வரும் பிறப்பிலேனும் அனுபவித்தாகவேண்டும் என்ற கருத்து தெரிகின்றது.

ஒவ்வொரு செயலும் பயனைத் தருவது என்பதுபோல ஒருவன் தனது செயலுக்குரிய பயனைத் தனது வாழ்நாளில் அனுபவித்து முடிக்கின்றானா என்றால் அது சாத்தியமில்லை எனலாம். எனவே, அவ்வினைப் பயனை அனுபவிப்பதற்கு இன்னும் ஒரு பிறப்பு அவனுக்குக் கொடுக்க வேண்டும். இதுவே மறுபிறப்பு என்பதாகும். இவ்வாறு மறுபிறப்பு ஏற்பட்டால்தான் ஒருவன் தான் முற்பிறப்பில் அனுபவித்து எஞ்சியுள்ள வினைப்பயனை அனுபவிக்க முடியும். அவ்வாறு வினைப்பயனை அனுபவிக்கும்போது அவன் மேலும் பல புதிய வினைகள் செய்கின்றான். அவற்றின் பயன்களை அனுபிக்க மேலும் பிறப்பு எடுக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது. எனவே, கன்மமும் மறுபிறப்பும் தம்முள் ஒன்றையொன்ற பற்றிப் புனைந்து ஒரு சங்கிலித் தொடர்போல அமைந்து விளங்குகின்றது எனலாம்.

நல்வினை செய்தோர் துன்பம் அடைவதையும் தீவினை செய்தோர் இன்பமாக இருத்தலையும் நாம் காணுகின்றோம். இவற்றுக்குக் காரணம் என்ன? உலகில் அங்கவீனர்கள் பிறப்பதற்குக் கரணம் என்ன? முற்பிறப்பும் முற்பிறப்பில் செய்த வினையும் இல்லையென்றால் இவற்றுக்குக் காரணம் காட்ட முடியுமா? இதனால்தான் பழவினை உண்டு என்கிறார்கள். அப்பழவினையினை மூன்றாக வகுப்பர். அவை பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் என்பன.

பல பிறவிகள் பெற்று அதிலே செய்த கன்மவினை இன்னும் அனுபவிக்கப்படாது சேர்ந்து இருக்கும் வினையின் தொகுதி சஞ்சிதம் எனப்படும். அந்த வினைத் தொகுதியிலிருந்து இப்பிறவிக்கு என நாம் அனுபவிப்பதற்காக எடுத்துக் கொடுக்கப்படும் வினைப்பகுதி பிராரத்துவம் எனப்படும். பிராரத்வ வினையை அனுபவிக்கும்போது புதிதாக ஈட்டப்படும் வினை ஆகாமியம் எனப்படும். இவற்றை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்றும் கூறுவர். பிராரத்துவ வினைக்கேற்பவே தனு, கரண, புவன போகங்கள் எமக்குக் கொடுக்கப்படுகின்றன.

நாம் செய்த கன்ம வினைகளின் பலன்கள் சில உடனே எம்மை வந்துசேரும் தன்மை வாய்ந்தவை. இதற்கு இந்துமதம் கூறும் விளக்கம் என்னவென்றால் ஒருவர் தென்னை, வாழை, கீரை என்பவற்றை ஒரே நேரத்தில் நடுகின்றார். இவற்றுள் இறுதியாக நாட்டப்பட்ட கீரையே முதலில் பயன்தருவதாகவும், இரண்டாவதாக நாட்டப்பட்ட வாழை இரண்டாவதாகப் பயன்தருவதாகவும், முதல் நாட்டப்பட்ட தென்னை மூன்றாவதாகப் பயன்தருவதாகவும் அமைகின்றது. இவ்வாறு ஒழுங்கு மாறி பலன்கள் எம்மை வந்தடைகின்றன. இதனைப் போன்றே கன்ம வினைகளும் ஒழுங்கு மாறி எம்மை வந்து சேருகின்றன எனலாம்.

கன்மக் கோட்பாட்டை ஏற்கும் மதங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று இப்பிறப்பும் இப்பிறப்பிலுள்ள கன்மங்களும் மட்டுமே உண்மை என்பர். இப்படிக் கூறுபவர்கள் மறுபிறப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள். இவர்கள் நீ மண்ணாக இருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய் என்ற சடக்கொள்கைக் கருதுகோள் உடையவர்கள். அதாவது அவர்கள் மேல்நாட்டுச் சமயவாதிகள்.

இரண்டாவது பிரிவினர் சமண, பௌத்தர்கள். இவர்கள் கன்மம் ஓர் அறிவுடைய பொருள் என்றும் அதற்குத் தனக்குரிய ஆன்மாவைச் சென்றடையக்கூடிய திறன் உண்டு என்றும் கூறுவர். ஒரு மாட்டுத் தொழுவத்தில் பல மாடுகளும் கன்றுகளும் இருக்கும்பொழுது ஒவ்வொரு கன்றும் தனக்குரிய தாய்ப்பசுவைத் தானே சென்றடையும் திறன் வாய்ந்ததுபோல கன்மம் தனக்குரிய ஆன்மாவைத் தானே சென்றடையும் திறன் வாய்ந்தது என்பர்.

மூன்றாவது பிரிவினர் இந்துக்கள். இவர்கள் கருத்துப்படி இறைவன்தான் ஆன்மாவிடம் வினைப் பயன்களைச் சேர்த்து வைக்கிறான் என்பர். ஒரு பிறவியிலே ஆன்மா செய்யும் வினைப் பயனைத் தொகுத்து வகுத்து அடுத்துவரும் பிறவிக்கு உரிய நிலையை அமைத்துக் கொடுக்கின்றான். ஏனெனில் ஆன்மா தன் முன்வினைப் பயனை அறிவதற்கு அல்லது தேர்ந்து எடுத்துக் கொள்வதற்கு சக்தியற்றது என்றும், வினைப்பயனும் தான் செய்த வினையைத் தானே சென்றடையும் சக்தியற்றது

என்றும், அது ஒரு சடப்பொருள் - எனவே, இரண்டையும் இணைக்க ஓர் இறைவன் இந்து சமயத்திலே உள்ளான். இதுபற்றி சைவசித்தாந்த நூலாகிய திருவருட் பயன் பின்வரும் குறள் மூலம் தெளிவுபடுத்துகின்றது.

"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்று உணர்" என்கின்றது. கன்ம வினைகள் எமக்கு மீண்டும் திரும்பிவரும்போது அவை மூன்று விதமாக வருகின்றன. அவையாவன ஆதி பௌதிகம், ஆதி ஆத்மிகம், ஆதி தைவீகம் என்பன. ஆதி பௌதிகம் என்னும்பொழுது பஞ்சபூதத்தால் வருவன. (நீரில் மூழ்கல், தீப்பற்றல் போன்றன) ஆதிதைவீதம் என்னும்போது தெய்வத்தால் வருவன. (தெய்வசீற்றம், பேய் முதலியன) ஆதி ஆத்மீகம் என்னும்போது உயிர்களால் வருவன. (மனித்ன், நாய், புலி போன்ற மிருகத்தால் வருவன) இவ்வாறு அமையும்.

வள்ளுவப் பெருந்தகை ஊழ்பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தாம் முந்துறும்"

என்கிறார். தேவார திருவாசகங்களிலும் பல பிறப்புக்கள் உண்டு என்ற கருத்து நிலவுகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள்,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாது இருக்க வரம்தரல் வேண்டும்"

என இறைவனிடம் அடுத்த பிறவிக்கு விண்ணப்பிக்கின்றார். ஒருவனின் சிந்தனை, சொல், செயல் என்பவற்றால் வரும் பயன் கன்மத்துள் அடங்கும். இதுவே கன்மக் கோட்பாட்டின் அடிப்படையாகும். ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு என்ற காரணத்தினால், அச்செயலைச் செய்தவன் அச்செயலுக்குரிய பலனை அனுபவித்தே தீரவேண்டும் என்ற நிலை உருவாகின்றது. எனவே, ஒருவனின் நன்மை தீமை யாவும் அவனால் செய்யப்பட்ட செயல்களின் விளைவே என்பது தெரிகின்றது. எனவே, ஒருவன் தன்னுடைய இன்றைய நிலைக்குத் தானே காரணமாகின்றான்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

☑

## மாணிக்கவாசக சுவாமிகள்

புவனியிற் போய்ப் பிறவாமையின் நாள்நாம்
போக்குகின்றோம் அவமேயிந்தப் பூமி
சிவன் உய்யக்கொள்கின்ற வாறென்று நோக்கி
திருப்பெருந் துறை யுறைவாய் திருமாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவுநின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெம்மை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே!




**Saint Manickavasakar**

"Said sacred Mal and flower-born Ayan as they gazed
On Sivan's form, 'This day in vain we spend and cry
'Tis time we went to earth and there were born. 'Tis earth
'Tis earth alone where Sivan's Grace is wont to save.'
Thou King, Who dwell'st in Perunthurai's hallowed shrine,
Might Thou wert to enter earth, and make us Thine!
Thou and the Grace, that flower-like blooms from forth Thy form,
Ambrosia rare! from off Thy couch in grace arise!"


RSM Enterprises
ஆர் எஸ் எம் என்ரபிறைஸஸ்
416.916.4357
www.rsmsilks.com
SAREES THANGAVEDDAI, KANCHIPURAM, DAKSHINOTRI,ASKIYA, TATIVA, KOLAM, KANCHI, ESWARI, KRIJA, COTSILKSCHUIDHAR, KUSI, ESHIKA BOLLYWOOD DESIGN & CHILDREWEAR & MUCH MORE
இள நங்கையர்க்கான நவ நாகரீகத்திற்கேற்ப புத்தம் புதிய டிசைன்களில் சாறி வகைகள், சுடிதார்கள், சிறுவர் சிறுமியர்க்கேற்ற ஆடை வகைகள், இளைஞர்களின் அழகை மெருகூட்டும் குருத்தாக்கள், பெண்களின் அழகுக்கு அழகூட்டும் பான்சி நகைகள் எண்ணற்ற தெரிவுகளில்...
3301 McNicoll Ave.
Scarborough, Ont.
(South East corner McNicoll/Middlefield)
Tel: 416 - 916 - 4357

# இலங்கையில் கிராமிய தெய்வ வழிபாடு

விவேகானந்தா ஜனகா



வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்

சமயம் என்பது நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. சமயமானது மக்களை மக்களாக வாழ்வதற்கு வழிகாட்டிநிற்கின்றது. வழிபாடு என்பது வழிபடு என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. வழிபடு என்பதற்கு வணங்குதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கௌ்ள்ப்படும் செயல்பாடுகளும் பூசனை முறைகளுமே வழிபாடு என்றும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும் உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்து சமய வழிபாட்டு முறைகள் இரு பிரிவுகளை உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

இந்து சமய வழிபாட்டு முறைகள் ஆகம விதிமுறைக்கு உட்பட்ட வழிபாடு என்றும், ஆகம விதிமுறைக்கு உட்படாத வழிபாடு எனவும் இரண்டு பிரிவுகளாக விளங்குகின்றன. ஆகம விதிமுறைக்கு உட்பட்டதாக அமைந்த வழிபாட்டு முறையானது பெருந்தெய்வ வழிபாடு எனவும், ஆகம விதிமுறைக்கு உட்படாது அமைந்த வழிபாட்டு முறையானது சிறுதெய்வ வழிபாடு அல்லது கிராமிய தெய்வ வழிபாடு எனவும் அழைக்கப்பட்டன. சமூகத்தின் அடித்தட்டு மக்களால் வழிபடப்படும் தெய்வங்கள் சிறு தெய்வங்களாகவும், மேல்தட்டு மக்களால் வழிபடப்படும் தெய்வங்கள் பெருந்தெய்வங்களாகவும் வணங்கப்பட்டுவந்தன. கிராமிய சமய நெறியானது சங்க காலம் முதலாக இருந்துவரும் சமயநெறியாகும்.

கிராமப்புற மக்களால் தொன்றுதொட்டு வழிபடப்பட்டுவரும் கிராமத் தெய்வங்களே சிறு தெய்வங்களாகும். இவை கிராமப்புற மக்களின் காவல் தெய்வங்களாக நோய் நீக்கி, நலம் தரும் தெய்வங்களாக, வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் தெய்வங்களாகக் கருதி வணங்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் கிராமங்களையே இருப்பிடமாகக் கொண்டு கிராம மக்களின் மரபோடு நீங்காத உறவுகொண்டு விளங்குகின்றன. இத்தெய்வங்களை வணங்கினால் நன்மை உண்டாகும். வணங்காவிட்டால் தீங்கு ஏற்படும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை காரணமாக பாமர மக்களால் இத்தெய்வங்கள் வழிபடப்பட்டன. இவ்வழிபாடானது தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழகம், இலங்கை போன்ற நாடுகளில் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வழிபாட்டை ஆகமம் சாராத வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, ஊர்த் தெய்வ வழிபாடு, எல்லை உற வழிபாடு என்பன போன்ற பல பெயர்களினால் அழைத்துக்கொள்வர்.

கிராமிய மக்கள் பயத்தையும், நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட தெய்வங்களை வணங்கிவந்தனர். இவ்வாறு வணங்கப்பட்ட கிராமிய தெய்வங்களை குலதெய்வம், கிராம தேவதை, ஊர்த்தெய்வம், காவல்தெய்வம், எல்லைத் தெய்வம் என பல பெயர்சொல்லி அழைத்து வழிபடுவர். ஈழத்திருநாட்டில் கிராமிய தெய்வ வழிபாடானது இரு அடிப்படையில் தோற்றம் பெற்றன. அவையாவன புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை, மரபுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை போன்றனவாகும். கிராமிய தெய்வங்கள் யாவும் சைவத் தமிழ் மக்களின் கண்கண்ட தெய்வங்களாக விளங்குகின்றன.

இலங்கையில் கிராமிய வழிபாடானது கிழக்கிலங்கைப் பிரதேசம், வன்னிப்பிரதேசம், யாழ் குடாப் பிரதேசம், மலையகப் பிரதேசம் போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக யாழ்குடாநாட்டில் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோயில், மந்திகை கண்ணகி அம்மன் கோவில், குரும்பசிட்டி முத்துமாரியம்மன், கோப்பாய்க் கண்ணகி அம்மன் கோவில், சுன்னாகம் ஐயனார் கோயில், அனலைதீவு ஐயனார் கோயில், மருதனாமடம் அனுமார் ஆலயம், கச்சாய் வீரபத்திரர் ஆலயம், புத்தூர் வைரவர் கோயில், நீர்வேலி பன்னாலைக் குறிஞ்சி அண்ணமார் கோயில், வேலணை புளியங்குளம் முத்துமாரி அம்மன் கோயில், காரைநகர் ஐயனார் ஆலயம், யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயம் போன்றவையும், வன்னிப் பிரதேசத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன், புதுக்குடியிருப்பு காளி, நெடுங்கேணி ஐயனார், வன்னிவிழாங்குளம்

முத்துமாரியம்மன், புதுக்குடியிருப்பு கண்ணகை அம்மன் போன்றவையும் பிரபலமானவையாகத் திகழ்கின்றன.

கிழக்கிலங்கையில் தம்பலகாமம், உப்புவெளி, குச்சவெளி, சீனக்குடா, வெருகலம்பதி, ஆரையம்பதி, காரைதீவு, வந்தாறுமூலை, களுதாவளை, வெல்லாவெளி, பாண்டிருப்பு, கல்முனை போன்ற பல கிராமங்களிலும் மலையகப் பிரதேசத்தில் இறம்போடை அனுமான் ஆலயம், சீதா எலிய ஆலயம் போன்ற பல இடங்களிலும் கிராமிய தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன.

கிராமிய வழிபாடானது ஆகமம் சார்ந்த வழிபாட்டிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதற்கு ஆலய அமைவிடம், ஆலய அமைப்பு முறை, வழிபாட்டு முறை என்பன காரணங்களாக விளங்குகின்றன. சிறுதெய்வ கோயில்கள் பெரும்பாலும் வயல்வெளிகளிலும், ஆற்றோரங்களிலும், மரநிழல்களிலும் பெருந்தெருக்களிலும் வீட்டின் கொல்லைப் புறங்களிலுமே அமைந்திருக்கும். இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு. இங்கு தெய்வமாகக் கருதி வழிபடத்தக்கதாக கல், சூலம், தடி, அரிவாள் என்பன வைக்கப்பட்டிருக்கும். இங்கு பூசை செய்வோர் அந்தக் கிராமத்தின் வயது முதிர்ந்தவராகவோ எல்லோராலும் மதிக்கத் தக்கவராகவோ இருப்பர்.

கிராமிய வழிபாட்டில் சடங்கே முக்கியத்துவமுடையது. ஆகம வழிபாட்டில் கிரியைகள் எவ்வாறு முக்கியத்துவமுடையதோ அவ்வாறே சடங்கும் கிராமிய வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் கிராமிய வழிபாட்டில் கலைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. கிராமிய கலைகளாக நாட்டுக்கூத்து, கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கலைகளும் காணப்பட்டன. ஈழத் தமிழரின் பாரம்பரிய கலையாகவும் தெய்வீகக் கலையாகவும விளங்குவது நாட்டுக்கூத்துக் கலையேயாகும்.

கிராமிய தெய்வங்களுள் ஆண் தெய்வங்களும், பெண் தெய்வங்களும் காணப்படுகின்றன. ஆண் தெய்வங்களாக ஐயனார், வைரவர், காத்தவராயன், வீரபத்திரர், முனியப்பர், சுடலைமாடன், கறுப்பசாமி, பெரியதம்பிரான், அனுமான், அண்ணமார், மதுரைவீரன் போன்ற ஆண்தெய்வங்களும், காளி, கண்ணகி, மாரியம்மன், திரௌபதி, சீதை, நாச்சிமார், கொத்தி போன்ற பல தெய்வங்களும் கிராமிய தெய்வங்கள் என்ற பதத்தில் அடங்குகின்றன.

இலங்கையில் கிராமிய தெய்வங்களுள் பெண் தெய்வமான கண்ணகி வழிபாட்டை எடுத்து நோக்குவோமாயின் கண்ணகி வழிபாடானது தமிழகத்தில் தோன்றியிருந்தாலும் அந்த வழிபாடானது இலங்கையிலேயே பிரசித்திபெற்று விளங்குகின்றது. வணிகர் குலப் பெண்ணான கண்ணகி தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களினால் அணங்கு என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டாள். சேரன் செங்குட்டுவன் என்ற மன்னன் கண்ணகிக்கு விழா எடுக்க முற்பட்டு அவ்விழாவிற்கு பல நாட்டு அரசர்களும் அழைக்கப்பட்டனர். அதில் இலங்கையைச் சேர்ந்த கஜபாகு மன்னனும் கலந்துகொண்டான். அவ்வாறான ஒரு விழாவை இலங்கையிலும் நடத்தவேண்டும் என எண்ணிய கஜபாகு மன்னன் சந்தன மரத்தினால் செய்யப்பட்ட கண்ணகி வடிவத்தை கடல்வழியாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தான். அதை அங்கணாங்கடவை என்ற இடத்தில் வைத்து கண்ணகிக்கு இலங்கையில் முதன் முதலாகக்கோயில் கட்டப்பட்டது. பின்பு கண்ணகியின் சிலையை யானைமீது வைத்து ஊர்வலமாக கண்டிக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த ஊர்வல நிகழ்வே பௌத்த சிங்களவரால் பெரகரா நிகழ்வாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இலங்கையில் சைவத் தமிழ் மக்கள் மாத்திரமன்றி பௌத்த சிங்கள மக்களும் கண்ணகியை 'பத்தினிதெய்யோ' என்று அழைத்து தமது விகாரைகளிலும், இல்லங்களிலும் வழிபாடு செய்வதைக் காணமுடிகின்றது. ஈழத்தில் கண்ணகி கோயில்கள் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி கோயில், வற்றாப்பளை கண்ணகி கோயில், மந்திகை கண்ணகை கோயில், குருக்கள்மடம் கண்ணகி கோயில் போன்ற பல கண்ணகி அம்மன் ஆலயங்கள் பிரசித்திபெற்று விளங்குகின்றன.

மேலும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயமானது வரலாற்றுப் பெருமைகொண்டது. இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தை அடுத்துவரும் திங்கட்கிழமையில் பொங்கல் விழா நடைபெறும். அன்றைய தினம் அருகிலுள்ள நந்திக் கடலில் நீர் எடுத்து விளக்கேற்றும் அற்புத நிகழ்வு இன்றும் இடம்பெறுகின்றது.

கிராமிய வழிபாட்டின் இன்றைய நிலையை நோக்குகையில் அந்த வழிபாடு நகர்ப்புற மக்களினால் வழிபடும் அளவிற்கு உயர்ந்து காணப்படுகிறது. ஒரு காலகட்டத்தில் எள்ளி நகையாடப்பட்ட இந்த வழிபாடு சமூகத்தில் இன்று உயர்ந்து காணப்படுகிறது. சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கேயுரியது என்ற நிலை மாறி, இன்று யாவராலும் வழிபடப்படும் அளவிற்கு உயர்ந்து காணப்படுகிறது. இலங்கையில் வாழும் சைவசமயி ஒருவரை எடுத்துக்கொண்டால் அவர் ஆகம வழிபாட்டிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுகின்ற அதேநேரம் கிராமிய வழிபாட்டிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார். இந்த வழிபாட்டுடன் தொடர்புடைய கலைகள்கூட இன்று யாவராலும் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றன. இன்று இலங்கைப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களிலும் கிராமிய வழிபாடுபற்றிய செய்திகள் புகுத்தப்பட்டுள்ளன. இவ்வழிபாட்டின் சிறப்புக்களை மேலும் அறியும் பொருட்டு கல்வியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே, கிராமிய வழிபாட்டினுடைய முக்கியத்துவத்தையும், சிறப்புக்களையும் மேற்கூறப்பட்ட விடயங்களின்மூலம் அறிந்துகொள்ளலாம். ☑

# சைவத்தின் பெருமை

எழுதியவர் நல்லூர் சிவமுருகன் என்.தமிழ்மகன்
உதவியவர்:பொ.இராசேந்திரம் நல்லூர்-இளவாலை


நம்மையும் நாம் வாழும் உலகமாகிய சிவபூமி, நாம் வாழும் வாழ்க்கை, விண்ணும் மண்ணும் அதற்கு அப்பாலும் விரிந்துசெல்லும் அண்டசராசரம் யாவையையும் சர்வம் முழவதையும் இயக்குபவரும் ஆள்பவருமாகிய அதிபதியும், எல்லாவற்றிற்கும் கர்த்தாவுமாகிய ஆதிபகவன் சிவபெருமான் தெய்வத்தை அனாதி ஆதி சிவஆண்டவர் தெய்வம் என்ற அழைப்பர். அவரே எம்மையும் உள்ளும் புறமும் எங்குமாகி நின்றும் இயக்கியும் ஆளும் கர்த்தாவுமாகி இருந்து செயலாற்றுகிறார்.

இந்தச் சிவ ஆண்டவர் தேவாதி தேவர் தொடக்கமும் முடிவும் இல்லாதவர். அதாவது ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்ற அவரது அனாதித் தன்மை சுட்டிக்காட்டப்படுகிறது. இவர்தாயும் இலி' 'தந்தையும் இலி' என்றும் 'அநாதை' என்றும் குறிப்பிடப்படுகின்றார். இது அவரது அனாதி காலத்தின் தொன்மையை எடுத்துக்காட்டுவதாகும். இதனால்தான் அவரை அனாதி ஆதி சிவன் என்றும் அழைப்பர். அநாதி சீவ சைவத்தை குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவே அதன் தொன்மை குறித்து கணிப்பீடு செய்யப்படுகிறது.

ஆதி, அநாதி காலயுகங்களுக்கு முன்பு இந்த அண்ட சராசரம் முழுவதும் இருள்மயமாக இருந்தது. அந்த இருள் மயமான அண்ட வெளியில் இருந்த, சிவந்த நிறமான சிவ அக்கினி ஒளி வடிவம் தோன்றிற்று. அந்தச் சிவ அக்கினி ஒளி வடிவம் தோன்றிற்று. அந்தச் சிவ அக்கினி நெருப்பு ஒளிப் பிரகாசம் எங்கும் ஒளிர்ந்தது. இதன் ஆதி அனாதி தோற்ற உற்பத்தி வளர்ச்சி விரிவிலும் ஒடுக்கத்திலும் இருந்து தற்போதைய உலகங்கள் பிரபஞ்ச அண்ட சராசரங்கள் யாவும் தோன்றின. அனைத்து ஆத்ம கோடிகளும் அனைத்து உயிர்கள் சீவராசிகளும் தோன்றின. இந்தச் சிவ ஆண்டவரே அனைத்துக்கும் கதாநாயகராகவே விளங்குகின்றார்.

இந்த ஆதி அநாதி காலத்திற்கு முற்பட்ட அனைத்துக்குமான ஆதி, அனாதி சிருட்டிகர்த்தாவாகிய அந்தச் சிவந்த நிற சிவ அக்கினி நெருப்பு ஒளித்துகள் வடிவத்தை சிவந்த நிறத்தையுடைய காரணப் பெயர் காரணமாக சிவஞான் அல்லது சிவன் அல்லது சிவபெருமான் என்றே அழைக்கப்பட்டார். இவ்வாறு தானாகத் தோன்றியவரே சிவ ஆண்டவர் ஆவார். சிவன் அண்ட சராசரங்கள் யாவற்றையும் ஆள்பவராகவும் இயக்குபவராகவும் இருப்பதால் சிவ ஆண்டவர் என்ற பெயர் பெற்றார். தெய்வீகத் தந்தையாகய்சிவஜயாசிவ' எனும் பெயரே சைவ, சைவர், சைவன் எனும் தெய்வப் பெயர்களாக அழைக்கப்பட்டன.

இங்கும் எங்கும் எல்லாவற்றிற்கும் எல்லா உலகங்களுக்கும் எல்லா அண்ட சரா்சரங்கள் யாவற்றிற்கும்




எல்லா உயிர்களுக்கும் எல்லோருக்கும் தோற்றத்தின் அதிபதியாக இருந்து செயலாற்றும் பரமபிதாவான சிவபெருமான தெய்வத்தை முழுமுதல் ஆதி அனாதி தெய்வக் கடவுளாக ஏற்று, அவரின் வழிகாட்டலின் அடிப்படை வளர்ச்சி நிலையில் அவரைத் தெய்வீகக் குருவாகப் பெற்ற, அவர் மூலம் பேரறிவு பகுத்தறிவு நெறிமுறையில் வாழும் செம்மைப்படுத்தப்பட்ட தெய்வீக தத்துவ தெய்வீக நடைமுறை வாழ்வியல் அல்லது தெய்வீக வாழ்க்கை அல்லது தெய்வீக மனித வாழ்க்கை 'சைவம்' அல்லது 'அநாதி சைவம்' எனும் பெரும் பெயரால் அழைக்கப்படுகிறது.

நாம் வாழும் இச்சைவ உலகில் சிவ ஆண்டவரின் வழிகாட்டலின அடிப்படைத் தெய்வீகப் பேரறிவு பகுத்தறிவு விஞ்ஞான அறிவு, மெய்ஞான அறிவு, இயற்கை விஞ்ஞான அறிவு அடிப்படையில் அனைத்தையும் உள்வாங்கி இருக்கும் அனாதி ஆதி சைவமானது தன் உண்மை நிலையை வெளிப்படுத்தும் நிலையில் பலவகையான தெய்வீக அறிவு

நூல்களை வெளிப்படுத்தியுள்ளன. அவையாவன: நான்கு வேதங்களாகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்; ஆகமங்கள் இருபத்தெட்டு, முப்பத்திரண்டு அறங்கள், ஆறு சைவ வேத அங்கங்கள் ஆகிய சைவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌராட்டிகம், வைஷ்ணவம்; இதிகாசங்களாகிய இராமயணமும் பாரதக் கதையும்; புராணங்கள் பதினெட்டு, உபநிடதங்கள், ஸ்மிருதி, திருமுறைகள்; கனபாடம், சங்கீத பாடம், பதபாடம், சடாபாடம், சோதிடபாடம், வேள்ளிப்பாடம்; ஆயகலைகள் அறுபத்து நான்கும் அதற்கு மேற்பட்டவைகளும் போன்ற தெய்வீகம் சார்ந்த தெய்வீக நூல்கள் அடிப்படை நூல்களாக இடம்பெறுகின்றன.

சைவத்தின் உண்மையையும் மேன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தும் சர்வதேசிய பேறறிவு– பகுத்தறிவு தத்துவச் செயல்முறையாகவும் உலகளாவிய நிலையிலும் ‘சைவ சித்தாந்தம்’ தத்துவக் கோட்பாடு விளங்குகிறது. இக்கோட்பாட்டுத் தத்துவச் செயல்முறையானது இயற்கை விஞ்ஞானம் - தூய விஞ்ஞானம் அடிப்படை வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் பேரறிவு, பகுத்தறிவு, தத்துவச் செயல் முறையாகவும் இடம்பெறுகிறது.

வேதத்தில் சூரியனும் சந்திரனும் சாட்சிகளாக இடம்பெற்றுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளன. சூரியன் அல்லது சிவசூரியனின் அதிதெய்வம் சிவஉருத்திரன் அல்லது சிவபெருமான் தெய்வம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. சிவன், சைவன் எனும் பெயராலும் அழைக்கப்படுகின்றார். சூரியனைச் சுற்றும் சந்திரன் கோளின் அதிதெய்வம் ஆதிபராசக்தி தெய்வம் என்றே அழைக்கப்படுகிறார். இது சந்திரன் கோளின் ஒரு பகுதியாக வெளிப்படும் இளமஞ்சள் நிறச்சக்திக் கதிர் அலைகளையே வெளிப்படுத்துகின்றன. இந்தச் சந்திரன் கோளின் இன்னொரு பகுதியாக வெளிப்படும் இருள்நிறமான, கறுப்பு நிறமான கதிர் அலைப் பகுதியின் அதிதெய்வம் காளிதேவி அல்லது துர்க்காதேவி அதிதெய்வமாகவும் குறிப்பிடப்படுகின்றன. சந்திரனில் உள்ள கறுப்புப் பகுதி இராகு அம்சம் உள்ள இருள் பகுதியாகவும் குறிப்பிடப்படுகின்றது. ‘சைவசித்தாந்தம்’ தத்துவக் கோட்பாட்டில் சைவ, சக்தி, அம்தம் எனும் மூன்று விடயங்கள் இடம்பெறுகின்றன. சிவந்த நிறமான சூரிய சிவஅக்கினி நெருப்பு வெள்ளொளி வடிவம் சிவபெருமான் தெய்வமான சைவத்தையும், சந்திரனில் மஞ்சள் நிற ஒளிப்பகுதி பராசக்தி தெய்வமான சக்தியையும், சந்திரனின் கருமை நிற இருள் பகுதி காளி தெய்வம் அல்லது அம்சம் அல்லது பாசம் அல்லது மாயை அல்லது இராகு இருளையும் இயற்கை விஞ்ஞான அடிப்படையிலும் அண்டசராசர பிரபஞ்சம் முழுமையிலும் வெளிப் படுத்துகின்றன. இந்த இயற்கை விஞ்ஞானத்தின் முப்பொருள் முப்பெரும் தத்துவத்தையே, சைவமாகிய சிவ அக்கினி ஒளி(சிவ) பதி எனவும்; பராசக்தி ஆகிய மஞ்சள் கதிர் அலை ஒளி பசு(உயிர்) எனவும், காளி ஆகிய கறுப்புநிற நிழல் வடிவம் பாசம் (மாயை இருள்) (சடசக்தி) எனவும், சைவ சித்தாந்தத்தின் முப்பொருள் பேர் அறிவு பகுத்தறிவு நுண்ணறிவுத் தத்துவமாக வெளிப்படுகின்றன.

சைவத்தின் உண்மையையும் மேன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தும் சர்வதேசிய தத்துவமாக உலகளாவிய சைவசித்தாந்தம் தத்துவக் கோட்பாடு விளங்குகிறது. உலகளாவிய சர்வதேசிய ‘சைவசித்தாந்தம்’, ‘பதி உடமை’ (சூரிய சந்திரர் இணைந்த தத்துவக் கோட்பாடு) எனும் ‘பொது உடமை’ தத்துவக் கோட்பாடு ஆகும். ‘சைவமும் சாக்தமும்’ இணைந்த தத்துவக் கோட்பாடு ஆகும். அதாவது ‘சைவ இந்து மதம்’ தத்துவக் கோட்பாடும் ஆகும். இது இயற்கை விஞ்ஞான பிரபஞ்ச நடைமுறைக் கோட்பாடு.

நாம் வாழும் பூமியில் நமது உடல்களுக்குள் இருக்கும் உயிர் ஆத்மாக்களின் அகமும் புறமும் சுத்திகரிக்கப்பட்ட நிலையில் சிவப் பரிபூரண பரிசுத்தம் பெற்று, எமது ஆத்மாவில் சிவத் தெய்வீக ஆட்சி வெளிப்பட்டுச் செயல்படுத்தி நடத்தித் தெய்வக் குருவாகப் பிரம்மஞானராகச் செயற்படும் நிலையில் தெய்வீகப் பேறறிவு – தெய்வீகப் பகுத்தறிவு நிலையில் வெளிப்படும் தெய்வீக ஞானச்சிந்தனைத் தொகுப்பும் அத்தகைய தொகுப்பான நூல்களும் சைவத்தை வழிப்படுத்தியும் வாழவும் வைக்கின்றன.

சைவ வேத அங்கங்கள் அல்லது சன்மத உட்பிரிவுகள் ஆறும் அநாதி சைவ, சைவம், சைவ-சாக்தம் (சைவ இந்துமதம்), சைவ-காணாபத்திரம், சைவ-கௌமாரம், சைவ-சௌராத்திகம், சைவ-வைஷ்ணவம் (சிவசங்கரன், நாராயணர்) எனும் அனாதி சைவ உட்பிரிவுகளாகவும், இவை ஆறும் ஆறு ஆறு ஆக முப்பத்து ஆறு தத்துவங்களாகவும் பெருகி இடம்பெறுகின்றன.

சைவ வாழ்வியலில் தந்தைவழிக் கூட்டத்தினர் வழிகாட்டல் நிலையில் சைவ வைஷ்ணவ (சிவ சங்கரன் - நாராயணர்) நாகரிகக் கோட்பாட்டுத் தத்துவ நிலையிலும்; சைவ வாழ்வியலில் தந்தை தாய் வழிக் கூட்டத்தினர் வழிகாட்டல் நிலையில் ‘சைவ சாக்தர்’ (சிவபெருமான் - ஆதிபராசத்தி - அர்த்தநாரீஸ்வரர் வடிவம்) சமயக் கோட்பாட்டுத் தத்துவ நிலையிலும்; தனித்த தனித்த நிலையிலும் இணைந்து செயற்படும் நிலையிலும் வாழ்வியல் நிலை உண்டு.

சைவ வாழ்வியலில் வட இந்தியா தன்தை வழிக் கூட்டத்தினர் அடிப்டையில் ‘சைவ வைஷ்ணவ’ கோட்பாட்டு அடிப்படையிலும், தென்னிந்தியா ‘சைவ – சாக்தர்’ கோட்பாட்டு அடிப்படை வளர்ச்சி நிலையிலான செயல்முறை வாழ்வியலுக்கும் முதன்மை கொடுத்துச் செயல்படும் நிலை உண்டு.

நமது ஈழத்தில் அதாவது வட இலங்கையில் ‘சைவ – சாக்தர்’ (சைவத் தமிழர்) கோட்பாட்டுத் தத்துவ தந்தை – தாய் வழியினரும் மத்திய இலங்கையில் (மத்திய மலைநாடு) சைவ – சைவமும் (ஆரியன் - ஆரியமும்), தென்னிலங்கையில் சைவ – வைஷ்ணவமும் (சைவ அல்லது

பௌத்த சிங்களவரும்) அனாதி சைவக் கோட்பாட்டு அடிப்படை வளர்ச்சியில் முதன்மை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. உலகம் முழுவதும் ஏக அநாதி சைவத் தத்துவச் செயல்முறைதான், அந்த அணுகுமுறைதான், கோட்பாட்டுத் தத்துவ அடிப்படை வளர்ச்சியாக எங்கும் பரவலாகியுள்ளது.

அனாதி சைவ கூட்டுத் தத்துவமானது நிலையியல் தத்துவமாகவும் இயங்கியல் தத்துவமாகவும் இரண்டு நிலைகளில் செயற்படுகின்றன. நிலையியல் தத்துவம் நிலையான நிரந்தரமான சிவபெருஞானர் தெய்வத் தத்துவமாகவும், இயங்கியல் தத்துவமானது அனாதி சிவனின் செயற்பாட்டின் தொழிற்பாட்டு நிலையில் தோன்றும் வடிவ வேறுநிலையில் வேறு பெயர்களில் அழைக்கப்படும் தெய்வீக தத்துவங்களாகும்.

அனாதி சைவத்தின் உள்நோக்கமும் உள்நோக்க முன்னெடுப்புச் செயற்பாடும் யாதெனில் எல்லோரையும் எல்லாவற்றையும் எல்லா உயிர்களையும் எல்லா ஆத்மகோடிகளையும் சிவசொரூபமாக்கி, அனாதி சிவனாக்கி அனைத்தையும் தெய்வீக நிலையில் எவ்வித பேதங்களும் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் அற்ற நிலையில் ஒரே தன்மைத்தான சிவஆண்டவர் தெய்வமாக்கி அனைத்தையும் அனைத்திலும் சர்வ உலகங்களிலும் சிவனாம் சிவசொரூபத் தன்மையை சிவமயமாக்கி மேன்மைப்படுத்துவதேயாகும்.

உலகச் சைவத் தமிழர் சர்வதேசிய – தேசிய தத்துவக் கோட்பாடாக – உலக வாழ்வியல் நடைமுறையாக ஏகசிவத் தெய்வ சைவத் தமிழ்க்கோட்பாடு எங்குமாகி விளங்கியுள்ளது. பண்டைய சைவத் தமிழ்நூல்களில் இக்கோட்பாட்டுத் தத்துவ உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன், யாதும் ஊர், யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" எனும் ஏகசிவத் தெய்வ - ஏகசைவ தத்துவக் கோட்பாட்டு நடைமுறைச் செந்நெறிகளை எடுத்தியம்பி வழிகாட்டியுள்ளன.சைவ தத்துவச் செயல்முறையில் அண்டத்தில் இருப்பதைப் பிண்டத்தில் காணலாம் எனும் தத்துவச் செயல்முறையும் முக்கிய இடம்பெறுகிறது. அண்டவெளியாகிய விண்ணில் இருக்கும் தெய்வமாகிய ஞானத்தை மண்ணில் பிண்டமாகிய உடல் எனும் மெய்யின் உள்ளே உள்ள ஞானத்தை அதாவது மெய்ஞானத்தைக் காணலாம் என்பதாகும்.

இந்திய உபகண்டத்தில் உள்ள சிந்துவெளி ஆற்றங்கரை நாகரிகத்தின் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அன்றைய வாழ்விட மனிதர்களின் தொல்பொருள் ஆய்வானது, சிவதெய்வ வாழ்வியல் வாழ்ந்ததற்கான சான்றுகளையும், சிவ சைவ வாழ்க்கை வாழ்ந்ததற்கான சான்று உண்மைகளையும் வெளிப்படுத்தியுள்ளன. சிவ வழிபாடு, சிவ இலிங்க வழிபாடு, சிவனைக் குறிக்கும் பசுபதி வழிபாடு போன்ற வழிபாட்டு வாழ்வியல் நடைமுறை இருந்ததற்கான ஆதாரங்கள் வெளிப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியா முழுவதும் சிவ சைவ வாழ்வியல் இருந்தது தெளிவாகிறது.

ஐக்கிய அமெரிக்காவின் காட்டுப் பகுதியில் சிவன்பிட்டி எனும் பெயருடைய மண்பிட்டி உண்டு. அங்கே தொல்பொருள் ஆய்வுசெய்தபொழுது சிவலிங்கங்களும் சைவச் சின்னங்களும், சைவம் அங்கு வாழ்ந்துள்ளதற்கான சான்றுகளும் கிடைத்து உறுதிப்படுத்தியுள்ளன. அத்தோடு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நுண்ணுயிர்ப் படிமங்களும் பெறப்பட்டுள்ளன. மெக்சிக்கோவிலும் தொல்பொருள் ஆய்வின்போது சிவலிங்கம்போன்ற சிவ சின்னங்கள் கிடைத்துள்ளமை அங்கும் ஆதியில் சைவ வாழ்க்கை வாழ்ந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவை ஆட்சிசெய்த சோழப் பெருமன்னர் கி.பி.1000 ஆண்டில் இருந்து கி.பி.1200 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா, ஈழம் உள்ளிட்ட தெற்காசியப் பகுதியில் அவுஸ்திரேலியாப் பகுதிவரையிலான நாடுகளின் ஆட்சியாளர்களாக இருந்து சைவமும் தமிழும் பரப்பி ஆட்சி செய்தனர். இவர்களது ஆட்சிக் காலத்தில் சைவம் சிறந்து, அப்பிராந்திய மக்கள் சைவர்களாக வாழ்ந்து மேன்மை பெற்றிருந்ததை அங்கங்கே நடைபெறும் தொல்பொருள் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

நாம் வாழும் ஈழம், பண்டைய நாளில் உலகின் தெய்வீகப் புனித சைவத்தின் சிவத் தலமாகவும், சிவ யாத்திரைத் தலமாகவும் உலகின் தெய்வீக சிவச் சைவ நாடாகவும் விளங்கியுள்ளது. இதனால்தான் இதனைச் சிவபூமி என்றும் அழைத்தனர். பண்டைய நாளிலும் சீன யாத்திரிகர்களும் ஈழத்திருநாட்டின் சைவத் தலங்களுக்கும், சிவனொளிபாதமலைத் திருத்தலத்திற்கும் தெய்வயாத்திரை செய்துள்ளமை குறிப்பிடப்படுகிறது.

ஈழத் திருநாட்டில் பண்டைய நாட்களில் ஐம்பெரும் சிவத்தலங்கள் புனித சைவத் தலங்களாகப் பேணப்பட்டுள்ளன. அவையாவன: நாகர்குல ஈஸ்வரம் எனும் நகுலேஸ்வரம், மன்னார் திருக்கேதீஸ்வரம், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், சிலாபம் முனீஸ்வரம், மத்திய மலைநாடு சிவன்ஒளிர்பாத ஈஸ்வரம் என்னும் சிவத்தலங்களாகும்.

தொல்காப்பியம் காட்டும் பண்டைய ஆதி உலகாகிய "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" அனாதி காலத்தில் சைவமும் தமிழும் கூறும் நல்லுலகமாகவே இருந்துள்ளமை தெரியவருகிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்" எனும் நியதிக்கு ஏற்ப என்றென்றும் நன்றே அனாதி ஆதி சைவ உலகமாக எல்லோரும் வாழ்வதாக. சைவநீதி உலகமெலாம் விளங்கி, சைவ உலகமாக, சைவ உலகோராக, சிவ சைவராக அனைவரும் வாழ்ந்து அனைத்தும் சிவமாக அனைத்து உயிர்களும் மேன்மையும் மாட்சியும் சிறப்பும் பெற்று வாழ்வதாக.

# கனடா இந்து மாமன்றம் வழங்கும் சர்க்கரைப் பொங்கல் விழா சிறப்புற

# தமிழர் செந்தாமரை

வாழ்த்துகிறது!

Tel: 905 471 0076
416 707 6262
416 839 0904
Fax: 905 470 7480

# தமிழர் செந்தாமரை

ஆசிரியர்: கனக அரசரத்தினம்

# முருக பக்தி

டாக்டர் அரங்க இராமலிங்கம்

தமிழ்ப் பெருந் தெய்வமாகத் திகழ்ந்து ஒளிருபவர் முருகப் பெருமான். தலைமைச் சித்தராக திருவவதாரம் செய்தருளிய முருகப் பெருமானுக்குரிய பெருமைகள் மிகப் பல. அவற்றுள் சில...

1) மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து முதற்சங்கம், இடைச்சங்கம் ஆகிய இரண்டிலும் அகத்தியர் முதலான தம் சீடர்களோடு அமர்ந்து தெய்வத் தமிழை வளர்த்த தமிழ்ப் பெருந்தெய்வம்.
2) சித்தர்களுக்கெல்லாம் தலைமைச் சித்தராகத் தோன்றி, அகத்தியர் முதலாகச் சித்தர் பரம்பரையை உருவாக்கிய ஞானச்சித்தர்.

3) தந்தையாகிய சிவபெருமான் முதற்கொண்டு, தம் காலத்தில் வாழ்ந்த அனைத்துத் தெய்வங்களுக்கும் ஓங்காரமாகிய பிரணவத்தின் - உயிரின் இரகசியத்தை உணர்த்தி அருளியவர். இப்பூவுலகில் ஞானப் பயிர் வளர்க்க மானுட தேகம் தாங்கித் திருவவதாரம் செய்த காலத்தில் - அதாவது தாம் வாழும் காலத்திலேயே தகப்பன் சுவாமி, சுவாமி, சுவாமிநாதன், குழந்தைசாமி, குருநாதன், குருபரன், ஞானகுரு, குமரகுரு, குருசுவாமி எனப் பலவாறாகப் போற்றித் துதிக்கப்பெற்ற ஒப்பற்ற தெய்வம்.

4) ஆறறிவு உயிரினங்களுக்குள்ளே, உயர்ந்த உயிரினம் மனித இனம். அரிது அரிது மானிடராதல் அரிது என அவ்வையாரும், தாயுமானவரும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். தெய்வம், ஆறறிவு பெற்ற ஒவ்வொரு மனித தேகத்திற்குள்ளேயும் உள்ள இருதய கமலத்துள் ஜோதியாக ஒளிர்கின்றது. ஜீவ குகைதோறும் வீற்றிருந்த மறுவிலாக் குகனைப் போற்றி வழிபட்டு உய்திபெற்றனர் சித்தர், முத்தர், ஞானியர். எனவே, இன்று ஒவ்வொரு மானுட தேகத்திலும் ஜோதியாய் ஒளிர்ந்துகொண்டிருப்பவர் முருகப் பெருமானே என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. ஒவ்வொரு மானுட தேகத்திலும் ஒளிரும் ஜோதி முருகன் அவரே.

5) திருவாவிநன்குடிவாழ் தேவர்களாகிய தம் சீடர்களோடு, திருவாவினன்குடியில் (பழனி) அமர்ந்து ஞானத்தை அருளியவர். அறுபடைவீடுகளும் (திருக்கோயில்களும்) குமரன் கோயில் இருக்கும் குன்றுகளும் (குன்றுதோறாடல்) முருகப் பெருமான் அமர்ந்து தம் சீடர்களுக்கு அருளமுதம் (தீட்சை) அளித்த இடங்களே. ஞானம் பொங்கித் ததும்பிய இடங்களே அறுபடை வீடுகள். குருபிரான் இருந்து உபதேசித்த இடமாகிய (அறிவுக்கும் அறியாமைக்கும் இடையே நடந்த போர்க்களம்) குருசேத்திரங்களே அறுபடை வீடுகள்.

6) அறுபடைவீடுகளும் நம் உடம்பிற்குள்ளே ஆறு ஆதாரங்களாக அமைந்துள்ளன. உலக்கையின் அடிப்பகுதி சிதைந்துபோகாமல் இருப்பதற்குக் கவசமாகப்



போடப்படுவது பூண். அதுபோல உயிருக்குப் பூணாக அமைந்துள்ள அறுபுரி நூலே அறுபடைவீடுகள்.

7) இராமபிரான் தொடங்கி வசிட்டர், அகத்தியர், காகபுஜண்டர், போகர், ஆதிசங்கரர், அருணகிரிநாதர், சித்தர்கள், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் வரை அனைவரும் முருகப் பெருமானைப் போற்றித் துதித்து வணங்கியுள்ளனர். பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானை அறுமுகச் சிவன் எனப் போற்றி வணங்குகிறார். சித்தர்கள் அனைவருமே முருகப் பெருமானைப் போற்றிப் பரவியுள்ளனர். முருகப் பெருமானின் அழகில்-

பேரொளியில் - அளப்பரிய ஆற்றலில் ஈர்க்கப்பட்டவர்கள் சித்தர்கள்.

8) அகத்தியர்: அகத்தியர் அருளிய துறையறி விளக்கம் என்னும் நூலில் உள்ள 114 பாடல்களில் முருகனின் அரும்பெரும் சிறப்புகளைப் போற்றிப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் தேவ இரகசியங்களையும், தீட்சா இரகசியங்களையும் வைத்துப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் ஓசைநயமிக்க அழகான பாடல்கள்.

சுப்பிரமணியர் ஞானம் - 200 என்ற நூலில் முருகர் அகத்தியரை ஒருமையில் அழைக்கிறார். சித்தர் மரபினர்க்கெல்லாம் குருமுனி என்று மதிக்கப்பெறும் அகத்திய மகாமுனிவரைப் பார்த்து 'கேளடா அகத்தியனே' எனக் கூறியருளுகிறார். தம் சீடரைத்தான் குருபிரான் ஒருமையில் அழைக்க முடியும்.

அகத்திய மகாமுனிவருக்குச் சுப்பரமணியர் அருளிய யோகஞானம் - 500 என்ற நூலில் 50க்கும் மேற்பட்ட பரிபாஷை இரகசியங்களை முருகப்பெருமான் அருளியுள்ளார். எட்டும் இரண்டும், நாற்பத்து முக் கோணம், நெருப்பாறு, மயிர்ப்பாலம், ஐம்பத்தோர் அட்சரம், வேகாக்கால் - சாகாத்தலை - போகாப் புனல், ஏழு திரைகள் போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட பரிபாஷை களை விளக்கி அருளியுள்ளார்.

9) வசிட்டர்: இராமபிரானுக்குக் குருவாக இருந்த வசிட்டர், முருகப் பெருமானைப் பற்றிப் பாடியிருக்கிறார். இராமபிரானுக்கு மருத்துவத்தை உபதேசிக்கத் தொடங்கிய வசிட்டர், பிரகாசம்தான் வடிவேலன் எனக் குறிப்பிடுகிறார். வசிட்டர் பாடியருளிய ஞானோதயம் என்ற நூலில் பத்தாவது பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "சுழிமுனைப்பூட்டு திறந்தால் மட்டுமே எல்லாச் சித்திகளையும் அடைய முடியும். சக்தி ஊடுருவாத காயசித்தி பெறவும், வெப்பம், குளிர், காற்று போன்றவற்றால் பாதிக்கப்படாமல் இருக்கவும், என்றும் எதிலும் நிலைகலங்காத அற்புத வலிமை பெறுவதற்கும் அப்போதுதான் முடியும். இந்நிலையை அடைய வேண்டுமானால் வடிவேலனாகிய முருகப்பெருமான் உள் இருதய கமலத்தில் பிரகாசிக்க வேண்டும் என வசிட்டர் குறிப்பிடுவது நமக்கெல்லாம் வியப்பைத் தருகிறது.

10) திருவள்ளுவர்: திருவள்ளுவர்பிரான் பாடி அருளியுள்ளவை பல. அவற்றுள் நமக்கு இன்று கிடைப்பன திருக்குறள், ஞானவெட்டியான், நாதாந்தத் திறவுகோல் போன்ற சில. என் குருசாமி, எனக்கு உபதேசிகன், பொன்போலும் பூரணன் என மகிழ்ச்சிப் பெருக்கோடு முருகப் பெருமான் அருளால், தான் ஞானசித்தி அடைந்ததைக் குறிப்பிட்டுப் போற்றுகிறார். (ஞானவெட்டியான் பாடல் எண். 1272, 1273)

11) ஆதிசங்கரர்: ஆதிசங்கரர் முருகப் பெருமான் பெயரில் பல நூல்களைப் பாடியுள்ளார். மனிதன் அவனவன் செய்த கரும வினையின் பயனை அனுபவிக்கச் செய்வதற்காகவே நவகிரகங்களும் திக் விஜயம் செய்கின்றன. அவற்றால் ஏற்படும் துன்பத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், முருகா உன் தாளைச் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. (ஆதிசங்கரர் அருளிய நவக்கிரக சுக்கிஷம் - 100: நூலின் காப்புப் பாடல்) எனக் கூறுகிறார். ஆதிசங்கரர் தம்முடைய ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்க ஸ்தோத்திரம் என்ற நூலில் முருகனை நினைந்து நினைந்து உருகுகிறார். அவருடைய பக்தி உண்மையாகவே நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. குகனைத் தவிர இன்னொரு தெய்வம் எனக்குத் தெரியவில்லை– தெரியவே இல்லை எனக் குறிப்பிடுகிறார். முருகப் பெருமானிடத்து ஆதிசங்கரருக்கு அப்படிப்பட்ட ஒரு பக்தி. அப்படிப்பட்ட ஈடுபாடு. முருகனைப்பற்றி நினைத்தவுடனேயே சக நாடி நரம்புகளும் ஒன்றாக இணைந்துவிடுகின்றன. மூக்சும் ஒடுங்கிவிடுகின்றது. மனக்கண்முன் எட்டாப் பெரு வெளியாய், எங்கும் நிறைந்த ஒளியாய் முருகன் உருவம் தோன்றுகிறது. ஆதிசங்கரர் மேலும் வேண்டுவதாவது:

"முருகா! காலன் வந்து உயிரைப் பறித்து இழுத்துச் செல்லப் பயங்கரமான உருவத்தோடு வந்து நிற்கும் காலத்தில் உன்னால் மட்டுமே என்னைக் காப்பாற்ற முடியும் என்பதை அறிவேன். அந்த நேரத்தில் உன்னை நினைக்கவோ வாய் விட்டு அழைக்கவோ கைகூப்பித் தொழவோ கூட சக்தி அற்றவனாக இருப்பேன். அந்த நேரத்தில் சக்தி என்ற வேலாயுதத்தைக் கையில் ஏந்திக்கொண்டு மயிலேறி நீ வரவேண்டும் முருகா. முருகா நீ என்னைக் காப்பாற்ற வேண்டும். உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் கதியில்லை." (சிறீ சுப்பிரமண்ய புஜங்க ஸ்தோத்திரம். பாடல் எண் 21-22)

12) போகர்: போக மகாமுனிவர் இயற்றியருளிய சப்தகாண்டம் - 7000 என்ற நூலில் பல அரிய செய்திகளைக் குறிப்பிடுகிறார். இப்பூவுலகில் முருகப் பெருமான் நம்மைப்போல மானுட தேகம் தாங்கி வந்த சிறப்பான மனிதர் என்றும், திருவாவினன்குடியில் (பழனி) தங்கி, ஞானப் பரம்பரையை உருவாக்கியவர் என்றும், இவருடைய மரபு சைவம் என்றும் இவர் பிறந்தது ஆவணி மாதம் பூசம் நட்சத்திரம் என்றும், இவர் ஞானதேகம் பெற்று விளங்கிய ஞானதேகி என்றும், யோகஞானத் துறையின் தந்தை என்றும், இவர் உருவாக்கியது ஆதிசைவ பீடம் என்றும் பல்லாண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்தவர் என்றும், அகத்திய முனிவர்க்குக் குருபிரான்

என்றும், தாம் அகத்தியருடைய மாணவர் என்றும், இன்னோரன்ன பல செய்திகளைப் போகர் (போகர் சப்த காண்டம் - 7000. பா.எண்: 5622, 5693, 5695, 5732, 5852, 5853,5941) குறிப்பிடுகிறார்.

13) தமிழிலக்கிய வரலாற்றில் முருகப் பெருமானைப் போற்றித் துதித்துவணங்கிய பாடல்களே மிகுதி. வேறு எந்தத் தெய்வத்திற்கும் இவ்வளவு பாடல்கள் தமிழில் இல்லை. (காண்க: காந்தளகம் வெளியிட்டுள்ள முருகன் பாடல்கள் : தொகுதிகள் 12. வர இருப்பவை 6: மொத்தம் - 12=6+18. மொத்த பக்கங்கள 10,000 க்கு மேல்)

14) "முத்தமிழாலே வைதாரையும் அங்கு
வாழவைப்போன்" (கந்தரலங்காரம் -22) முருகன்
என்கிறார் அருணகிரிநாதர்.

ஏது பிழைசெய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே! நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு.

எனத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும் முருகனை நினைந்து உருகுகிறார். பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சம் முருகப் பெருமானுக்கே உண்டு. தன்னை எதிர்த்த சூரனை மயிலாகவும் சேவலாகவும் ஆக்கிக்(விந்து-நாதம்) கொண்டவர். காமாதி அசுரர்களை ஞான வேலினால் வென்று, மெய்ஞ்ஞான அரசினை நிறுவி ஆறுபடை வீடுகளிலும் அருளாட்சியினை நடத்திய ஆறுமுகர்.

15) அறுவகை சமயத்தோர்கட்கெல்லாம்
காட்சியளிப்பதற்காக ஆறுமுகமானவர்,

அறுவகைச் சமயத்தோர்க்கும் அறுமுகத் தெய்வமாகி
செறிதரு பிரம்மம் நான்என்று சின்மயி லேறி
குறுமுனிக் கருளிச்சீவ குகைதோறும் வீற்றிருந்த
மறுவிலாக் குகனைப்போற்றி மாய்த்தனன்
பிறவியெல்லாம்.

என்னும் பாடல் ஆய்வாளருக்கு அரிய விருந்தாக அமைந்துள்ளது. வைதீக சமயத்தில் உள்ள அறுவகைச் சமயங்களுக்கும் உரிய தெய்வம் முருகப் பெருமான். எனவேதான், ஆறுமுகங்களோடு காட்சிதருகிறார். அறிவாகிய மயிலிலேறி குருவாக விளங்கும் அகத்தியருக்கு (குட்டையானவர் என்ற பொருளில் குறுமுனி என எழுதுவது பிழை. குருபிரான் என்ற பொருளில் குருமுனி எனக் குறிப்பிடுவதே பொருத்தமுடையது.) அருளமுதம் அளித்தவர் அதாவது உபதேசம் கொடுத்தவர். ஜீவனிலும் ஜோதியாய் இருப்பவர். குற்றமில்லாத குகனைப் போற்றி வணங்கிப் பிறவியை மாய்த்துக்கொண்டேன் என்னும் இப்பாடல் அருமையானது. பன்னிரண்டு தேவ சன்னதங்களைக் கரங்களிலே தாங்கி, ஞானதீட்சை அளித்தருளிய பன்னிரு கரத்தர். பன்னிரண்டு கரங்கள் என்பது பன்னிரண்டு ஞானச் செயல்களைக் குறிக்கும்.

16. ஒவ்வொரு ஜீவனையும் மறைத்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை, (அவா, மதம், மோகம் என்பர் வள்ளலார்) என்ற மூன்று அசுரர்களையும் (சூரபன்மன், சிங்கமுகாசூரன், கஜமுகாசூரன்) ஞானவேலினால் கொன்று, ஜீவனின் - உயிரின் உண்மை வடிவத்தை உலகுக்கு மயிலாகவும், சேவலாகவும் கண்ணாரக் காட்டியவர். மயிலும் சேவலும் ஒளி; ஒலி-விந்து: நாதம்-சிவ: சக்தி - அதுவே பிள்ளையார் சுழி - அதுவே திருவடி என்பதை உணர்வுடையார் உணர்வர். முருகப்பெருமான் தம்முடைய மெய்ஞ்ஞான அரசினை நடத்திட பன்னிரு கரத்தினையும் (பன்னிரு சன்னதங்கள்) அருளமுதம் பொழிய ஆறு முகத்தினையும் பிறவிக்குக் காரணமான காமாதி அசுரர்களை அழிக்கச் சுழித்தெழுந்து வரும் சக்தியாகிய ஞானவேலினையும் உடையவர். திருவடி மட்டும் இரண்டு - இரண்டு கண்களைப் போல.

17. தமிழ்த் தெய்வமாக முருகப் பெருமான் துலங்குவதால் உலகெங்கும் வாழும் தமிழர்கள் தாங்கள் வாழுமிடங்களில் எல்லாம் முருகப் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டி வழிபட்டனர். கடல்கடந்துசென்ற தமிழர்கள் தங்களுடன் முருகப் பெருமானையும் கொண்டு சென்றனர்.

18. ஞானமே வடிவாகிய முருகப் பெருமானை என்றும் இளைஞராக, அழகுடையவராகவே வணங்குபவர் தமிழர். ஞானத்திற்கு உருவமேது? செயல்படும்போது அதற்குரிய வடிவத்தைப் பெறும். நெருப்பு, காற்றஷறு, தண்ணீர், ஒளி, ஆகாயம் இவை ஐந்தும் வெளிப்படும் பொருளுக்கேற்ப வடிவத்தைப் பெறுவதுபோல, உருவம், அருவம், அருவுருவம் என மூன்று நிலைகளிலும் முருகப் பெருமானைத் தமிழர்கள் வணங்குகின்றனர்.

1) உருவமாக - திருக்கோயில்களில் - பன்னிருகை - ஆறுமுகமாக, பழனியாண்டவராக, பாலமுருகனாக தனித்தும் இல்லற ஞானியாக வள்ளி தெய்வானையோடு இணைத்தும் வழிபடுதல்.

2) அருவுருவமாக - ஒரு கல்லை நிறுத்தியும், வேலினை நட்டும், ஆற்றங்கரையிலும், ஆற்றுக்கிடைப்பட்ட இடத்திலும், ஊர் மன்றத்திலும், பெரிய மரங்கள் இருக்கும்

பொழிலிலும், மன்றத்திலும், குன்றுகள்தோறும், பழமுதிர்சோலைகளிலும் முருகன் உறைவதாக நம்பி வழிபடுதல்.

3) அருவமாக - ஜோதி வடிவில் - மகரஜோதி தரிசனம் - 'இம்' என்ற மகார பீடத்தில் ஜோதியாய் ஒளிருபவர் முருகப் பெருமானே - வாடாத தீபமணிப் பூரம் முருகரே.

4) நமது புருவத்தில் ஆறு பட்டையாய் மணிபோல் ஒரு ஜோதி இருக்கிறது. அந்த ஜோதியே சண்முகம் என்கிறார் வடலூர் வள்ளற் பிரான். ஜோதி முருகனாக வழிபடப்பெறும் சிறப்புக்குரியவர் முருகப் பெருமான்.

19.வடலூர் வள்ளற்பிரானாகிய இராமலிங்க அடிகள், திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் தன்னுடைய இருதய கமலமாகிய கண்ணாடியில் கண்ணாரக் கண்டு கண்டு களித்தவர். தெய்வ மணிமாலை போன்ற அற்புதமான பாடல்களை முருகப் பெருமான்மேல் மாலை மாலையாகப் பாடி அழுதவர். முருக பக்தியிலேயே தோய்ந்த வடலூர் வள்ளற் பெருமான் இறுதியில் முருகப் பெருமானை ஜோதி வடிவமாக ஊனுடம்பிற்குள்ளே காண்கிறார்.

நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தியிருக்கிறது. இந்த ஜோதி மணியை ஷண்முகம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல், மூன்றிடந்தாண்டி, விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி இருக்கிறது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்தில் உள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகம் என்பதையும் ஷண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களில் உள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உள்மணிக்கப்பால் சாந்த நிறைவாய் உள்ள ஆறுதலமாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம் என்று வடலூர் வள்ளற்பிரான் 'சுப்பிரமணியம்' என்ற தலைப்பின் கீழ் விளக்குகிறார். இவ்வாறு அகத்தியர் தொடங்கி, வடலூர் வள்ளற்பிரான் வரை அனைத்துச் சித்தர்களாலும் போற்றி வணங்கப்பெற்றவர் முருகப் பெருமான்.

20. அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக! (தி.மு.படை 269) என நக்கீரர் பெருமான் அருளியதற்கேற்ப முருக என்ற தமிழ்ச் சொல் ஓங்காரத்தைக் குறிக்கும்.

ம் + உ = மு
ர் + உ = ரு
க் + அ = க

ஆக இச்சொல்லில் உள்ள அகர உகர மகரங்கள் மூன்றும் சேர்ந்து ஓங்காரமாகத் திகழுகின்றன. 'ரு' என்றால் பிரகாசம். பிரகாசமான ஓங்காரத்தின் வடிவமே முருகன். அதாவது பிரணவ சொரூபன் என்று பொருள். இத்தகு சிறப்புக்கும், கீர்த்திக்கும் உரிய முருகப் பெருமான்மீது ஒருவருக்குப் பக்தி வரும் என்றால் அது பூர்வ புண்ணியம் என்றுதான் சொல்லவேண்டும். ஒருவருக்கு முருகன்பேரில் பக்தி ஏற்படுவதற்குக் காரணம் அவர் செய்த பூர்வ புண்ணியமோ அல்லது அவர் பெற்றோர் செய்த புண்ணியமோ யானறியேன். எது எப்படியிருப்பினும் பக்தி செய்வோர் அனைவருக்கும் முருகனின் அருள் கிடைக்கும். ஒவ்வொருவரின் ஜீவ குகையாகிய - இருதய கமலமாகிய - அருட்பிரகாச சுழிமுனையில் சிம்மாசனமிட்டு ஜோதியாய் வீற்றிருக்கும் முருகனை - அருட்ஜோதி முருகனை இடைவிடாது நினைந்து பக்திசெய்பவர் பிறவிப் பிணியிலிருந்து விடுபடுவர்.

☑

என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி என் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மைதீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்

ஆதியந்தமில்லை யென்றான் எங்கள் குருநாதன்
அதுவே நீ என்றுரைத்தான் எங்கள் குருநாதன்
ஜோதிமயம் என்று சொன்னான் எங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றான் எங்கள் குருநாதன்
சாதி சமயமில்லாதான் எங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணான் எங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தான் எங்கள் குருநாதன்!

- யோகர் சுவாமிகள் -

# மேற்கு நாடுகளில் சைவ கலாசாரம்

பேராசிரியர்.திருமதி.கலைவாணி இராமநாதன்



வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து இந்தியா, ஈழம் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் சிவவழிபாடு சிறப்புற்று வந்துள்ளதை வரலாற்றிஞர்கள் பலர் எடுத்துக்காட்டியுள்ளனர். அவர்களில் சேர்.ஜோன்மார்ஷல், சி.சிலேற்றர், ஜி.யு.போப், கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, எஸ்.வேங்கட ரமணய்யா போன்ற சிலர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தியாவில் சிவ வழிபாடு வேதகாலத்திற்கு முற்பட்டதென ஜி.யு.போப் என்பாரும் கி.மு 3000ம் ஆண்டுகட்கு முன்பே சிவ வழிபாடு பிரபலமடைந்திருந்ததை சிந்துவெளி அகழ்வுகளில் கிடைத்த சிவயோகியின் முத்திரையும், கொம்புடைக் கடவுள் இலட்சினையும் காட்டுவதாக சேர்.ஜோன் மார்ஷல் என்பாரும் குறிப்பிட்டுள்ளனர். வேத இலக்கியங்களில் யசுர்வேதம் - ஸ்ரீருத்திரம் பகுதி சிவனுக்குரிய சகஸ்ரநாம – அஷ்டோத்திர நாமாவளிகளையும், பஞ்சாட்சர மந்திரத்தையும் கொண்டுள்ளது. தமிழகத்தில் கி.மு 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பியம், சிவனை வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் எனச் சுட்டுவதுடன் முதல் நூலாகிய வேத சிவாகமங்கள் இறைவனிட மிருந்து வெளிப்பட்டன என்னும் கருத்தையும் புலப்படுத்தும். எண்குணத்தான் தாளை வணங்காத்தலை எனக் குறளும் சிவனது இயல்பினைத் திருக்குறளில் வெளியிட்டது. கி.பி 5ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த திருமந்திரம் எடுத்துரைத்த சிவப்பொருளின் மகிமை சைவத்தின் சிறப்பையும் சைவசித்தாந்த தத்துவத்தையும் உலகிற்களிக்கக் காரணமானது.

அடுத்து, பல்லவர், சோழர் காலங்களில் தோத்திர – சாத்திர நூல்களிலும் நாயன்மார், அடியார்களால் சிவ வழிபாடு பெரும் செல்வாக்கைப் பெற்றது. இத்தகைய சிவ வழிபாடு புராதன காலம் அமெரிக்க, ஆபிரிக்கா, ஆஸ்ரேலியப் பழங்குடிமக்களிடையிலும், எகிப்திய, சுமேரிய நாகரிகங்களின் அகழ்வுகளிலும் காணப்படும் சின்னங்களில் இடம் பெற்றிருப்பதாகவும் சமீபகால ஆய்வுகள் காட்டுகின்றன. அதுமட்டுன்றி கி.முற்பட்ட காலத்திலிருந்தே தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளிலும் சைவமும் சிவவழிபாடும் பெரும் செல்வாக்குச் செலுத்தியமையினை இன்றும் அந்நாடுகளில் காணப்படும் இந்துக் கோவில் வழிபாடுகளில் காணலாம். இன்றும் அங்கு வாழும் மக்களின் சமய வாழ்விலே சைவசத்தினது செல்வாக்கின் அம்சங்கள் பலவற்றைக் காணமுடியும். இன்றோ மேற்குலக நாடுகள் பலவற்றிலும் இந்துக்கோவில் வழிபாடுகளும் குறிப்பாக லண்டன் மாநகரில் பதினேழிற்கும் மேற்பட்ட இந்துக்கோவில்களும், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ்ச்சர்லாந்து போன்ற இடங்களில் காணப்படும் பெரிய அளவிலான சைவாலயங்களும் பரிணமித்திருப்பது, மேற்குலக நாடுகளில் ஏற்பட்டுவரும் சைவ இந்து கலாச்சார விழிப்புணர்வைக் காட்டுவதாகவுள்ளது. இந்த வகையில் தற்போது அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஒன்று லண்டன் நகரில் அமைந்திருப்பது சைவகலாச்சாரம் பேணும் அடியவர்கட்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

ஈழ நாட்டிலிருந்து போர் அனர்த்தங்கள் இன நெருக்கடிகள், அரசியற் சூழ்நிலை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிப் புலம் பெயர்ந்து மேற்கு

நாடுகளில் சென்று வாழும் தமிழ் மக்கள் பெரும்பாலோர்க்கும் தமது குழந்தைகள், எதிர்காலச் சந்ததியினர் எங்கே தமது கலாச்சாரம், பண்பாடுகளை இழந்து மறந்து விடுவார்களோ என்ற ஒருவகை அச்சவுணர்வு அவர்களிடம் காணப்படுகின்றது. எதை இழக்கிறோமோ அதன் மீதுதான் பற்றும் பாசமும் அதிகமாகும். இதற்கு மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் சைவத்தமிழ் மக்களின் கலாச்சார முயற்சிகள் சிறந்ததொரு உதாணமாகும். புராதன காலமுதல் இந்து ஆலயங்கள் கலை, கலாச்சாரம், பண்பாடுகள், ஒழுக்க விழுமியங்கள் ஆகியவற்றின் வளர்ப்புப் பண்ணைகளாக விளங்குவன.

சைவாலயங்களில் நடைபெறும் நித்ய, நைமித்தியக் கிரியைகள் சைவத்தமிழ் மக்களின் தினசரி ஒழுக்க விதிகளைப் பேணும் ஒரு சைவ வாழ்வியற் பண்பாடாகும். இறைவன் மீது நம்பிக்கை வைத்து எல்லாக் கருமங்களையும் முன்னெடுப்பது வாழ்வில் எப்போதும் ஒரு முன்னெச்சரிக்கையுடன் வாழும் ஒரு பாதுகாப்புணர்வை ஊட்டுகின்றது. மனிதர்கள் தமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியில், ஆழமான விஸ்வாசம் கொள்வதும் - அந்த மாபெரும் ஆற்றல் சக்தியைப் பூமிக்கு அழைத்து வந்து – அதற்கு ஒரு வாழ்விடம் அழைத்து – அதன் எல்லையற்ற சக்தியை பராமரித்துப் பேணுவதன் வாயிலாக அவர்கள் தம்மிடத்தில் மறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியைத் தூண்டுகிறார்கள். அத்துடன் அவ்வாறு அழைத்து வரப்பட்ட சக்தியை ஒருவுருமாக்கி ஆலயத்தில் சேர்த்து வைத்துப் பாதுகாத்து மக்கட்கு வழங்குவதே கும்பாபிஷேகத் திருவிழாவின் அடிப்படையாகும். ஆலயத்தில் இடம்பெறும் நித்ய, நைமித்யக் கிரியைகளின் நோக்கமும் இவ்வாறு ஒவ்வோர் பணிக்காக ஒவ்வோர் விதமான சக்தியை அலையை ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் வாழ்வை மேம்பாட்டையச் செய்வதனையே அவை உட்பொருளாகக் கொண்டுள்ளன. தன்னையாளும் சமர்தெனக்கருள்வாய், என்றார் ஔவையார். ஊர்கூடித் தேர் இழுப்பது என்பது ஓர் அருமையான சொற்றொடர். இது அனைத்து சமூகமக்களுக்கும் ஒற்றுமையுடன் கூடி, ஆலயம் செல்வதும் - இறைவனை வழிபட்டு தேர் வடம் பிடித்து வல்லமை பெருக்கித் துன்பங்களைப் சம்காரம் செய்து அமைதியாய் ஆனந்தமாய் வாழ்வோம். என சங்கல்பம் செய்வதே அதன் அர்த்தமாகும் மகோற்சவப் பெருவிழாவின் உட்கிடையும் இதுவாகும்.

இவ்வாறு இறையருட் சக்தியானது தேக்கி வைக்கப்பட்டுள்ள இடம் ஆலய மாதலால் அங்கு செல்வோர் சுத்தமாக சுகாதாரமாக ஒழுக்க நியமங்களுடன் செல்வது அவசியமாகும். தண்ணீரில் மறைந்திருக்கும் மின்சக்தியானது அதற்கெனக் கற்று வந்த பொறியியலாளயர்கள் மூலமாகப் பெறப்பட்டு மின் நிலையங்களில் (Power station) வைத்துப் பாதுகாக்கப்படும். பின்னர் அதற்குரிய விதிப்படி அந்த சக்தியானது அதற்குரிய உபகரணங்கள் மூலம் உப மின்நிலையங்கட்கு (Sub station) எடுத்துச் செல்லப்பட்டு மின்வயர்கள் மூலம் அந்த மின்சக்தி கடத்தப்பட்டு வீட்டுப் பாவனையாளர்கட்கு – மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும். பிரதான மின்வழங்குமிடத்தில் (Main supply) 'அபாயம்' (Danger) எனப் போடப்பட்டிருக்கும். அதாவது அந்த மின் வழங்குமிடத்திற்கு அதற்குரிய அறிவுத்துறையிலுள்ளவர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் மட்டுமே அருகில் செல்லமுடியும். ஏனையோர் சென்றால் 'ஆபத்து' என்பது பொருள். இதேபோன்று தான் இயற்கையின் மாபெரும் ஆற்றல் சக்தி ஆலயங்களில் விக்கிரக வடிவில் சேமிக்கப்பட்டு சிவாச்சார்யார்கள் ஆற்றும் கிரியைகள் மூலமாக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றது. ஆலய நுழைவாயிலில் கைகளில் கதாயுதத்துடன் நிற்கும் துவாரபாலகர்கள் தோற்றமானது – மாபெரும் சக்தியுறைமிடம் - ஆபத்தானது – 'முறைப்படி' அணுகினால் அதிக சக்தி வாய்ந்தது – திரிகரண சுத்தியுடையோர்க்கு அது கிட்டும் - கவனம் என எச்சரிப்பதாகவுள்ளது.

அத்தகைய முறைமைகள் (Sustems) ஒழுக்க ஆசாரங்கள் (Moray culture) எனப்படும். கலையின்ப உணர்வையும் ஆசார நியமங்களுடன் அனுபவித்து வாழும் கலை 'கலாச்சாரம்' எனப்படும். சிவ – ஆசாரத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் சிவாச்சார்யார்கள் எனச் சிறப்பிக்கப்பட்டனர். பொதுமக்கள் தத்தமக்குரிய ஒழுக்க நியமங்கள், விரத நியதிகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமே ஆலய வழிபாட்டில் பயன்பெற முடியும். அல்லது அவை வெறும் பதில் கிடைக்காத – பயனளிக்காத பிரார்த்தனைகளாகவே முடியும். அதனால் சைவத்தமிழ் மக்கள் அனைவரும் தத்தம் சமய கலாச்சாரத்திற்குரிய ஒழுக்க ஆசாரங்களைப் பேணி வாழ்வில் மேனிலை அடைய வேண்டும் என்பதற்காகவே புலம் பெயர்ந்த சைவத்தமிழ் அன்பர்கள் தாம் செல்லுமிடமெல்லாமல் தமது சைவ கலாச்சாரத்தை நிலை பெறச்செய்வதில் தணியாத ஆர்வம் கொண்டுள்ளனர். அதற்கு ஒரு சிறந்த நிறுவனமாக அமைவன இந்துக் கோயில்களாகும். மேற்கு நாடுகளில் வாழும் சைவத்தமிழ் சான்றோர்களின் பெருமுயற்சியே லண்டன் மாநகரில் அமையும் இந்த அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயமாகும்.

திருக்கோயில் பண்பாட்டிற்குரியவாறு ஒழுக்கவிதிகளைப் பின்பற்றி வாழ்வதே ஆலயம் சார்ந்த சைவ கலாச்சாரத்திற்குரிய அடையாளமாகும். அவற்றிலே பொதுவானவை, உண்மை, பேசல் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், ஏழைகட்கு, துயருற்றோர்க்கு உதவுதல், பெற்றோர்களைப் பேணுதல், முதியோர்களை ஆதரித்தல், நோயாளர்களைப் பராமரித்தல் இவை தான் ஒரு சைவ மகனின் ஆசாரங்களாக இருக்க வேண்டும். பொய் பேசுதல், களவு செய்தல், கள்ளுண்ணல், கொலை செய்தல், காமவலைப்படுதல் இவை ஐந்தும் பஞ்சமாபாதகங்கள் என எல்லா சாத்திரங்களும், தோத்திர நூல்களும் போதித்தன. ஏனெனில் ஒழுக்கமில்லாதவன் மேற்படி செயல்களைச் செய்வதற்கு அஞ்சுவதில்லை. பாவங்கள் புரியப் பின் நிற்பதில்லை கொலை செய்யவும் தயங்குவதில்லை. இத்தகைய தீமைகளை விலக்கிவிட்டால் வாழ்விலே நன்மைகள் பெருகும். ஆனால் அவற்றினைக் கடைப்பிடிக்கும் மார்க்கத்தைத்தான் சைவர்கள் தமது சந்ததியினரிடம் வலியுறுத்துவது அவசியமாகும். பொய்கள் அமர்வதற்கு சிம்மாசனம் அளிப்பவன் - உண்மைக்குத் தூக்குமேடை, அமைத்தவனாகின்றான். அன்பு குடியிருக்கும் இதயம் பரிவு, பாசம், இரக்கம், உதவுதல் போன்ற பண்புகள் வளரும் கலாச்சார விளைநிலமாகின்றது.

இப்படியான உன்னதமான மனப்பாங்கு உள்ளவர்களால்தான் தன்னையும் தான் வாழும் சமூகத்தையும் உயர்த்த முடியும். 'அன்பும் சிவமும் ஒன்று' என்ற மேடைப் பேச்சுக்கள் பல இடங்களில் ஏட்டுச் சுரைக்காயாகிப் போவதைக் காண்கிறோம். மேற்குலக சைவத்தமிழ் மக்கள் ஒழுக்கப்பண்புகளில் விழிப்பாக இருந்தால் தான் சைவ கலாச்சாரத்தைப் பேணும் அரண்களாக ஆலயங்கள் அமைய முடியும். ஒழுக்கம் என்பது ஒருவரது நடை, உடை, பாவனையிலும் வெளிப்படும். அதற்காக நவீன உடைகள் அணிவது தவறல்ல – அடக்கமான வாழ்வு அடிமைத்தனம் என அர்த்தமாகாது. காமத்தைத் தடுக்கவே உடையணிவதில் நம் முன்னோர்கள் ஒழுக்கம் பேணினர். காமம், என்பது அனைத்துப் பாவங்களின் பிறப்பிடமாகும். 'பழையன கழிதல்' – 'புதியன புகுதல்' வழுவல கால வகையினாலே என்பது தொல்காப்பியம் கூறி வைத்த தீர்க்க தரிசன வாய்ப்பாடாகும். சமயத்தின் பெயரால் ஏற்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதும் - அறிவியற் புதுமைகளை, தொழில்நுட்ப வளர்ச்சிகளை வரவேற்பதற்கும் சைவ கலாச்சாரம் என்றுமே தடைபோட்டதில்லை. ஆனால் சைவ ஒழுக்கப் பண்பாடாகிய இல்லறம், ஒருவனுக்கொருத்தி என்ற கட்டுக்கோப்பு, உயர் கல்வியொழுக்கம் இவையனைத்திற்கும் ஆன்மீக வாழ்வே அடிப்படை என்பதை ஒரு சைவ வாழ்வு வாழ்பவர்கள் மறக்கலாகாது.

'விரதம்' என்பது ஆன்மீக வாழ்வில் ஒரு உன்னதமான ஒழுக்க நெறியாகும். ஒரு நேர உணவை விடுத்தல். முழுநேர உபவாசம் இருத்தல், நீராடி சுத்தமாக வழிபாடு செய்தல் என்பன விரதத்தின் ஒழுக்க நெறிப்பட்ட வாழ்வியலாகும். இவற்றால் தினசரி வீடும், நாடும், சுத்தமடைகின்றது. அழகும் சுகாதாரமும் உண்டாகின்றன. இத்தகைய ஒழுக்க வாழ்வு – புறப்பண்பாடு கலாச்சார வளர்ச்சியைத் தூண்டுவதுடன் அகப்பண்பாட்டு மலர்ச்சிக்கும் வித்திடுகின்றது. கற்புடன் வாழ்வதும், பிரமச்சரியம் அனுட்டிப்பதும் குழந்தை வளர்ப்பில் தம்மை அர்ப்பணிக்கும் தியாகமும் ஒரு மகா விரதங்களாகும். பஞ்சமாபாதங்களைக் களைந்து வாழ்தல் மிகப்பெரிய விரதமாகும். தனக்குள் உறையும் இறைவனுக்கு பக்தி செய்து பிறர்க்கு அன்புடன் அன்னமளித்து வழிபாடு செய்வதனை பெரியபுராண அடியார்கள் ஒரு விரதமாகவே அனுட்டித்து வந்தனர். எனவே தான் படமாடும் கோயிலுக்கு உணவு முதலிய பிரசாதங்கள் வழங்குவது போல் இறைவன் குடியிருக்கும் நடமாடும் கோயிலாக ஏழைகட்கும் உணவளியுங்கள் - அதுவே மிகப்பெரிய வழிபாடு என்றார் திருமூலர்.

ஆனால் நித்திய, மகோற்சவ காலங்களில் 'விரதமிருத்தல்' என்னும் பெயரில் வழிபாடு செய்பவர்கள் பலர் அதன் அடிப்படை உண்மைகளை மறந்து விரதம் அனுட்டிக்கும் காலங்களில் பிறரைத் தூஷிப்பது பிறர் மனம் நோகப் பேசுவது, பொய் சொல்லுவது, போட்டி, பொறாமை கொள்வது இவையெல்லாம் விரத பங்கமாகுமே தவிர – விரத பலன்களைத் தருவனவாகாது. எனவே ஆலய வழிபாடு இல்லத்து வழிபாடுகள் மூலமாக அதற்குரிய நடைமுறைக் கலாச்சார ஒழுக்கங்களைப் பின்பற்றுவதும் அதனைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்துக் கடைப்பிடிக்கச் செய்வதும் இன்றைய பெற்றோர்கள், பெரியவர்களின் தலையாய கடமையாகும். தமிழ் மொழியுணர்வை ஊட்டுவதற்காகத் தமிழாலயங்கள் சேவையாற்றுகின்றன. மொழியபிமானம், சமய அபிமானமுள்ள குழந்தைகள் நிச்சயம் வழி தவறிப் போகா. ஆலயங்களில் நல்நூல் நிலையங்களை அமைத்து முடிந்ததும், பிறருக்கு இடையூறு இல்லாது குழந்தைகள் நூல்கள் வாசித்துப் பழகுவது நன்று. வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்குகிறது. பண்ணிசை வகுப்புகள், பஜனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், குழு நடனம், குட்டிக்கதை கூறல் என்பன மூலம் பிள்ளைகளிடையே நற்பண்புகளை வளர்க்கவும் ஆலயங்கள் பணியாற்ற வேண்டும்.

தமிழகத்தில் சோழராட்சி நிலவிய காலங்களில் பெரும் ஆலயங்கள் யாவும் ஆதரவற்றோர் நிலையங்களாவும், அன்னதான மடங்களாவும், நூல் நிலையங்களாகவும், மருத்துவ நிலையங்களாகவும், யாத்திரிகர்கள் தங்குமிடங்களாகவும், கலாச்சார நிலையங்களாகவும், அரும் சேவையாற்றின. ஆலயங்களினூடாக அறப்பணிகளை முன்னெடுப்பதும் நாட்டிலேயே சைவ கலாச்சார விழுமியங்களைப் பேணுவதற்கு சிறந்ததொரு நடவடிக்கையாகும். ஒருவனுக்கொருத்தி என்ற கட்டுக்கோப்பு, உயர் கல்வியொழுக்கம் இவையனைத்திற்கும் ஆன்மீக வாழ்வே அடிப்படை என்பதை ஒரு சைவ வாழ்வு வாழ்பவர்கள் மறக்கலாகாது. கலை கலாச்சார நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், பட்டிமன்றங்கள் யாவும் இன்று எதிர்பார்த்த பலனைவிட வெறும் பொழுது போக்காகவே அமைந்துவிட்டன. தமிழ் ஆங்கில சினிமாக்கள், விளம்பரங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெரும்பாலானவற்றிலும் கலாச்சாரக் சீரழிவுகளை நோக்கியே நடைபோடுகின்றன. நல்லவற்றைக் கற்றுத்தரும் நிகழ்ச்சிகள் குறைவாகவேயுள்ளன என்பது சான்றோர்களின் விசனமாகும். எனவே நல்ல தரமான அறிவு பூர்வமான ஆசாரமிக்க கதையம்சம் கொண்ட நாடகங்கள், நடனங்கள், இசை மையங்கள் ஊடாக சிறுவர்களிடம் நற்பண்புகளை வளர்க்கும் சாதனங்களை உருவாக்க வேண்டும்.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் இந்து மெய்ஞ்ஞானம் கூறிய பலவிடயங்களை உண்மையானவை என உறுதிப்படுத்தி வருகின்றன. அவற்றில் அண்டவியற்கொள்கை அணு விஞ்ஞானத்துடன் ஒத்துள்ளதைக்கண்டு மேற்கு நாட்டு விஞ்ஞானிகள் வியக்கின்றனர். ஆன்மீகமும் அறிவியலும் ஒத்துப் போகுமோ என்ற சந்தேகம் பலருக்குண்டு. இன்று மேற்கு நாடுகளில் இளைய தலைமுறையினரின் இந்த சந்தேகம் நியாயமானதே. அவர்கள் பழைய தலைமுறையினர் போல சொன்னவற்றுக்கெல்லாம் தலையாட்டும் சமூகத்தவர்களல்ல. அணு விஞ்ஞான காலத்திலும் கணிப்பொறியுகத்திலும் வாழ்பவர்கள். நமது ஆன்மீகம் அவர்களின் அறிவுத் தாகத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். சைவசித்தாந்த தத்துவ ஞானம் கூறும் விஞ்ஞான பூர்வமான உண்மைகளையுணர்ந்து இன்று கீழ் நாடுகளைக் குறிப்பாக இந்தியாவை நோக்கிவரும் மேலை நாட்டு இளைஞர்களை ரமணாச்சிரமத்திலும், கேரளா அமிர்தானந்தமயி ஆச்சிரமம், புட்டபர்த்தி சத்தியசாயி நிறுவனம் என்பவற்றில் ஆயிரமாயிரமாகக் காணலாம். இந்துக்களின் யோகப் பயிற்சிகளும், தியான முறைமைகளும் அமைதிக்கான இருப்பிடம் என மேற்கு நாடுகள் வரவேற்கின்றன. அண்மையில் நான் மேற்கு நாடுகட்கு வந்தபோது அங்கே மேற்கு நாட்டவர்கள் பூசை செய்யும் இந்து கோவில்களையும், அதற்கு அவர்கள் அளிக்கும் விஞ்ஞான பூர்வ விளக்கங்களையும் கேட்கும்போது பெருமையாக இருந்தது.

இன்றைய தேவை யாதெனில் நமது குழந்தைகளை, சிறுவர்களை அறிவியல் கலந்த ஆன்மீக உலகிற்கு அழைத்துச் செல்லவேண்டும். ‘வைரம்’ கரி எனக்கண்டு பிடிப்பது அறிவியல், - வைரம் ஒளியின் திரட்சி எனக்கூறுவது ஆன்மீகம். அறிவின் மேன்மை ஆராய்ந்து பார்க்கும் மனம் - இரண்டிற்கும் பொது உணர்வின் உன்னதம் மட்டுமே மாறுபடும். எனவே மூல ஆற்றலின் முகிழ்ப்பு எங்கிருக்கிறது என ஆராய்வதும் விரித்துரைப்பதுமே இரண்டினதும் செயற்பாடுகளாகவும் இருக்கின்றன.

‘விஞ்ஞானமில்லாத சமயம் முடம்’,
மெய்ஞ்ஞானமில்லாத விஞ்ஞானம் குருடு’

என்ற அணு விஞ்ஞானி அயன்ஸ்ரீனின் கூற்றினைப் புரிந்து கொள்வோம். ☑

## சைவத் தமிழ் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

சைவநீதி மலர் அடுத்த வருடம் புத்தம் புது மலராய் நறுமணம்வீசி பொலிவுடன் விளங்க, சமய சம்பந்தமானதும், பலதரப்பட்ட மக்களுக்கும் பயன் தரக்கூடிய வகையிலும் உள்ள ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை, சைவநீதி மலரில் ஏற்கெனவே வெளிவராத புதிய ஆக்கங்களாக இருப்பது விரும்பத் தக்கது. இவற்றை தமிழிலோ, ஆங்கிலத்திலோ கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், வினா விடைகளாகவும், கதைகளாகவும் தமது ஆக்கங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தரமானதாகவும், இம் மலரில் மூன்று பக்கங்களுக்குள் அடங்குவதாகவும் இருத்தல் வரவேற்கத் தக்கது. இதனை கணனி மூலம் அச்சிட்டோ, திருத்தமான கையெழுத்துப் பிரதியாகவோ 1.10.2009க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்,
சைவநீதி

# நாம் சைவர்கள் என்று கூறிப் பெருமிதம்கொள்வோம்

வை.கேதாரநாதன்

"இந்துக்கள் அனைவரையும் சைவ சமயிகள் என்ற அழைப்பது சைவர் அல்லாதோருக்கு இடர் விளைவிக்கும்" என்னும் தலைப்பில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஆற்றிய உரை, நாளிதழ் ஒன்றில் வெளியிடப்பட்டிருந்தது. அதனைப் படித்தபொழுது தோன்றிய முரண்பாடுகள் உண்மைக்குப் புறம்பான கருத்துகள் தொடர்பாக எனக்குள் எழுந்த ஒரு உந்துதலினால் இக்கட்டுரையை எழுதத் தொடங்கினேன்.

"இந்து மதம் என்ற சொல்லைப் பாவிக்காதீர்கள்; சைவசமயம் என்று கூறுங்கள் என்று பெரும்பான்மை இந்துசமயிகள் இலங்கையில் காலங்காலமாகப் பின்பற்றிய மதத்தின் பெயரால் எல்லா இந்து சமயத்தவரும் அழைக்கப்படவேண்டும் என்று கோரிக்கைவிட்டுக் கொண்டிருப்பவர்கள் பலர் இன்று இருக்கின்றார்கள்". இக்கூற்று அவ்வுரையின் முதற் பந்தியில் இடம்பெறுகின்றது. இந்து சமயத்தவர் அனைவரையும் சைவ சமயிகள் என்று கூறும்படி காலங்காலமாகவோ அல்லது எப்பொழுதுமோ யாரும் கூறியதாகவோ எழுதியதாகவோ தெரியவில்லை. ஆனால், சைவ சமயத்தவரை இந்து சமயத்தவர் என்று கூறவேண்டாம்; எழுத வேண்டாம் என்றுதான் காலங்காலமாக கூறிவந்துள்ளனர்; வருகின்றனர்.

இந்துசமயமும் சைவசமயமும் ஒன்று எனக் கூறுவது தவறானது. உண்மையை அறியாதவர்களும் அறிந்தவர்களும் இந்துவும் சைவமும் ஒன்று எனக் கூறுவது ஏன்? இதனைப் பின்னர் ஆய்ந்து அறிவோம். இப்பொழுது இரண்டும் ஒன்று என அறியாமல் கூறுகிறார்களே அவர்களுக்கு உண்மையை எடுத்துக் காட்டவேண்டியது அவசியமானதாகும்.

இப்பொழுது இந்தியா என்றும் உபகண்டம் என்றும் அழைக்கப்படும் நாட்டுக்கு இப்பெயர் இந்நாட்டு மக்களால் சூட்டப்பட்ட பெயர் அன்று. இந்திய மக்களால் இடப்பட்ட பெயர் "நாவலந்தேசம்" என்பதாகும். இந்த உண்மையை இன்றும் அந்தணர்கள் சமயச் சடங்குகள் தொடங்கும்பொழுது கூறும் மந்திரத் தொடரில் "சம்புத்தீவே" என்று கூறுவதனால் அறியலாம். அப்படியானால் இந்தியா என்ற பெயர் வந்தவிதம் எவ்வாறு? இந்தியா என்னும் பெயர் இப்பொழுது ஈரான் என அழைக்கப்படும் பாரசீக மக்களால் இடப்பட்ட பெயராகும். பாரசீக மொழியில் 'ச'கர வரிசை ஒலிகள் இல்லை. இதனால் சிந்துநதியை இந்து நதி என்றார்கள். சிந்து நதிக்குத் தென்பால் உள்ள நாட்டை "இந்தியா" என்றார்கள். அவர்கள் மொழியில் இல்லாத சிகர ஒலி இகரமாக மாறியதால் 'சிந்தியா' என அவர்கள் அழைக்க நினைத்ததை 'இந்தியா' என்றார்கள். இவ்வாறே சிந்து மதமும் இந்து மதமாகியது. ஆனால் இந்த நாட்டில் மக்கள் அனைவரும் ஓரினமல்லர். பல இனம், பல மொழி, பல சமயம், வெவ்வேறு நடை, உடை, உணவு, கலை கொண்ட மக்களாவர்.

இங்கு தமிழர்கள் கண்ட சமயநெறி இரண்டு. ஒன்று சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவம். இரண்டாவது திருமாலை முழுமுதலாகக்கொண்ட வைணவம். சிவன் கோயில்களிலும் திருமாலின் திருவுருவம் பரிவார மூர்த்திகளில் ஒன்றாக விளங்கும். அவ்வாறே சிவன் திருவுருவம் திருமால் கோயில்களில் பரிவார மூர்த்திகளில் ஒன்றாக விளங்கும். சைவர்கள் முடிவில் எல்லாம் வெறும் சாம்பல்தான் என்பதை உணர்த்தும் வகையில் நெற்றியில் திருநீறு அணிவார்கள். வைணவர் முடிவில் எல்லாம் மண்தான் என்பதை உணர்த்தும் வகையில் திருமண் நாமம் இடுவார்கள். இருசமயங்களுக்கும் மெய்யியல்(தத்துவம்) சித்தாந்தமே. சைவர்கள் சைவசித்தாந்தம் என்பர். வைணவர் வைணவ சித்தாந்தம் என்பர். வேதாந்தம் தமிழர்களின் மதங்களுக்கு மெய்யியல் அன்று. வேதாந்தம் என்பது அறிவின் முடிந்த முடிவு. சித்தாந்தம் என்பது சிந்தை, சிந்தனையின் முடிந்த முடிவு என்பது பொருளாகும். அறிவுக்கு முடிவுண்டா? சிந்தனைக்கு முடிவுண்டா என்பதனை ஆய்ந்து அறிய வேண்டும். சிந்தனைக்குத்தான் ஒரு முடிவு தெரியும். அறிவு காலத்துக்குக் காலம் வளரும்; வேறுபடும். எனவே இதற்கு முடிந்த முடிவு இல்லை.

திருக்கோயில் அமைத்தல், வழிபாட்டு நடைமுறைகளை விளக்குவது ஆகமங்கள் ஆகும். சைவர்களுக்கு சைவ ஆகமம், வைணவர்களுக்கு வைணவ ஆகமம் என ஆகமங்கள் உள்ளன.

தமிழர்களின் இந்த மதங்கள் பற்றிய விளக்கத்துடன் ஈழத் தமிழர்கள் அனைவரும் கடைப்பிடித்த - கடைப்பிடிக்கும் சைவ சமயம், சைவ நெறி என்பதனை சற்று சுருக்கமாக விளங்கிக்கொள்வோம். சைவ சித்தாந்தம் 'உண்மைப் பொருள்', 'என்றும் உள்ள பொருள்' என முப்பொருட்களைக் கொண்டுள்ளது. என்றுமுள்ள பொருள்களாவன: இறைவன், உயிர், தளை (பசு, பதி, பாசம்) என்பனவாகும். இந்த முப்பொருட்களில் முதன்மைப்

பொருள் 'இறைவன்' ஆகும். இது ஒன்றாகும். இறைவனை சைவர்கள் சிவன் எனக் கொள்வர். இரண்டாவது பொருள் 'உயிர்'. உயிர்கள் பலவாகும். மூன்றாவது தளை. இது மூன்றாகும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். உயிர்கள் தளைகளிலிருந்து விடுபட்டு இறைவனுடன் இரண்டறக் கலப்பதே முத்திநிலையான முடிந்த முடிவாகும். இந்த முத்திநிலையை உமாபதி சிவாச்சாரியார் 'திருவருட்பயன்' எனும் நூலில் தாள், தலை என்ற இரு சொற்கள் எவ்வாறு 'தாடலை' என ஒரு சொல்லாகியதோ அதேபோன்றதுதான் முத்திநிலை என அழகாக விளக்குகின்றார்.

உயிர்கள் வினைகளைச் செய்கின்றன. வினை என்றால் செயல் அல்லது தொழில். அச்செயல்கள் நற்செயல்கள், தீயசெயல்கள் என இருவகை. உயிர்கள் நற்செயல் செய்தால் நல்வினை, தீயசெயல் செய்தால் தீவினை. நல்வினையாயினும் தீவினையாயினும் அதுவே கன்மம் எனும் தளையாகும். இந்த வினைகளை அனுபவிப்பதற்கு உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. பிறப்பெடுத்த உயிர்கள் தம் வினையின் பயனைப் பெறுவதற்கு அண்டமும் உலகும் அதில் உள்ள நுகர்பொருட்களும் போகங்களும் படைக்கப்பட்டன. இந்த உலகும், பொருட்களும் போகங்களுமே மாயை எனும் தளையாகும். வினைகளின் பயனை அனுபவிக்கும் உயிர்கள் மேலும் வினைகளைச் செய்ய இடமுண்டு. அப்படிச் செய்யும்பொழுது மீண்டும் மீண்டும் பிறப்பு எடுக்கவேண்டியதுதான். அவ்வாறு மேலும் வினைகள் செய்யாத உயிர்கள் மாயை எனும் தளையிலிருந்து விடுபடும். பின்னர் கன்மம் எனும் தளையும் அறுபடும். இறுதியாக இருக்கும் தளை ஆணவம் ஆகும். ஆணவம் என்பது 'யான்' எனும் மமதையும் ஆகும். ஆணவத்தை நீக்க துணை உதவி வேண்டும். இந்த உதவி இறைவனின் திருவருள் (சக்தி) ஆகும். இத்திருவருள் குருவடிவாய் வந்து உயிர்களின் ஆணவம் எனும் கட்டினை அறுக்கும். ஆணவம் என்ற தளையையும் திருவருளின் துணையால் நீக்கிய உயிர்கள் பிறவா நிலையான முத்திநிலையை அடையும். இதுவே பேரின்பநிலை எனப்படும். இதுவே சைவ சமயத்தின் முடிந்த முடிவு; சைவ சித்தாந்தம் கூறும் உண்மை.

இறைவன் உயிர்களின் தளையை அறுத்து முத்தி தர ஐந்தொழில்களைச் செய்கின்றான். அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். திருக்கோயில்கள் எவையாக இருந்தபொழுதும் அங்கு நிகழும் ஆண்டு உற்சவங்களின் தத்துவம் இந்த ஐந்தொழில்களை விளக்குவதாகவே அமைந்துள்ளன. கொடியேற்றம், முதலாம் திருவிழாவாக அமையும். இதில் கொடிமரம் இறைவனாகக் கொள்ளப்படும். அதில் சுற்றிவரும் துணியும் தெற்பைக் கயிறும் உயிரையும் தளையினையும் குறிக்கும். இவை இரண்டும் கொடிமரத்தைச் சுற்றியிருந்தாலும் தெற்பைக் கயிறு கொடிமரத்தில் தொடர்புகொள்ளாமல் துணியுடனேயே தொடர்புடையதாகச் சுற்றப்பட்டிருக்கும். இது தளை உயிரினைப் பற்றுமேயன்றி இறைவனைப் பற்றாது என்ற உண்மையை விளக்குவதற்காகும். இவ்வாறு கோயில் வழிபாட்டு முறைமைகள் அனைத்துமே சித்தாந்தக் கொள்கையினை விளக்குவனவாகவே அமைந்துள்ளன.

அடுத்து பாரசீகரால் திணிக்கப்பட்ட இந்துசமயம் (சிந்து) என்ற சமயம் அல்லாத ஒன்று எவ்வாறு தமிழர்களிடம் திணிக்கப்பட்டது என்பதைப் பார்ப்போம். கிறிஸ்துவுக்கு முன் பின்னாக ஐந்து நூற்றாண்டுகள் தமிழர்களின் வரலாற்றில் இருண்ட காலம் என அழைக்கப்படுகின்றது. இந்தக் காலத்தில் இந்திய தமிழகத்தின் வடபாலிருந்து களப்பிரர் எனும் காட்டு விலங்கு ஆண்டிக் குழுமம் ஒன்று படையெடுத்து, முதலில் பாண்டிய நாட்டினையும் பின்னர் மற்ற தமிழகத்தையும் ஆக்கிரமித்தனர். இதே காலத்தில் பல்லவர் எனும் குழமம் காஞ்சியைக் கைப்பற்றி பல்லவமரபினை உருவாக்கினர். களப்பிரர்களால் புத்த சமயமும், பாளி மொழியும் மதுரையிலிருந்து பரவி ஆதிக்கம் செலுத்தியது. பல்லவர்களால் சமணசமயம் பரப்பப்பட்டு வளர்க்கப்பட்டது. இந்த இருண்ட காலத்தில்தான் சமசுகிருதம் என்ற புதிய எழுத்து மொழியும் உருவாக்கி வளர்க்கப்பட்டது. இந்த மொழி நாவலந்தேசத்தில் எந்த இனக் குழுமங்களாலும் பேசப்படாத மொழி. 'சமசுகிருதம்' என்றாலே செப்பம் செய்யப்பட்டது என்பதுதான் பொருள். களப்பிரர்களால் மதுரைத் தமிழ்ச்சங்கம் எரியூட்டப்பட்டது. பிராமணர்களால் சங்ககால நூல்கள் பல ஆடிப் பெருக்குவிழா என்ற பெயரால் ஆற்றில் போட்டு அழிக்க வகைசெய்யப்பட்டன. காளிதாசன் உருவாக்கப்பட்டதும் புனைகதை புராணங்களும் உருவாக்கப்பட்டதும் இக்காலப் பகுதியிலேதான்.

இதேகாலப் பகுதியில்தான் பிராமணர் என்ற வருணத்தாரும் உருவாக்கப்பட்டனர். பிராமணர் என்பதும் பார்ப்பனர், அந்தணர் என்பதும் வேறு வேறு. பார்ப்பனர் எனும் தமிழ் சொல்லிற்கு கற்றவர், எழுதப்படிக்கத் தெரிந்தவர் என்பதாகும். அந்தணர் என்ற தமிழ் சொல்லிற்கு 'அந்தணர் என்போர் அறவோர' எனத் திருவள்ளுவரே குறிப்பிடுகின்றார். பார்ப்பனர் கோயில் வழிபாட்டுச் செயல்கள், கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் செய்வோர். இவர்கள் கோயில் வழிபாட்டுச் செயல்களில் ஈடுபடும்பொழுது முப்புரிநூல் அணிவர். இவர்கள் மனைவி, மக்கள் எனக் குடும்பப் பிணைப்போடு வாழ்வார்கள். அந்தணர் குடும்பப் பிணைப்பு, தன்னலம் இல்லாது 'வாடிய

பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் வாக்கிற்கேற்ப தொடர்புகருதாமல் எவ்வுயிர்களுக்கும் கருணை காட்டும் அருளாளர்கள். இவர்கள் எப்பொழுதும் முப்புரிநூல் அணிந்திருப்பர் (நூல் அணிதல் தமிழர்களின் மரபேயன்றி ஆரியரின் மரபன்று. ஆரியரின் மரபாயிருந்தால் ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஆரியர்களும் அணிந்திருக்கவேண்டுமே! தாங்கள்தான் சுத்த ஆரியர் என்று முழங்கிய கிட்லரும் நூல் அணியவில்லை என்பதால் இந்த உண்மை புலப்படும். 'பிராமணர்' என்றால் பிரமனுக்கு உகந்தவர்கள் என்று பொருள்படும். எனவே, 'சமசுகிருதம்' எனும் பேசா மொழியும் பிராமணர் என்ற வர்ணத்தாரும் இந்த இருண்ட காலத்தில் மிகப் பலமாகத் திட்டமிட்டுத் திறமாக உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

இதே காலப்பகுதியில்தான் 'ஆதிசங்கரர்' எனும் பிராமணரின் தோற்றமும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது. இவர் உருவாக்கிய கோட்பாடு 'அத்வைதம்' எனப்படும். இதன்படி உண்மைப்பொருள், என்றுமுள்ள பொருள் ஒன்றேதான் என்பதாகும். பிரமம் 'ஒன்று' எனப்படும். கல்கியின் பொன்னியின் செல்வனில் ஆழ்வார்க்கடியான் என்று அழைக்கப்படும் வைணவன், சங்கரர் அடியார் ஒருவரை 'நீயும் பிரமம், நானும் பிரமம். இந்த தடியும் பிரமம், பிரமத்தைப் பிரமம் பிரமத்தால் சாத்துகிறது' என்ற கூறி அடிப்பதாக கூறப்படுவதையும் நோக்கவும். பொன்னியின் செல்வன் எழுதிய கல்கி ஒரு சுத்த சைவன். இந்தச் சங்கரரின் கோட்பாடு சைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று.

மக்கட் தொகை அதிகம் இல்லாத ஆதிகாலத்தில் மக்கள் சிறுசிறு குழுமங்களாக வாழ்ந்தார்கள். ஒவ்வொரு குழுமங்களுக்கும் ஒவ்வொரு கொடியை உருவாக்கியிருப்பார்கள். சேவற் கொடியைக் கொண்ட குழுமம் மயிற்கொடியைக் கொண்ட குழுமத்தை போரில் வென்று பகைவரின் மயிற்கொடியை தம் காலில் போட்டு மிதித்திருப்பார்கள். காலப்போக்கில் அக்குழுமத்தின் தலைவன் அக்குழுமத்தின் தெய்வம் ஆக்கப்பட்டிருப்பான். முருகன் மலைநாட்டின் தலைவன். அவன் கொடியில் சேவல் எழுதப்பட்டிருக்கும். மயிற்கொடி கொண்ட குழுமத்துடன் போராடி வென்றுதான் குழுமத்தைக் காத்திருப்பான். அவன் முருகன் எனும் தெய்வ நிலைக்கு அக்குழுமத்தால் உயர்த்தப்பட்டபொழுது அவனால் தோற்கடிக்கப்பட்டவனின் கொடியில் உள்ள மயில் முருகனின் வாகனம் ஆக்கப்பட்டிருக்கும். தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தில் பொருள் இலக்கணத்தில் கூறப்படும் ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்கள் என்பன முருகனைப்போல் உருவாகிய தெய்வங்களே ஆகும். இத்தெய்வங்கள் சைவ வைணவக் கோயில்களில் பரிவார மூர்த்திகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

வாதாபியை வென்று அந்நகரை அழித்த பல்லவ மன்னன் மாமல்லனின் தளபதியாக இருந்தவர் பரஞ்சோதி. இவர் பின்னாளில் சிவனடியாராகிச் சிறுத்தொண்டராக அறுபத்து மூவரில் ஒருவரானவர். இவரே வாதாபியிலிருந்து மரத்தாலான பிள்ளையார் சிலையை வாதாபி அரண்மனைக் கோட்டைக் கதவில் இருந்து பெயர்த்தெடுத்துவந்து தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாட்டினைத் தொடக்கிவைத்தவர். வடநாட்டில் சங்கரர் காலத்திற்கு முன்பே பிள்ளையார் வழிபாடு இருந்திருக்கவேண்டும்.

பிராமணர் ஆதிக்கத்தையும் அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட வேதத்தையும் வலுவாக நிலைநாட்டும் நோக்கமாகவே ஆதிசங்கரர் சைவம், வைணவம் என்ற தமிழர் சமயங்களுடன் சாக்தம், காணபத்தியம், செளமாரம், செளரம் எனக் குழுமங்கள் ஏற்படுத்திய தெய்வங்களுக்கும் சமய முத்திரை சூட்டி இவை எல்லாம் வேதத்தை ஏற்றுக்கெள்ளும் சமயங்கள் என்றும் அதனால் இவையெல்லாம் இந்து சமயங்களாகும் என்ற மாயத் தோற்றத்தையும் உருவாக்கினார். இவரின் கோட்பாட்டினை வைணவ மதத்தினரில் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்டனர். ஏற்றுக்கொள்ளாதவர்களில் தோன்றியவர்களே பன்னிரு ஆழ்வார்கள். ஆழ்வார்கள் தங்கள் மதக்கோட்பாட்டைக் காக்கத் தூயதமிழில் அருட்பாக்களை ஆக்கினார்கள். ஆனால், பிராமண ஆதிக்கம் அந்த தூய தமிழில் உள்ள அருட்பாக்களைத் திவ்விய பிரபந்தம் என மாற்றி அவற்றுக்கு தமிழ்மொழியில் இல்லாத ஒலிகளை இணைத்து உரை எழுதி உபதேசம்செய்து வருகின்றனர்.

சைவர்களில் பெரும்பாலோர் சங்கரரின் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், பார்ப்பனர், அந்தணர் என்போரில் இக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட சிலர் பிராமணராகத் தம்மை மாற்றிக்கொண்டனர். அவ்வாறு ஏற்றுக்கொள்ளாத பார்ப்பனர், அந்தணர் வழிவந்தவர்களில் எங்கள் சமயகுரவர் நால்வரில் திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் மூவர் அந்தணர். நால்வரில் ஒருவர் அப்பர் என அழைக்கப்படும் திருநாவுக்கரசர்.

சமயகுரவர் வழிநின்று சைவத்தைப் பேணிக்காத்த நால்வர் சந்தானகுரவர்களான மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர் என்பவர்களாவர். இவர்களின் அடிதொட்டு திருவாவடுதுறை ஆதீனம் செயற்படுகின்றது. இவர்களின் தொண்டுகளையும் மீறி சைவசமயம், இந்து சமயம் எனப் பெரும்பாலோர் மயங்க இந்திய நாட்டின்

சுதந்திரமும் பாகிஸ்தான் நாட்டின் உதயமும் வழிவகுத்தது.

ஆதிசங்கரர் காலத்தில் பலமற்று இருந்த வட அரசுகள், பாரசீகர், மொகலாயர் போன்ற பிறநாட்டவரின் படை எடுப்பிற்கு ஆளாகினர். இந்தப் படையெடுப்புகளினால் பிராமணர்களின் ஆதிக்கம் அழிந்துபோகும் என அஞ்சியவர்களில் முதன்மையானவரான ஆதிசங்கரரும் அவருடன் இணைந்தவர்களும் இந்து சமயத்தை உருவாக்கி தங்கள் பலத்தை இறுக்கமாக்க முனைந்தனர். ஏனெனில், வீரம் நிறைந்த மறவர்களான தென்னாட்டவர்கள் வெளிப் பகைவர்களின் வரவைத் தடுத்து தங்கள் நலனைக் காத்துக்கொள்ள விளைந்தனர்.

வைணவர்கள் பெரும்பாலோர் இந்துசமயக் கோட்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொண்டு திருமாலுக்கு பல அவதாரங்களைப் புனைந்தனர். சைவர்கள் ஆதீனங்கள் போன்ற அமைப்புகள் மூலமாகச் சைவத்தின் தனித்துவத்தைப் பேணிவந்தனர். இந்திய நாட்டின் சுதந்திரத்தின் பின்னர் இந்தியாவிற்கு இந்தியர் எனும் ஒருமைப்பாடு அவசியமாகிறது. பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் தாக்கத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அனைத்து இந்திய நாட்டின் ஒருமைப்பாடு வேண்டியதாயிற்று. இந்த முனைப்பு குஜராத் மாநிலத்திலிருந்து முனைப்புக்கொண்டது. இதற்கு இவர்கள் தேடிய தேர்வுதான் இந்து சமயம். காமகோடிபீட சங்கரர் வேதத்தை ஏற்றுக்கொண்ட சமயங்களை 'இந்துசமயம்' என வரையறை செய்தார். ஆனால், இன்று குஜராத்திலிருந்து எழுந்த ஒருமைப்பாட்டு இயக்கத்தால் சமணம், புத்தம் ஆகிய வேதத்தை ஏற்காத இந்திய நாட்டில் தோன்றிய சமயங்களையும் இந்துசமயம் என்பதற்குள் கொண்டுவந்துள்ளனர். தமிழர்களின் தனித்துவத்தை தமிழ்மொழியின் தூய்மையை அதன் சிறப்பை சிதைக்கவென்று வீறுகொண்ட வெளியில் பெயர் தெரியாத வலிய இயக்கம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. பிராமணர் ஆதிக்கத்தில் உள்ள ஊடகங்கள் அனைத்தும் இந்தப் பணியை ஊக்கமாகத் தம்மை வெளிக்காட்டாமல் செய்து வருகின்றன. இந்தியா என்ற ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அது அவர்களுக்கு வேண்டியதாய் இருக்கலாம். அமெரிக்காவில் அதன் சொந்தக்காரர்களான செவ்விந்தியர்களிடமிருந்து அமெரிக்காவை ஆக்கிரமிப்பதற்கு ஐரோப்பியர் 'எதிர்த்து அழி' எனும் முறையைக் கையாண்டனர்; இந்தியாவில் அதன் உரிமையாளர்களான தமிழர்களை 'அடுத்துக் கெடு' என்ற வழியில் ஆரியர் ஒழித்தனர்.

இலங்கையில் என்றும் சைவசமயமே இருந்தது. வைணவ சமயம் இங்கு இல்லை. திருமால்கோயில்கள் பல இங்கு இருந்தபோதும் நெற்றியில் நாமம்போடும் வைணவர் இங்கு இல்லை. இக்கோயில்களில் திருநீறு, சந்தனம், குங்குமங்களே என்றும் வழங்கப்பட்டுவருகிறது. இங்கு வைணவம் இல்லை என்ற உண்மையை வலியுறுத்தும் சான்றாக திருவரங்கத்தில் பள்ளிகொள்ளும் திருவரங்கன் தென்திசையை(ஈழத்தை)ப் பார்த்தவண்ணம் பள்ளிகொள்வதாகக் கூறப்படும் மரபினால் அறியலாம். மேலும், இலங்கையின் சுதந்திரத்தின் போது வாழ்த்துப்பாடிய யோகி சுத்தானந்த பாரதியாரும் "எங்களின் பொன்னிலங்கை வாழ்கவே காலை.." எனத் தொடங்கி

"தென்கடலின் மார்பகத்திலே - பூத்த
செழுந்திருக் கமலம் போன்றதே
பொங்கு புத்த சைவ நன்மணம் - வீசிப்
பொலிக நல்லபோக நாடிதே"

எனப் பாடி வாழ்த்தியுள்ளார். இலங்கையில் பெரும்பான்மையினரில் பெரும்பான்மையோர் புத்தமதத்தையும், சிறுபான்மையினரில் பெரும்பான்மையோர் சைவத்தையும் பின்பற்றுவதனால் இவ்வாறு பாடியுள்ளார். மதத்தால் சிறுபான்மையினரான கிறித்தவ மதத்தையும் இசுலாம் மதத்தையும் குறிப்பிடாமல் விட்டுவிட்டார். இலங்கைக் கல்வியில் ஐம்பது அறுபதுகள் வரை சைவசமயமும் சைவசித்தாந்தக் கொள்கைகளுமே இடம்பெற்றன. அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து கல்வித்துறையின் உயர்மட்டத்திலும் பல்கலைக்கழகங்களிலும் பிராமண ஆதிக்கம் பரவத் தொடங்கியதால் சைவம் இந்துவாகவும் சைவ நாகரிகம் இந்து நாகரிகமாகவும் மாற்றமடைந்தது. மேலும் இந்தியாவில் இருந்து இங்குவந்து குவிந்த பிராமணப் பத்திரிகைகளும் வார, மாத வெளியீடுகளும் இதனை மேலும் ஊக்குவித்தன. குறுகியகாலத்தில் பிரபலங்களாக மாறுவதற்கு விரும்பியவர்களும் இலகுவில் புகழும் பெயரும் பெற ஆர்வம் கொண்டவர்களும் இலக்கியத்தை மத நூலாக்கி கதாபாத்திரங்களை தெய்வங்களாக்கியும், சைவசமயம் என்பதை இந்துசமயம் என மாற்றியும் வருகின்றார்கள். இந்த உண்மையை உணர்ந்து சாதி வர்ண பேதம் இல்லாத, வலியுறுத்தாத உயர்ந்த சைவசித்தாந்தக் கொள்கைகளைக் கொண்ட சைவ சமயமே ஈழத்தமிழரில் பெரும்பான்மையினர் பின்பற்றும் சமயமாகும் என்றும் நாம் இந்துக்கள் அல்லர் - நாம் சைவர்கள் என்றும் உரத்துக் கூவிப் பெருமிதங் கொள்வோம்.

☑

# உடல், உள நோய்களை அகற்றும் ஆலய வழிபாடு

சமூகஜோதி கா.கணேசதாசன்

மருத்துவர்கள் நோய்களைப் போக்குவதுபோல் சைவக் கோயில்களும் மக்களின் உடல், மன நோய்களைப் போக்குகின்றன. மனிதனின் உடலும் உள்ளமும் சரியாக இருந்தால்தான் எச்செயலையும் செவ்வையாக செய்ய முடியும். திருமூலர் இக்கருத்தினை திருமந்திரத்தில்,

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் பேசவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”

எனக் கூறுகிறார். இறைவனையும் மருத்துவராகக் கொண்டு வைத்தீஸ்வரன், மருந்தீசன் போன்ற பெயர்களையும் முன்னோர் சூட்டி மகிழ்ந்தனர்.

கோயில் வழிபாட்டை நோக்கின் உண்மையான பக்தர்கள் தினம் ஆலயம் சென்று சுவாமி வழிபாடு செய்வதை முறையாகக் கொண்டுள்ளனர். இதனால் அதிகாலையிலோ அல்லது மாலை நேரத்திலோ வழிபடச் செல்கின்ற மக்கள் நடக்கின்றபோது உடல் தசைகள் நன்கு இயக்கப்படுகின்றன. மேலும் அதிகமாக உயிர்க் காற்றாகிய பிராண வாயுவை ஏற்றுப் பயனடைகின்றனர். அத்துடன் அதிகாலையில் செல்கின்றபோது ஓசோன் என்னும் உயிர்க்காற்று அதிகம் பரவியிருப்பதால் சுவாசிக்கின்றவர்களது குருதியோட்டம் சிறப்புற நடக்கின்றது. அத்துடன் கோவில் பிராகாரங்களைச் சுற்றிவருவதும், ஆண்கள் செய்யும் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் செய்யும் பஞ்சாங்க நமஸ்காரமும் உடலுக்கு நல்ல பயிற்சியைக் கொடுக்கின்றன. இதனால் நல்ல ஆரோக்கியம், நிம்மதி, அமைதி, சாந்தி பெறுகின்றார்கள். இவர்களின் மனத்திலும் உடலிலும் உற்சாகமும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டு வேலையைத் திறம்படச் செய்வதற்கு உதவுகின்றது. இக்காலத்தில் உடல்நலம் விரும்பி யோகாசனம் மற்றும் உடற்பயிற்சிகள் செய்துவருவதைப்போல் இவை அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

மேலும், கருவறையில் திருவுருவம் பிரதிஷ்டை செய்கின்றபோது எல்லாவிதமான மருந்துப் பொருட்களையும் சேர்த்து இடித்து பீடத்தின் மேற்பக்கமாகப் பள்ளம் அமைத்து அதனுள் இட்டு, பின்பு திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்கின்றனர். அதற்கு அஷ்டபந்தனம் என்று பெயர். அதில் சேரும் மருந்துப் பொருட்கள் வருமாறு:

கொம்பரக்கு, சுக்கான்தூள், குங்குலியம், கற்காலி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, வெண்ணெய் என்பனவாம். இந்த எட்டு விதமான பொருட்கள் கீழ்க்கண்ட பலன்களை மனிதருக்கு அளிக்கின்றன:

கொம்பரக்கு – குருதி அனல்நோய், இளைப்பு, அடிபட்ட புண், உடல்வலி, சுரம் முதலியவற்றை நீக்குவதோடு மார்புக்கு வலிமையையும் கொடுக்கிறது.

சுக்கான் தூள் - உணவைச் செரிப்பிக்கும். பல்லுக்கு உரத்தைக் கொடுக்கும். வாதம், சரும நோய்களை நீக்கும்.

குங்குலியம் - சருமநோய்கள், புண், மேகரோகம் இவற்றைப் போக்கும்.

கற்காலி – கண்ணோய், மேகரோகம், தீராப் புண்கள், வாந்தி, பித்தம் ஆகிய நோய்களும் பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடும் நீங்கும்.

செம்பஞ்சு – புண்களை அகற்றும் தன்மை உண்டு. நீரிழிவு போகும்.

தேன்மெழுகு – பக்கவாதம், வீக்கம், இருமல், சருமநோய், மேகரோகம் தீரும். வெட்டுக்காயங்களுக்கு இதைக்கொண்டு செய்யப்பட்ட தைலம் நல்ல பயன் தருகிறது.

வெண்ணெய் - கண்ணோய், கண்ணெரிச்சல், பீளைசாறல் என்பன தீரும்.

சாதிப்பஞ்சு – கழிச்சல், சுரம், தீராப் புண்கள், சந்திநோய் போகும்.

இம்மருந்துப் பொருட்கள் சிலையை இறுக்கமாகப் பிடித்துக்கொள்வதுடன் பீடத்துடன் சிலைக்கு இடையில் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும். பால், நெய், தயிர், இளநீர், தேன், வெண்ணெய் போன்ற பொருட்களைக் கொண்டு இறை திருவுருவங்களை அபிஷேகம் செய்கின்றபோது மருத்துவக் குணங்கள் அடங்கிய அப்பொருட்களோடு பீடத்திலிருக்கின்ற எட்டுவித மருந்துகளின் சத்தும் கலந்தே தீர்த்தமாக வெளிவருகின்றன. எனவேதான் அதை இறைவன் பெயரால் ஏற்று நம்பிக்கையுடன் அருந்துகின்றோம். அதனால் பல நோய்கள் தீருகின்றன. அத்துடன் அபிஷேகம் செய்த பஞ்சாமிருதத்தை அருந்தும்போதும் நோய்கள் தீரும். ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு விதமான பிரசாதம் வழங்கப்படுகிறது. சிவன் கோயிலில் வில்வமும், பெருமாள் கோயிலில் துளசியும் அம்மன் கோயிலில் வேப்பமிலையும் மஞ்சளும், பிள்ளையார் கோயில்களில் அறுகம்புல்லும் வழங்கப்படுகின்றன.

மருத்துவக் குணம் பொருந்திய மூலிகைகள் நெய், கற்பூரம், தேன் முதலியன இட்டு எரிகின்றபோது வருகின்ற புகைமண்டலம் வெளியிற்சென்று மக்கள் சுவாசிக்கின்றபோது நோய் பரவாமல் தடுக்கின்றது. குறிப்பாக இரைப்பு, இழுப்பு, இருமல் மற்றும் நோயாளிகள் யாகத்தில் கலந்துகொண்டால் நோயின் கொடுமை மிகவும் தணிகிறது. அத்துடன் இறை நம்பிக்கையின் காரணமாக நோய் முற்றுமுழுதாகப் போய்விடுகின்றது என்பதும் உண்மையாகும்.

கோயில்களில் வருடத்தில் ஒவ்வொரு காலத்திலும் எடுக்கப்படும் ஒவ்வொரு விழாவும் மக்களை நோயினின்றும பாதுகாக்கின்றது. ஒவ்வொரு பருவகாலம் மாறும்போதும் வெப்ப தட்ப நிலைகள் மாறுகின்றன. உதாரணமாக சித்திரை மாதம் இளவேனிற் காலம். எனவே வெப்பத்தைத் தணிப்பதற்கு இறைவனை வேண்டியும், கோயில்களில் நீர், மோர் கொடுத்தும், பந்தலிட்டும், நீர் தெளித்தும் வெப்பத்தைத் தணிக்கின்றார்கள். அடுத்து, ஆடி மாத்தில் காற்றுடன் வெயிலும் சிறிது மழைத் தூறலும் இருப்பதால் பூமியில் அதிக வெப்பத்தைக் கிளப்புகின்றது. அதே செயல்தான் எமது உடலிலும் ஏற்பட்டு "அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது" என்பதற்கிணங்க உடலிலும் அம்மை நோய்களைத் தோற்றுவிக்கின்றது. அதைத் தணிக்கும்பொருட்டு மாரியம்மன் திருவிழா கொண்டாடப்படுகிறது. திருவிழாக் கொண்டாடுமுன் கொடியேற்றி 15 நாட்கள் சாற்றுமுறை செய்வது வழக்கம். அது ஏனெனில், இச்சமயத்தில் அவ்வூரவர்கள் எங்கும் வெளியே செல்லமாட்டார்கள். இது நோயாளர் வெளியே சென்று நோயைப் பரவாமல் தடுக்கும் வழியாகும். இக்காலங்களில் அம்மனுக்கு மஞ்சள், வேப்பிலை, அறுகம்புல் கலந்த நீர்கொண்டு முழுக்காட்டுவது வழக்கம். அதையே மக்களும் பிரசாதமாக ஏற்று அருந்தியும், குளியலுக்காகவும் பயன்படுத்துகின்றனர். அது நோயை வராமல் தடுக்கவும் வந்த நோயைத் தடுக்கவும் உதவுகின்றது. இக்காலத்தில் நீர்மோர், கம்பங்கூழ், இளநீர் போன்ற மருத்துவப் பொருட்களை ஏற்கின்றனர். மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி, பின்னர் கோயிலுக்கும் போய் வழிபாடு செய்கின்றர். திருவெம்பாவை நோன்பு நாட்களில் வைகறையில் துயிலெழுந்து நீராடி இறைவனை வழிபட்டால் நினைத்ததெல்லாம் கைகூடும் என்று சமயப் பெரியோர் கூறியுள்ளனர்.

இது போன்று ஆறு பருவகாலங்களிலும் கோயில்களில் விழாக்கள் எடுத்து மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர். வருடத்தில் ஆறு பருவகாலங்களும் பின்வருமாறு அமைகின்றன. கார்காலம்: ஆவணி, புரட்டாதி. கூதிர்காலம்: ஐப்பசி, கார்த்திகை. முன்பனிக்காலம்: மார்கழி. தை. பின்பனிக்காலம்: மாசி, பங்குனி. இளவேனிற்காலம்: சித்திரை, வைகாசி. முதுவேனிற்காலம்: ஆனி, ஆடி. இக்காலகட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமான மனநோயாளியாக இருக்கிறான். எடுத்துக்காட்டாக மாணவனாக இருப்பவன் பரீட்சையில் வெற்றிபெறவேண்டும் என எண்ணியும், திருமணம் ஆகாதவர்கள் திருமணம் ஆகவேண்டுமென்ற ஆசையுடனும் பிள்ளையில்லாதபோது பிள்ளை இல்லை என்ற ஏக்கத்துடனும், பிள்ளைப்பேற்றை அதிகம் உடையவர்கள் குடும்பப் பாரத்தை அதிகம் சுமப்பதிலேயே அலுப்புத் தோன்றியும், வயோதிபர்கள் இறைவனை அடையவேண்டும் என எண்ணியும் கவலையுடன் வந்து கூடும் இடம் ஆலயம் ஆகும். இவர்கள் கோயிலை வந்தடையும்போது மனச்சுமையுடன் வருகின்றனர். இறைவனை வழிபடும்போது மனச்சுமையை இறக்குகிறார்கள். இறைவனை வழிபட்டபின் மண்டபத்திலோ கேணிப் படிகளிலோ அமர்ந்து மற்றவர்களைப் பார்க்கும்போது தங்களுக்கு உள்ள மனக்குறை மற்றவர்களை விடக் குறைவு என்பதால் மனநிறைவு ஏற்படுகின்றது. மேலும், அப்பேச்சினால் மனச்சிக்கல்களுக்குத் தீர்ப்பும் பிறக்கிறது. மன உழைச்சலில் இருந்து விடுபடுகின்றனர். கோயில்களுக்கு வருகை தருவதால் உடல் நோயைப் போக்கிக்கொள்வதோடு, மன நோவையும் போக்கிக்கொள்கிறார்கள்.

கோவில் இருப்பிடம், அதன் வடிவமைப்பு, ஆராதனை, அபிஷேகம் அத்தனையும் மனிதன் உளநலம், உடல் நலம் பெறவேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டுதான் அமைக்கப்பெற்றுள்ளன. எனவே, ஆரோக்கியம், நிம்மதி, அமைதி இவற்றின் ஊற்றாகத் திகழும் கோயிலும் ஒரு மருந்தகமே என்று கூறுதல் பொருத்தமாகும்.

ஓம்

# இந்து மத சேவை

திருமணம், பதிவுத் திருமணம், புண்ணியா வாசகம்,
புதுமனைப் புகுவிழா, புதுக் கடைத் திறப்பு விழா,
விவாகப் பொருத்தம் பார்த்தல்,
இறுதிக் கிரியைகள், அந்தியேட்டி,
மற்றும் அனைத்து இந்து மதச் சேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.


**சைவச் சிவாச்சாரியார், சைவ கிரியாபூஷணம்**
**திருமணப் பதிவாளர்**
**ச.திருஞானசம்பந்தக் குருக்கள் B.A.**

**Tel: 416 535 1491**
**769 lansdowne Ave., Toronto M6H 3Z1**

# ப்ருந்தகானாலயா இசைக் கல்லூரி



சங்கீத வகுப்புக்கள்




வாய்ப்பாட்டு வயலின், வீணை ....
கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் முறையாகக்
கற்பிக்கப்படுகிறது.

வருடாந்தம் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
**Practical and theory preparing for Exams and performance**

ஆசிரியர்:
உலகப் புகழ்பெற்ற மாபெரும் இசைமேதை மாவிட்டபுரம்
N.S.உருத்திராபதி அவர்களின் பேத்தியும்,
கலாபூஷணம், ஆசிரியர் இராஜாமணி சிங்கராஜாவின் மகளுமாகிய
ஹம்சத்வனி ஜெயந்திரன்

தொடர்புகளுக்கு:
Tel: 416 244 8250

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
**Scarborough, Toronto, Mississaugh**




From Our Family To Yours, Wishing You The Best For 2009!

# VIVEKA

• PRINTING • DESIGN • MARKETING • MAILING • SIGNS • WEB •

## YOUR FULL SERVICE PRINT PROVIDER

*With over 60 Years of Printing Excellence, we are the defined and proven source for Quality, Service and Pricing. Our scales of production, coupled with our top-of-the-line equipment, and excellent customer service, enables us to meet your demands in all aspects of the graphics and printing industry.*

**BEST QUALITY**

**GREAT PRICES**


**AMAZING SERVICE**

***We Now Also Offer The Following Services:***

*~ Full Color Graphics Design*
*~ Advertising Animation*
*~ Website Design & Hosting*
*~ Wide-Format & Banner Prints*
*~ Marketing & Mailing Services*
*~ Banner Stands & Stationary*

**VIVEKA PRINTERS**
*a subsidiary of Viveka Group Inc.*

**1911 Kennedy Rd,**
**Suite 100**
**Scarborough, ON**
**M1P 2L9**




Come Check Out Our Newest Sales Location!

**Tel: 416-80 PRINT**
**416-80 77468**

URL: http://www.viveka.com
E-mail: info@viveka com

# நன்றிக் கலசம்

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகுக!

"நன்றி மறப்பது நன்றன்று" என்பது வள்ளுவர் வாக்கு.

* 2009ஆம் ஆண்டு "சைவநீதி" புதுமையுடனும், பொலிவுடனும் மலர, தரமான கட்டுரைகள், கவிதைகள் தந்துதவிய பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும்;
* வருடாவருடம் புதிய புதிய அட்டைப் படங்களை அழகுற வடிவமைத்துத்தரும் சித்திரத்தில் கைதேர்ந்த எமது நிர்வாக உறுப்பினர் கண்ணன் அவர்களுக்கும்,
* மிகக் குறுகிய காலத்தில் அச்சுக் கோத்துத் தந்த திருமதி கௌரி சதானந்தன் அவர்கட்கும்,
* புத்தக வடிவில் உருப்பெற வைத்த விவேகா அச்சகத்தினருக்கும்,
* சைவநீதி மலரின் செலவினங்களுக்கு உதவிசெய்யும் முகமாக விளம்பரங்கள் தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும்;
* சைவநீதி மலர பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் இந்துமாமன்ற உறுப்பினர்களுக்கும்,
* தாயகத்திலிருந்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் கட்டுரைகளை எழுதியும், சேகரித்தும் உரிய நேரத்தில் அனுப்பிவைத்தவர்களுக்கும்;
* சைவநீதியை வாங்கி, வாசித்து மகிழும் வாசகர்களுக்கும், வாசக வட்ட ஆய்வினருக்கும்,
* மற்றும் மன்ற வளர்ச்சி விரும்பும் அனைவருக்கும் -

எங்கள் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும்!

"நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

வணக்கம்.

**சைவநீதி - இந்து மாமன்றம்**
**2009 தை.**




## காப்புறுதி உங்களுக்காகவும் உங்களின் அன்புக்குரியவர்களுக்காகவும்..

- ஆயுட்காப்புறுதி
  சேமிப்புடன் கூடியது, 10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்திமுடிக்கலாம்
- மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
  வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்படவரும் இணைந்து கொள்ளலாம்.
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
  2 மில்லியன் வரை காப்புறுதித் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம்.
  அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம்
  20 வீத அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்


6473403319

# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407




INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LILAND INSURANCE INC.

RBC Insurance

diai Media Creations

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



சர்க்கரைப் பொங்கல் இனிதே பொங்கட்டும்!

# யசோ சின்னத்துரை

**கனடிய சட்டத்தரணி**



**2100 ELLSMERE ROAD, SUITE 202**
**(MARKHAM & ELLSMERE)**
**SCARBOROUGH,ON M1H 3B7**

**Tel: 416 265 3456**
**Fax: 416 265 2770**

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க ! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க !!
வாழிய ! வையகம்

# Rainbow Village Dental Office | Main Square Dental Office

## சகல பல் வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற உங்கள் நம்பிக்கைகுரிய

## டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

## DR. A. Shan Shanmugavadivel

General Dentistry including

- ORTHODONTICS
- IMPLANT DENTISTRY
- ROOT CANAL THERAPY
- WISDOM TOOTH EXTRACTIONS
- CEREC CROWNS & INLAYS



திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

**Tel: (416) 266-5161**
**Rainbow Village Dental Office**
2466 Eglinton Ave. East, Unit 7
Scarborough, Ontario M1K 5J8
(near Kennedy Subway)

**Tel: (416) 690-0121**
**Main Square Dental Office**
2575 Danforth Ave.
Toronto, Ontario M4C 1L5
(near Main Subway)

Printed by Viveka Printers